www.padippakam.com

Judo

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20 ரூபா 12/00

ஆக. 15-21,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 322

## புலிகளின் தாக்குதல் பட்டியல்

## நீலனின் மறுபக்க உண்மைகள்





## இயக்குநரின் அனுபவங்கள்

## மணலாற்றுச் சமர்

www.padippakam.com

# முரசம்

## மறு தாக்கங்கள்

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

தமிழ் பேசும் மக்கள்
தங்களுக்குரிய உரிமைகளை
கேட்கும் போதெல்லாம்,
தமது உரிமையில் பங்கு
கேட்பதாகவே
பேரினவாதிகள் குதிக்கின்றனர்!

ஏதோ தமது கருணையால்
தமிழ் பேசும் தரப்புக்கு
போடுகின்ற பிச்சையாக
உரிமை வழங்கலை
நினைத்துக் கொள்கின்றனர்!

இன்று, ஆட்சியாளரும்
படையினரும்கூட
அத்தகைய நிலைப்பாட்டிலேயே
இருக்கின்றனர் போலுள்ளது!

வடக்கு-கிழக்கில்
இராணுவத் தீர்வு முனைப்பால்
முன்னெப்போதும் இல்லாதளவு
அகதிகள் தொகை அதிகமாகியுள்ளது!

வன்னியில் அருமையான
விவசாய நிலங்கள்
படை நகர்வால்
பாழ்பட்டுப் போயுள்ளன!

தங்கள் உழைப்பை நம்பி
சொந்தக்காலில் நின்றவர்களை
நிவாரணம் தேடவைத்தது
இராணுவத் தீர்வு நகர்வுகள்தான்!

இவ்வாறு மக்களை
அகதிகளாக்கிவிட்டு
பொருளாதார முற்றுகையை
மேற்கொள்வதும்,
உணவு அனுப்ப நிபந்தனைகள்
விதிப்பதும் வழக்கமாகிவிட்டது!

தாம் நினைத்தால்
நிவாரணங்களை நிறுத்த முடியும்.
மனது வைத்தால்தான்
நிவாரணத்தை வழங்க முடியும்
என்று தமிழ் மக்களுக்கு
வீம்பு காட்டுகிறார்களா?

நிவாரணமும், உதவிகளும்
ஏதோ தாம் செய்யும்
தர்ம காரியம் போன்றும்,
இரங்கி வழங்கும் பிச்சையென்றும்
சம்பந்தப்பட்டோர் நினைக்கிறார்களா?

தமிழ் பேசும் அகதிகளுக்கு
வழங்கப்படும் நிவாரணத்துக்காக
வெளிநாடுகளில் இருந்து
ஏராளமான உதவி வருகிறது!

வடக்கு-கிழக்கு
அபிவிருத்திக்கு என்று கூறி
பெரும் நிதிகள்
உதவியாக பெறப்பட்டுள்ளன!

அது மட்டுமன்றி,
தமிழ் மக்கள்
தங்கள் தலைவிதியை
தாமே தீர்மானிக்கும் உரிமையை
நாடி நிற்கிறார்கள்!

அந்த உரிமையை
ஆட்சியாளர்கள் அங்கீகரித்தால்
கொழும்பிலிருந்து
உணவுக் கப்பலோ
உணவு லொறிகளோ
அனுப்பும் அவசியமிருக்காதே!

நாடு முழுக்க
தமது அதிகாரத்தின்கீழ்
சிங்கக் கொடியின் கீழ்
இருக்க வேண்டுமென்பதே
ஆட்சியாளரின் கொள்கை!

அவ்வாறான கொள்கையை
கைவிடாதவரை,
தமிழ் மக்களை தமது
தலைவிதியை நிர்ணயிக்க விடாதவரை,
அவர்களுக்கான அத்தியாவசிய சேவைகளை
ஸ்ரீலங்கா அரசுதான்
வழங்கியாக வேண்டும்!

இலங்கைத் தீவு முழுவதும்
தமது ஆளுகையில் இருப்பதாக
உலகுக்கு கூறி
பெற்று வரும் உதவிகளை
வடக்கு-கிழக்கு மக்களுக்கு
வழங்கியாக வேண்டும்!

இது பிச்சையுமல்ல,
தர்ம காரியமுமல்ல!
ஆட்சியில் உள்ளோரின்
கடமை!

இதனை செய்வதற்கு
தயாராக இல்லையெனில்
உலகுக்கு அறிவிக்கப்படும்.
உதவிகள் நேராக
வடக்கு-கிழக்குக்கு போகும்!

அதற்கு அரசு
தயாரா?
தயாரில்லாதபோது
தனது கடமையை
செய்தே ஆகவேண்டும்!

தமிழ் பேசும் மக்கள்
யாருடைய உரிமையிலும்
பங்கு கேட்கவில்லை!

தமது பிறப்புரிமையை
நாடி நிற்கிறார்கள்!

அன்றாட தேவைகளுக்காகவும்
யாரிடமும் கையேந்தவில்லை.

அரசு செய்ய வேண்டிய
கடமையை செய்யுமாறுதான்
கேட்கிறார்கள்!

'வாழு, வாழவிடு'
என்பதுதான்
தமிழ் பேசும் தரப்பின்
நியாயமான நிலைப்பாடு!

'உங்கள் தலைவிதியை
நீங்கள் தீர்மானிக்கவும் விடோம்,
உங்களை வாழவும் விடோம்!'
என்று பொருளாதார முற்றுகைகள்
மூலமாக கூறாது கூறினால்
மறுதாக்கமும் எழத்தான் செய்யும்!

அத் தாக்கம்
கடும் போராகவும் விரியலாம்,
கரும்புலிகளாகவும் விளையலாம்!

இதனை நன்குணர்ந்து
நேரான வழியில்
சீரான தீர்வுக்காணும்
வழிவகைகளை ஆட்சியாளர்கள்
உருவாக்குவதே நல்லது!
வீண் வீம்புகள்
நாட்டு நலனுக்கு ஏற்றதல்ல!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

## ஆன்மீகம்



### பக்தி

பக்தி என்பது இறைவனிடத்தில் கொள்வது மட்டும் அல்ல. மனிதர்களாகிய நாம் அனைவரிடத்திலும் பக்தியை ஏற்படுத்த வேண்டும். அதுவும் எல்லா உயிர்களிடத்திலும் நாம் பக்தி செய்தல் வேண்டும். எனவே மனிதனுக்கு பக்தி என்பது இன்றியமையாததொன்று.

அதாவது அன்பு என்பதே பக்தி வளர்ந்திட பெரும் துணை புரிகிறது. இதனால் அன்பு-கருணை என்பவையே பக்தியின் அம்சங்களாகும். இவற்றுடன் கலந்த பக்தியானது பாவச் செயல்களை வெறுப்படைய வைக்கிறது. இதனால் பக்தி கொண்ட நாம் பாவச் செயல்களில் இருந்தும் தப்பித்துக்கொள்ள முடிகிறது. பாவம் என்பதே பக்தி கொண்ட மனிதர்களுக்குமோ ஆகாத செயல்.

எனவே பக்தியின் முக்கிய பங்கு மனிதனை நல்லவனாக-உயர்ந்தவனாக வாழ வழி காட்டுவதேயாகும். பக்தி என்பதே மனிதர்களிடையே பண்பையும் வளர்த்திட உறுதுணையானது.

மொத்தத்தில் மானிட வாழ்வில் பக்தியே மனிதனை மனிதனாக வாழ வைப்பதாகும்.

ஆறுமுகம்-தங்கரத்தினம், காரைநகர்.

### அறியாமை தரும் அழிவு

அறியாமையோடு செய்யப்படும் இறை வழிபாட்டில் இறைவனை எவ்வளவுதான் புகழ்ந்தாலும் அதைவிட அதிகமாக தீமையே இருக்கிறது.

முட்டாளுக்கு எந்த அறிவையும் சொல்லாதே! அவன் அவற்றை மதிக்கமாட்டான் என்பது மட்டுமல்ல, உன்னையே கேலியும் கிண்டலும் செய்ய ஆரம்பித்துவிடுவான். (நபி சுலைமான் (அலை))

ஒருவனின் திறமையினால் உணவு கிடைப்பதல்ல என்பதை அறிவுள்ளவன் உணருவதற்காகவே முட்டாளுக்கும் நான் உணவு தருகிறேன் என்று இறைவன் என்னிடம் கூறினான். கற்றபடி நடக்காதவன் நிலத்தை உழுதுவிட்டு விதைக்காதவன் போல் ஆவான். (மூஸா (அலை))

இறைவழியில் நட, உன்னுள் இருக்கும் சுயநல இச்சை அனைத்தையும் நீ வெல்வாய்! சத்தியத்திற்கு மட்டும் கட்டுப்படு! அது உன்னை சிங்கமாக்கும். முஸ்லிம் முட்டாளாக இருக்க மாட்டான். முட்டாள் முஸ்லிமாக இருக்க மாட்டான். (அல்லாமா இக்பால்)

இரவு முழுவதும் ஒருவன் வணங்குவதைவிட மார்க்க சட்ட திட்டங்கள் தெரிந்து கொள்வதே உயர்வானதாகும். பேசும் வார்த்தையிலும் செயலிலும் அல்லாஹ்வின் வழியிலேயே இருக்கின்ற குணம் படைத்தவரே உண்மையான அறிவாளி. (திரு நபி (ஸல்))

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-6.

## கவிதைப் போட்டி இல. 319

### பரிசுக்குரிய கவிதை

#### எப்படி?

**கடலுக்குப் போவதெனின்**
**கச்சையுடன் போவென்றால்-**
**என்னில்**
**கிடப்பதோ ஒரு துண்டு**
**கிழிப்பது எப்படியோ?**

ச. மகாலிங்கம்- வெலிமடை குரூப்,
வெலிமடை.



**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

#### காலமிது

மிதந்து வரும்
பிணங்களிடை,
வலை சுமந்து வர
மீன்கள் இல்லை!

தெ. லோஜனா-
கொழும்பு-15

#### அவசிய ஆவணம்

கரையிலே வலைபோட்டு
கஞ்சல்கள் சேர்க்கிறேன்,
நடுக்கடல் செல்லக்
கோவணம் வேண்டுமாம்...!

அ. சஜீந்தன்-வவுனியா.

#### மீனா!

மீன் கிடைக்கவில்லை
'மீனா' கிடைத்துவிட்டாள்!

கயல் வண்ணன்- வவுனியா.

#### (அதிகார) அறை கூவல்

வந்தேறு குடிகளென்று
வாய்தவறி கூறிவிட்டோம்.
தமிழனே! நீ ஆதிகுடிதான்-ஆகவே
ஆடைகளைந்து பாதிமனிதனாகிவிடு
என்றோர் கூவல் திரும்பிப்பார்!

தமிழன்பன்- எட்டியாந்தோட்டை.

#### ஆதங்கம்

"தமிழ்க் கட்சிகள் சுய இச்சைகளைத்
துச்சமாக எண்ணும்வரை;
தமிழ் மீனவர்களைக் கச்சையின்றியும்
கடலுக்கனுப்பத் தயங்காது அரசு!"

ரவீந்திரநாத் அரவிந்தன்- அரைக்கரைப்பற்று-08.

#### வெட்கம்

மீனவன் நான் தலைகுனிவது
கோவணத்தோடு நிற்பதற்காகவல்ல.
கோபமே இல்லாது கோவணத்தை,
அங்கீகரித்த நம் தலைவர்களை எண்ணி!

இதயநிலா- ஆரையம்பதி.

#### யார் தவறு?

பட்டம் பதவிக்குப் பல்லிளித்து
குட்டக் குட்ட குனிவது தான்-
இன்று
கட்டு மரமேறி கடலோடும் போது
கட்டும் வேட்டிக்கும்
கட்டுப்பாடோ!

சி.மு. சுந்தரேசன்-மஸ்கெலியா.

#### ஜனநாயக நாடு!

வாக்குப் பிச்சையிட்டவர்
கோவணத்துடன்!
கைகூப்பி
பதவி பெற்றவர்
கோட்டுச் சூட்டுடன்!

எஸ். ராஜ்கண்ணா-இரத்மலானை.

#### கச்சை கட்டு

கச்சிதமாய் மீன் பிடிக்க
'கச்சை'தான் நல்லதென்று-'டமில்'
கட்சிகளின் அறிக்கையொன்று
கங்கணம் கட்டிவரும்!

திருமலையூர் தம்பி.

## கவிதைப் போட்டி இல.322



*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 21.08.1999*

**முகவரி:** கவிதைப் போட்டி இல.322
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

#### பயனில்லா கோ(வே)ஷங்கள்

மே தின கோஷங்களும்
சுலோக அட்டைகளும்
வருடா வருடம் தேர்த்
திருவிழாவிற்கு
கட்டும் பட்டு வேட்டியாச்சு
கேட்ட உரிமையெல்லாம்
கோவணம் வரை வந்தாச்சு!

ம. திருவரசுராசா-வவுனியா.

#### கோவணச் சட்டம்

"வலையில் துள்ளும் மீன்பார்த்து
உலையில் சோற்றை நினைக்கிறாயா?
அலை கடலில் மீன்பிடிக்க,
ஆட்சியினர் போட்ட சட்டம்
ஆண்டியான உன்னைக்
கோவணாண்டியாக்கப் போகும்
கோலமதை எண்ணிப்பார்!"

செல்வி மதுரா யோகேந்திரன்- 'யோகவாரா'-
திருக்கோவில்.

## வாசக(ர்)சாலை

*வாழ்க தமிழ்க் கட்சிகள்*
*வளர்க அவர் புகழ்*
*போராடிக் கண்ட பலன்*
*என்ன என்று*
*இக் கட்சித் தலைவர்கள்*
*கேட்டார்கள்?*
*போராடாது கண்ட*
*பயன் என்ன?*
*கோவணத்தோடு*
*அடிமைகளானோம்!*
*இந்த நிலை தொடர*
*தகட்சிகளின் பணி ஓங்குக!*

வி. மரியதாஸ்-யாழ்ப்பாணம்.

### பிள்ளையையும் கிள்ளி

முரசே!

ஆட்சியாளரை சட்டரீதியான வழிகள் ஊடாகக்கூட எதிர்த்துப் போராட தமிழ்க் கட்சிகள் தயாராக இல்லை. பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவது போல, அரசையும் ஆதரித்தபடி, தமிழ் மக்களது துயரங்களைப் பற்றி இக் கட்சிகள் பேசுவது ஏமாற்றுவித்தையன்றி வேறில்லை.

ம. ஆதித்தியன், மட்டக்களப்பு.



### இன அவமானம்

1983 இனப்படுகொலை பற்றிய இராஜதந்திரியின் அலசல் பல உண்மைகளை வெளிப்படுத்தியது. அந்த இனப்படுகொலை பற்றி கூறும் இன்றைய ஆட்சியாளர்கள் தாம் செய்வதென்ன? ஜே.ஆர். ஆட்சியும் கொடூர ஆட்சிதான். ஆனாலும் தமிழ் மக்களை கோவணத்தோடு திரியுமாறு கூறவில்லை. இனப்படுகொலையைவிட இனத்தை அவமானப்படுத்தும் செயல் கொடியது. யூலை இனப்படுகொலை பற்றி கருத்துக் கூறிய தமிழ்க் கட்சிகள், அதைவிட மோசமான இன்றைய இனப்படுகொலைகள் பற்றி எதுவும் கூறவில்லை. வன்னியில் நடப்பது என்ன? குடாநாட்டில் நடந்தது என்ன? நாம் சிந்திக்கத் தெரியாத கூட்டமல்ல.

ஆர். ராசையா, திருக்கோணமலை.

### கட்டளையிட்டும்...

கோவணத்தோடு செல்லுமாறு கட்டளையிடுமளவுக்கு நிலமை மாறிவிட்டது. இது தமிழ்க் கட்சிகள் கொடுத்த இடம்தான். இக் கட்டளையை எதிர்த்து உலகின் கவனத்திற்கு கொண்டு செல்ல தமிழ்க் கட்சிகளால் முடியவில்லை. இதற்கும் அம்மையாரிடம்தான் கோரிக் கைவிட்டு காத்திருக்க வேண்டுமா?

மா. தேவசகாயம், யாழ்ப்பாணம்.

முரசே!

'மோனிக்கா என் மோனிக்கா' ஆரம்பமே படு அசத்தல். மிக நேர்த்தியாக வழங்கும் புவனாவுக்கு எத்தகைய பாராட்டுக்களும் மிகையாகாது. விறு விறுப்பான தொடர்களை விதம் விதமாக வழங்குவதில் முரசுக்கு நிகர் முரசே என்பதை 'மோனிக்கா என் மோனிக்கா' ஊர்ஜிதப்படுத்திவிட்டாள்.

ஏறாவூர் ஸபா ஹாபிஸ்.

அன்பின் முரசே!

நீ தாங்கி வரும் அனைத்தும் உண்மை. அதிலும் எனக்குப் பிடித்தவை 'இலக்கிய நயம்', 'அதிரடி அய்யாத்துரை'. நீ தினம் வியாழன் பின்னேரம் இங்குவர வேண்டும் என வாழ்த்தும்!

தமிழினி பாஸ்கரன், இலண்டன்

### மானமற்றவரா நாங்கள்?

நினைத்துப் பார்த்தாலே உள்ளம் பதறுகிறது. எத்தனை பெரிய இழுக்கு. நமது கடலில் நமது மீனவர்கள் கோவணத்தோடு மீன்பிடிக்கிறார்கள். நாகரிக உலகில் மீன்பிடிக்கவும், மீனவர்களுக்கும் புது வசதிகள் வந்துவிட்டன. இங்கு மானமற்ற மக்களாக நடத்தப்படுகின்றனர். இதன் பின்பும் அரசையும், அதன் அவசரகால சட்டத்தையும் ஆதரிக்கும் கட்சிகள் தமிழ்க் கட்சிகள்தானா? இந்த சட்டத்தையும் ஆதரித்தபடி, அவ்வப்போது அரசை எதிர்த்துப் பேசுவது, வெறுமனே அரசியல் நாடகம் தானே.

எஸ். சர்வானந்தன், கல்வயல்,
யாழ்ப்பாணம்.

### பாவம் இவர்கள்

அரசை நம்பவேண்டும். அம்மையாருடன் பேசினால் யாவும் கிடைக்கும் என்றெல்லாம் கூறின தமிழ்க் கட்சிகள். இன்று அதே கட்சிகளில் சிலரே அரசை நம்பி எதுவும் செய்ய இயலாது என்று கூறத் தலைப்பட்டுள்ளனர் பாவம், இவர்கள். இப்போதுகூட மக்களை இனியும் ஏமாற்ற முடியாது என்பதால்தான் அப்படி கூறுகிறார்கள். உண்மையானவர்கள் என்றால், வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசை பகிரங்கமாக எதிர்க்க வேண்டியதுதானே!

எஸ். கங்காதரன், மன்னார்.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**தொலை நகல் (Fax):- 074-513266**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.



படிப்பகம்

www.padippakam.com

# பாடசாலைகள், ஆலயங்கள் தரைமட்டம்!

# மயானமாக காட்சியளிக்கும் பிரதேசம்

வன்னிக்கான பாதைத் திறப்பை முன்னிட்டு செய்தியாளர்களை மாங்குளம் வரை படையினர் அழைத்துச் சென்றிருந்தனர்.

அப்போது வவுனியா தாண்டிக்குளம் முதல் மாங்குளம் வரை சுமார் 30 கிலோமீட்டர் வரையான பிரதேசத்தை அவர்கள் காண முடிந்தது.

வளம்மிக்க வன்னி மண்ணும், எழில்மிக்க நகரங்கள் பலவும் தற்போது மயானங்களாக மாறிக்கிடப்பதை செய்தியாளர்கள் கண்டனர்.

படையினர் தங்கியுள்ள கட்டடங்கள் தவிர, ஏனைய கட்டடங்களை காண முடியவில்லை. அனைத்தும் அநேகமாக தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

மாங்குளம்வரை வீதியின் இருமருங்கும் இருந்த வீடுகள், கடைகள் யாவும் காணாமல் போயுள்ளன.

ஓமந்தையில் இருந்த கிறிஸ்தவ தேவாலயம் ஷெல் தாக்குதல்களால் சேதமுற்ற நிலையில் காணப்படுகிறது. அங்குள்ள பாடசாலையில் படையினர் இருப்பதால் இடிக்கப் படாது தப்பி இருக்கிறது.

விளக்குவைத்தகுளம், பன்றிக்கெய்த குளம், பனிக்க நீராவி போன்ற பகுதிகளில் வீடுகள் இருந்த தடயங்களைத் தேட வேண்டி இருக்கிறது.

## புதிதாகத் தோன்றியுள்ள பௌத்த ஆலயங்கள்

புளியங்குளம் குட்டி நகராகத் திகழ்ந்த பகுதி. இங்கு சந்தியில் இருந்த கடைகள் தரைமட்டமாகியுள்ளன.

புளியங்குளத்தில் கந்தசாமி கோவில் ஒன்றும், அம்மன் கோயில் ஒன்றும் இருந்தன. இப்போது அவை நாசமாகியுள்ளன. இடிந்து புதர் மண்டிக் கிடக்கின்றன.

### பௌத்த ஆலயங்கள்

இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் தரைமட்டமாகியும், புதர் மண்டியும் காணப்படும்போது, புதிதாக பௌத்த ஆலயங்கள் சிலவற்றைக் காணக்கூடியதாக இருந்தது.

புளியங்குளத்திற்கும் புதூர் சந்திக்கும் இடையே பௌத்த கோயில் ஒன்று கட்டப் பட்டுள்ளது.

கனகராயன் குளத்திற்கும் மாங்குளத் திற்கும் இடையே மற்றொரு பௌத்த கோயில் எழுந்திருக்கிறது.

இவை இரண்டும் பிரதான சாலையை ஒட்டியிருந்தமையால் செய்தியாளர்களது பார்வையில் தென்பட்டன. உட்பகுதிகளிலும் வேறு பௌத்த கோயில்கள் உருவாக்கப் பட்டுள்ளதா என்பது தெரியவில்லை.

கனகராயன் குளத்தில் உள்ள பாடசாலையைப் படையினர் பயன்படுத்தி வருகின்றனர். ஏனைய கட்டடங்கள் இடிந்தும், நாசமாகியும் காட்சியளிக்கின்றன.

மாங்குளத்தில் பழைய படைமுகாம் இருந்த பகுதி உட்பட நகர்ப்பகுதி முழுவதும் படையினர் வசம் உள்ளன.

மாங்குளம் சந்தியில் சில கட்டடங்கள் உள்ளன. அப்பகுதியில் உள்ள வீடுகளில் கூரைகளைக் காணவில்லை. வீட்டு நிலைகள் போன்ற தளபாடங்களும் மறைந்துள்ளன.

### மரம் அழிப்பு

வன்னியில் பெறுமதியான முதிரை, பாலை உட்பட பலரகமான மரங்கள் பேணி வளர்க்கப்பட்டு வந்தன.

இப்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது மரம் வெட்டினால் கடும் தண்டனை விதிக்கப்பட்டது.

தற்போது வீதியின் இரு மருங்கிலும் மட்டுமல்லாது, உள்ளேயும் மரங்கள் வெட்டிச் சாய்க்கப்படுகின்றன.

செய்தியாளர்கள் மாங்குளம் நோக்கி அழைத்துச் செல்லப்படும்போது, பல லொறிகளில் மரங்கள் ஏற்றப்பட்டு வவுனியா நோக்கிச் செல்வதை அவதானித்துள்ளனர். சிங்கள வியாபாரிகளுக்கே மரம் வெட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பெரும் விலையுள்ளதும், பயன் மிக்கவையுமான மரங்கள் வெட்டப்பட்டு வருவதால் வன்னி வளம் நாசமாகி வருகிறது.

### குடியேற முடியாது

வன்னியில் இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் மறுபடி தமது சொந்தப் பகுதிகளில் குடியேற முடியாதளவுக்கு அப்பிரதேசம் காட்சியளிக்கிறது.

---

# பொதி என்பது புரளி

## அரசுக்கு யோசனை இல்லை

தீர்வுப் பொதியை இம்மாதம் சபையில் கொண்டு வரப்போவதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என்று முரசுக்கு நம்பகமாக தகவல் கிடைத்துள்ளது.

ஐ.தே.கட்சியை அச்சுறுத்தவும், வெளியுலகுக்கு ஆரவாரம் காட்டவுமே பொதியை பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்போவதாக பொ.ஜ.மு. வட்டாரங்கள் கூறினவாம்.

பொதியின் மூலவர்களில் ஒருவரான நீலன் திருச்செல்வம் செப்டம்பர் முதலாம் திகதி அமெரிக்கா செல்ல திட்டமிட்டிருந்தார். அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்து ஹவாட் பல்கலைக் கழகத்தில் கற்பிக்கவும் அனுமதி பெற்றிருந்தார்.

பொதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதாக இருந்திருந்தால், அமெரிக்கா சென்று தங்குவதற்கு நீலன் திட்டமிட்டிருக்க மாட்டார். இங்கு இருந்து பொதிக்கு ஆதரவு திரட்டவே முயன்றிருப்பார்.

எனவே தற்போதைக்கு பொதியை பாராளுமன்றத்தில் சமர்பிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றே தெரிகிறது.

---

# எச்சரிக்கை கடிதம்

வவுனியாவில் புளொட், ரெலோ சார்பான தொழில் நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

'தேசவிரோத அமைப்புக்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் ஒருமாத காலத்திற்குள் மூடப்படவேண்டும்' என்று அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை வவுனியாவில் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டும் பாடசாலைகளில் பிரசுரங்கள் பரவலாக விநியோகிக்கப்பட்டன.

---

# "மூன்று மாதத்தில் முடிப்போம்!"

## புலிகளின் தாக்குதல் பட்டியல்

அரசுக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் தமிழ்க் கட்சிகளை மூன்று மாத காலத்திற்குள் தாக்கி அழிக்கப் போவதாக புலிகள் கூறியுள்ளனராம்.

வன்னியில் இதனைத் தெரிவித்த புலிகளின் பிரமுகர் ஒருவர், 'அடுத்த தேர்தல்களுக்கு முன்னர் தமிழ்க் கட்சிகளது செயற்பாடுகளை வடக்கு-கிழக்கில் முடக்கிவிடுவோம்!' என்றும் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கிலும், கொழும்பிலும் தமிழ்க் கட்சித் தலைமைகளை குறிவைத்து புலிகளது தாக்குதல் அணி உறுப்பினர்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

புலிகளது தாக்குதல் பட்டியலில் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள், புளொட் உபதலைவர் மாணிக்கதாசன், கூட்டணி இராசம்பந்தன், ஈ.பி.டி.பி. தலைவர் தேவானந்தா, சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகிய தமிழ்ப்பிரமுகர்களது பெயர்கள் முக்கிய இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

புலனாய்வுத் துறையினரும் இதுபற்றி மேற்படி தமிழ்ப் பிரமுகர்களை எச்சரித்து, விழிப்பாக இருக்குமாறு கூறியுள்ளனர்.

கொழும்பில் கரும்புலி உறுப்பினர்கள் பொலிசாரது சோதனைகளில் சிக்காத விதமான ஏற்பாடுகளுடன் தங்கியுள்ளதாக புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் கூறுகின்றன.

இராசம்பந்தனுக்கு துப்பாக்கிக் குண்டு துளைக்காத கார் ஒன்று ஜனாதிபதியின் நேரடி உத்தரவின்படி கிடைத்துள்ளது. கூட்டணியின் ஏனைய எம்.பிகளுக்கு பாதுகாப்பு எதுவும் அதிகரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

மட்டக்களப்பில் பணியாற்ற கூட்டணி எம்.பிகள் புலிகளிடம் அனுமதி கேட்டு தூது அனுப்பியதாகத் தெரிகிறது. தற்காலிகமாக அனுமதிக்க புலிகள் முன்வந்துள்ளதாகவும் தெரிகிறது.

---

# அமெரிக்க தூதரகத்தில் இரகசிய சந்திப்பு

## பொதியை ஆதரிக்குமாறு ஆலோசனை

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் சிலவற்றின் பிரதிநிதிகளை அமெரிக்க தூதரக அதிகாரிகள் இரகசியமாகச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பு தொடர்பாக பத்திரிகைகளுக்கோ, ஏனைய தூதரகங்களுக்கோ தெரிவிக்கக்கூடாது என்றும் கண்டிப்பாக கூறப்பட்டதாம். குறிப்பாக இந்திய தூதரகத்திற்கு தெரிவிக்க வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டதாம்.

கொழும்பில் நீலன் திருச்செல்வம் கரும்புலித் தாக்குதலில் பலியான பின்னரே இச் சந்திப்பு அவசரமாக நடந்துள்ளது.

தமிழ்க் கட்சிகளது பிரமுகர்களை தனித்தனியாகவே தூதரக அதிகாரிகள் சந்தித்துள்ளனர்.

தற்போது அரசு முன்வைத்துள்ள பொதிக்கு சில திருத்தங்களுடன் ஆதரவு வழங்குமாறும் வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்த வேண்டாம் என்றும் கோரப்பட்டதாம்.

தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்திக் கொண்டே, அரசின் பொதியை முதற் கட்டமாக ஏற்பதாகக் கூறி ஆதரியுங்கள் என்று ஆலோசனை கூறப்பட்டதாம்.

'இந்தியா தற்போது எத்தகைய ஆர்வம் காட்டி வருகிறது? என்பதையும்,தமிழ்க் கட்சிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தற்போதைய உறவு நிலைகள் எவ்வாறுள்ளது?' என்பது பற்றியும் அறிவதில் ஆர்வம் காட்டப்பட்டதாம்.

---

# மக்கள்மீது கடும் தாக்குதல்

## இம்முறை மன்னிப்பும் கோரவில்லை

வவுனியா-மன்னார் பாதையில் 04.08.99 அன்று சைக்கிள் குண்டு தாக்குதலின் பின்னர் பொதுமக்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். பொதுமக்களை கண் மூடித்தனமாகத் தாக்கி விட்டு வீதிகளில் இழுத்துச் சென்றனர். அடி உதை தாங்காது பலரும் கூக்குரலிட்டனர்.

இதன்பின்னர் 06.08.99 அன்று வவுனியா மன்னார் வீதியில் மற்றொரு சைக்கிள் குண்டு தாக்குதல் நடந்தது.

குண்டுவெடித்த பின்னரும் குறிப்பிட்ட ட்ரக் வண்டியின் சாரதி அதனை நிறுத்தாது சாதுரியமாக முகாமுக்கு செலுத்திச் சென்று விட்டார். அதன்பின்னர் சம்பவ இடத்திற்கு விரைந்த சீருடையினர் கண்ணில் பட்டோரையெல்லாம் தாக்கினார்கள்.

கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர். துப்பாக்கிச் சூட்டில் பாலையா சக்திவேல் (43), மு.யோகலிங்கம் (33) ஆகியோர் பலியாகினர். சற்றுத் தூரத்தில் கோயிலில் வழிபாடு செய்து கொண்டிருந்த சஞ்சீவன் (13) என்னும் மாணவனும் சூட்டுக் காயத்துக்கு உள்ளானார். சுப்பிரமணியம் (53) என்பவரும் காயமடைந்தார்.

அதன்பின்னர் ரெலோ முகாமுக்குள் புகுந்து அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் ரெலோ உறுப்பினர் இருவர் காயமடைந்தனர். ஏனைய ரெலோ உறுப்பினர்களை தரையில் குப்புற படுக்கவைத்து துப்பாக்கியின் பின்புறத்தால் கடுமையாகத் தாக்கினார்கள். இதனால் பலர் காயமடைந்தனர். ஏற்கனவே மன்னாரில் இரு தடவை பொதுமக்கள் தாக்கப்பட்டனர். பின்னர் படையதிகாரிகள் மன்னிப்புக் கோரினர். வவுனியாவில் அவ்வாறான சம்பிரதாய மன்னிப்புக்கூட கேட்கப்படவில்லை.

---

# அமைச்சர் அனுருத்த கிழக்கு விஜயம்!

## படைநகர்வை எதிர்பார்க்கும் புலிகள்

பாதுகாப்புப் பிரதி அமைச்சரும், எரிபொருள் மின்சக்தி நீர்ப்பாசன அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கடந்த வாரம் மட்டக்களப்புக்குத் திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

மூன்று ஹெலிகொப்டர்கள் சகிதம் அமைச்சர் அனுருத்த மற்றும் பல பாதுகாப்பு உயரதிகாரிகள் வந்திறங்கினர்.

மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்த அமைச்சரின் மட்டக்களப்பு விஜயத்தைப் பற்றி பாதுகாப்பு தரப்பின் கீழ் மட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்படவில்லை. குறிப்பாக அதி உயர் மட்ட அதிகாரிகளைத் தவிர வேறெவருக்கும் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மட்டக்களப்புக்கு வந்திறங்கிய பின்னரே உடனடியாகப் பாதுகாப்புத் தரப்பின் கீழ் மட்ட அதிகாரிகளுக்கு அவசர அவசரமாகத் தெரிவிக்கப்பட்டு அழைக்கப்பட்டனர்.

காலை 11.30 க்கு வந்திறங்கிய அமைச்சர் சுமார் 4 மணித்தியாலங்கள் மட்டக்களப்பு படைத் தலைமையகத்தில் பாதுகாப்பு நிலைமைகள் பற்றி கலந்தாலோசனை நடாத்தினார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மட்டக்களப்புக்கு மேற்கொண்ட இரண்டாவது விஜயம் இதுவாகும்.

### தயார் நிலை

ஏற்கெனவே திட்டமிட்டிருந்த புலிகளின் வசமுள்ள பதுளை வீதிப் பகுதியை நோக்கிய இராணுவ நகர்வை அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மட்டக்களப்பு விஜயத்தின் பின்னர் படையினர் துரிதப்படுத்தக்கூடும் என எதிர்பார்த்த புலிகள் தமது நிலையைப் பலப்படுத்தியுள்ளனர் என்று தெரிகிறது.

படையினர் உள் நுழையக் கூடும் என எதிர்பார்க்கப்படும் எல்லை முன்னரங்கப் பகுதிகள் அனைத்திலும் பாரிய பங்கர்களை அமைத்துள்ளனர்.

படுவான்கரை, வவுணதீவு, பட்டிருப்பு, கிரான், பெரிய புல்லுமலை, செங்கலடி போன்ற பல முனைப் பகுதிகளுக்கு ஊடாகப் படையினர் முன்னேறக் கூடும் என எதிர்பார்க்கப்படும் பகுதிகளில் புலிகள் பங்கர்களை அமைத்து அரண்கள் நிறுவியுள்ளனர்.

---

# பிரபாவை புகழ ஆட்சேபம்?

## செய்திக்கு வை.கோ. மறுப்பு

தமிழகத்தில் ம.தி.மு.க. மாநாட்டில் புலிகள் தொடர்பாகவும், பிரபாகரன் தொடர்பாகவும் ம.தி.மு.க. பிரமுகர் ஒருவர் புகழ்ந்து பேசினார்.

இப்பேச்சுக்கு வை.கோ. ஆட்சேபம் தெரிவித்ததாக பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டன.

இதனை ம.தி.மு.க. தலைவர் வை.கோ. மறுத்திருக்கிறார். எக்கட்டத்திலும் நான் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை.

திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றியும், விடுதலைப் புலிகள் பற்றியும் அங்கு கூறப்பட்ட கருத்துக்கள் அதனைக் கூறியவரின் தனிப்பட்ட கருத்துக்கள் என்பதை மட்டுமே குறிப்பிட்டேன், அது ஆட்சேபமாகாது என்று வை.கோ. தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர், மத்திய அமைச்சர் அத்வானி போன்றோரும் மாநாட்டில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு தர்மசங்கட நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகவே வை.கோ. அவ்வாறு கூறும் நிலைகூட ஏற்பட்டது என்று ம.தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே மாநாட்டில் ஈழத் தமிழர் பிரச்சனையில் ஐ.நா. தலையிடவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

---

# பொதிப் பூச்சாண்டியால்

## இனவாதிகள் சுறு சுறுப்பு

அரசாங்கம் தயாரித்துள்ள தீர்வுப் பொதியை பாராளுமன்றத்தில் இம்மாதம் சமர்ப்பிக்கப்போவதாக வதந்திகள் சில நாட்களாக உலாவ ஆரம்பித்தது தெரிந்ததே.

இந்த வதந்திகளால் இனவாத சக்திகள் சுறுசுறுப்படைந்துள்ளன. தமது பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளன.

கடந்த 9ம் திகதி திங்கட்கிழமை பகல் மாத்தறை நகரிலுள்ள ஓர் அரச மரத்தடிச் சந்தியில் 500க்கும் அதிகமான சிங்கள பௌத்தர்கள் ஒன்று கூடி, தீர்வுப் பொதியை முழு மூச்சுடன் எதிர்ப்பதற்கு நாடு முழுவதும் ஆதரவு திரட்டுவதெனச் சபதமெடுத்துள்ளனர்.

தேசிய பௌத்த பிக்குமார் சங்கம், ஒன்றிணைந்த தேசிய சபை, பயங்கரவாதத்துக்கெதிரான தேசிய இயக்கம் மற்றும் சிங்கள வீரவிதான ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்தே இக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

சங்பல்லத்தர சுமணஜோதி அநுநாயக்க தேரோவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் ஆர்.எஸ்.வனசுந்தர, பிரசித்திபெற்ற சட்ட வல்லுநர் எஸ்.எல்.குணசேகர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தீர்வுப் பொதியைத் தீமூட்டி எரிப்பதைக் குறிக்கும் முகமாக ஒரு பிரேதப் பெட்டிக்கும் தீமூட்டி எரிக்கப்பட்டது.

"தீர்வுப் பொதியை அமுலுக்குக் கொண்டு வந்தால் நாடு பிளவுபடும்; தவிர பெரும் அநர்த்தங்கள் நாட்டில் ஏற்படும் என்று நான்கு மகாநாயக்கர்களும் வெளியிட்ட பிரகடனத்தின் பிரதிகளையும் இந்த எதிர்ப்பாளர்கள் தம்மிடம் வைத்திருந்தனர். நாடு பூராவும் நடைபெறவிருக்கும் எதிர்ப்புக்கூட்டங்களுக்கும் மகாநாயக்க தேரோக்களின் பிரகடனப் பிரதிகளும் எடுத்துச் செல்லப்படுமாம்.

பிரதான நகரங்களிலும் முக்கிய கிராமங்களிலும் இடம்பெறவிருக்கும் எதிர்ப்புக் கூட்டங்களின் முடிவில் கொழும்பில் பிரமாண்டமான எதிர்ப்புப் பேரணி ஒன்றும் நடத்துவதற்கான திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக இக்கூட்ட அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

பொதியை பொது விவாதத்துக்கு விட்டதின்மூலம் 'சிங்கள கமிஷன்' போன்ற அமைப்புக்கள் உருவாகின.

தீர்வுக்கு காலம் தாழ்த்தியதால் அதனை பயன்படுத்தி 'வீரவிதான' போன்ற அமைப்புக்கள் வளர்ந்தன.

தற்போது இடைக்கிடையே பொதி பூச்சாண்டி காட்டி, இனவாத பிரசாரங்கள் சூடு பிடிக்கவே அரசாங்கம் வழிவகுத்து வருகிறது.

---

# பிக்குகள் கனடாவில் தஞ்சம்

## பௌத்த காங்கிரஸ் சீற்றம்

இலங்கையிலிருந்து 'விசா'பெற்றுக் கொண்டு கனடா செல்லும் பௌத்த பிக்குமாரின் தொகை அதிகரித்திருப்பதாக அறியப் படுகிறது.

பிக்குமாருக்கு கனடாவில் ஆறு மாதங்கள் மட்டும் தங்குவதற்கான விசா கொழும்பிலுள்ள கனடா உயர் ஸ்தானிகராலயத்தினரால் வழங்கப்படுகிறது. அங்கு செல்பவர்கள் ஆறு மாதம்கடந்த பின்னரும் நாட்டை விட்டு வெளியேறாமல் அங்கேயே அகதி அந்தஸ்து கோரியுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

இவ்வாறு கனடாவில் தஞ்சம் கோரி விண்ணப்பிக்கும் பிக்குமாருக்கு ஒட்டாவாவிலுள்ள ஒரு புத்தவிகாரையின் விகாராதிபதி பலவகையிலும் ஆதரவளித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய நடவடிக்கையினால் கனடாவிலுள்ள பௌத்தர்கள் மத்தியில் பெரும் பூசல்கள் எழுந்திருப்பதாகத் தெரிகிறது.

ஒட்டாவாவிலுள்ள ஹில்டா ஜயவர்த்தனராமய விகாராதிபதி அம்பலாங்கொட சுதர்ம தேரோ, விகாரைக்கான கடிதத் தலைப்புகள், முத்திரைகள் ஆகியவற்றையும், தஞ்சம் கோரும் பிக்குகளுக்கான விண்ணப்பப்படிவங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

கனடாவிலுள்ள பௌத்த காங்கிரஸ், இந்த ஆலயத்தில் எத்தகைய சமய நிகழ்ச்சியும் நடைபெறலாகாது என்று கனடா உச்ச நீதிமன்றத்தில் தடையுத்தரவு வாங்கியிருக்கிறது என்ற செய்தியும் வெளியாகி இருக்கிறது.

கனடாவுக்கு ஆறு மாத விசாவுடன் செல்லும் பௌத்த பிக்குகளில் பலருக்கு போதுமான அளவு பிக்குகளுக்கான பயிற்சிகளும் கிடையாது என்றும் கூறப்படுகிறது. பலர் கனடா வந்ததும் தங்களுடைய மஞ்சள் அங்கியை உதறி விடுவதாகவும் தெரிகிறது.

---

# படையினரின் தண்ணீர்ப் பந்தல்!

மட்டக்களப்பு-வாகனேரிப் பகுதியிலிருந்து வாழைச்சேனைக்கு வரும் அப்பகுதிப் பொதுமக்கள் சுமார் 10 கிலோமீட்டர் கால் நடையாக வந்து வாகனேரிச் சந்தி முகாமில் கரை சேருகின்றனர்.

தகிக்கும் வெய்யிலில் நீண்ட தூரம் நடந்து- சோர்ந்து வரும் பொதுமக்களுக்கு குளிராக மண்பானையில் தண்ணீர்ப் பந்தல் வைத்து உபசரிக்கிறார்கள் வாகனேரிச் சந்தியிலுள்ள படையினர்.

அத்துடன் அவ்விடத்தில் தரித்து நின்று வாழைச்சேனை செல்வதற்கான போக்கு வரத்திற்கும் படையினர் உதவி புரிகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# வேலை பெற்றுத் தருவதாக சுருட்டல்
## கூட்டணிப் பிரமுகர்கள் கைவரிசை!

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட கூட்டணி பிரமுகர்கள் சிலர் அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்தி அரசாங்க வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதாக பலரிடம் பெருந்தொகைப் பணம் வாங்கி யுள்ளனர். இந்த விவகாரம் நீலனின் மறைவுடன் அம்பலமாகியுள்ளது.

அரசாங்க உயர்மட்டத்தில் நீலன் திருச்செல்வத்திற்கு இருந்த அதிகபட்ச செல்வாக்குகளைப் பயன்படுத்தி அரசாங்க வேலை பெற்றுத் தருவதாக கூட்டணிப் பிரமுகர்கள் சிலர் தொழில் இல்லாத இளைஞர், யுவதிகளிடம் பணம் பெற்றிருந் தனராம்.

நீலன் திருச்செல்வம் கரும்புலித் தாக்குதலில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாக இளைஞர் யுவதிகளிடம் பணம் வாங்கிய கூட்டணிப் பிரமுகர்கள் வழக்கத்திற்கு மாறாகக் குஷியடைந்துள்ளனர்.

தங்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் நீலனிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்று கை கழுவி நெருக்கடியில் இருந்து தப்பிக் கொள்வதற்கு திரு நீலன் திருச்செல்வம் பலியானது தக்க தருணமாகிவிட்டதுதான் இந்த குஷி நிலமைக்குக் காரணம் என்று விஷயமறிந்தோர் தெரிவிக்கிறார்கள்.

அக்கரைப்பற்று கூட்டணிக் கிளையின் முக்கிய பிரமுகர் ஒருவர் வங்கிகளிலும், சமூர்த்தித் திட்டத்திலும் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ரூபா பத்தாயிரம் தொடக்கம் ஒன்றரை இலட்ச ரூபாவரையில் ஒவ்வொருவரிடமும், தகுதிக்கேற்ப வாங்கியிருக்கிறார்.

இதைப் போன்று ஊர்க் கோயில் நிருவாகத் தலைவர் ஒருவரும் நீலனுடன் நல்ல நெருக்கமானவருமான ஒருவரும் பலரிடம் பணம் வாங்கியிருக்கிறார்.

தாம் சீட்டுப் போட்டும் பணம் கொடுத்துள்ளதாக அவ்வூர் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

# சீட்டுக்காசு பெறவந்தவர் சிறையில் தள்ளப்பட்டார்

தனக்குத் தருமதியான சீட்டுக்காசைப் பெறுவதற்காக கொழும்பிலிருந்து அம்பாறைக்கு வந்த தமிழரான என்.சிவலிங்கம் என்பவர் கைது செய்யப்பட்டு 60 நாள் தடுப்பு உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி அறியப்படுவதாவது: இவர் குவைத் நாட்டில் இருக்கும்போது அம்பாறையைச் சேர்ந்த சிங்கள நண்பர் ஒருவரிடம் சீட்டுப் பிடித்துள்ளார். சீட்டுக் காசைப் பெறாத நிலையில் இவர் இலண்டன் சென்றுள்ளார். அங்கிருந்து மீண்டும் கொழும்பு திரும்பி தனக்குத் தருமதியான 20,000/= ரூபாவையும் பெறுவதற்காக அம்பாறை வந்தபோது பிடிபட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரது அடையாள அட்டையும், பிறப்பிடமும் கிளிநொச்சி என்பதால் கடுமை கூட இருந்ததாம். விடயத்தைக் கேள்விப்பட்ட அவரது மனைவி அம்பாறைக்கு வந்தபோது சிங்களத்தில் தயாரிக்கப்பட்ட வாக்குமூலத்தில் கையெழுத்திடுமாறு கேட்டதாம் அவர் முற்றாக மறுத்துவிட்டாராம்.

இதுவிடயமாக ICRC யினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தை வேறுவிதமாகப் புனைந்து 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

# செயற்பாடுகள் இடைநிறுத்தம்!

தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சிக் கிளைகளினால் மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகளை இடை நிறுத்துமாறு மேலிட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதுபற்றி அம்பாறை மாவட்ட கூட்டணிக்கட்சிக் கிளைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடுவதில்லை என கட்சி ஆதரவாளர்கள் முடிவெடுத்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. நீலன் திருச்செல்வம் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இந்த முடிவைத் தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்துள்ளது.

தங்கள் கட்சி உயர் மட்டத்தினரின் நிலைப்பாடு, காரணமாகவும், தற்போதைய நெருக்கடியான அரசியல் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு ஏற் கனவே தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிமட்டத் தொண்டர்கள் ஒதுங்கிக் கொண்டுள்ளார்கள் என்று பலர் 'முரசு'க்குத் தெரிவித்தனர்.

## விளம்பரப் பகுதி

# 5வது, 1வது பிறந்தநாள் வாழ்த்து




பிரணவன் (14.07.99) / ஆத்தி (13.08.99)

தொல்புரம் மானிப்பாயைச் சேர்ந்த ஸ்ரீ றஞ்சறதன்-பிறேமலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் பிரணவன் தனது 5வது பிறந்தநாளையும் செல்வப் புதல்வி ஆத்தி தனது 1வது பிறந்தநாளையும் கனடாவில் மொன்றியலில் கொண்டாடினார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, இலங்கையிலிருக்கும் அப்பப்பா, அப்பம்மா, கந்தையா சித்தப்பா, அம்மம்மா, சியாமளா பெரியம்மா, கய்பன் அண்ணா, பிரசாந்தி அக்கா, பாலினி அக்கா, கனகரத்தினம் பாட்டா-பாட்டி, கனடாவிலிருக்கும் கணேஸ் பெரியப்பா, பெரியம்மா, சர்மி அக்கா, நிரு அண்ணா, பாலா பெரியப்பா, சுவிஸிலிருக்கும் ஸ்ரீபெரியப்பா, பெரியம்மா, தம்பி பிரதீப், கனடாவிலிருக்கும் பரராஜசிங்கம் மாமா, மாமி, விதுனன் மச்சான், சோபினா மச்சாள், சிறிகரன் மாமா, மாமி, நிகோசன் மச்சான், ஜெகன் மாமா, மாமி, கிசாணா மச்சாள் மற்றும் உறவினர்கள் பிரணவன்-ஆத்தி பல கலைகளும் கற்று சீரும் சிறப்புடனும் மானிப்பாய் மருதடியான் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



நிரோஷ் ஜெயானந்தன் 05.08.1999

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த ஜெயானந்தன், சூராவத்தையைச் சேர்ந்த சுமித்ரா தம்பதியினரின் செல்வப் புதல்வன் நிரோஷ் தனது முதலாவது பிறந்தநாளை கனடாவில் உள்ள ஸ்காபரோ நகரத்தில் ஆகஸ்ட் 7ம் திகதி 1999 இல் Eastown Restaurant and Banquet Hall இல் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அப்பம்மா, அம்மம்மா, சுதா சித்தப்பா, டிலோ சித்தி, தங்கை விதுஜா, மதி சித்தப்பா, சித்ரா சித்தி, நிஷா அக்கா, துஷா அக்கா, பிரகாஷ் மாமா, சுபா மாமி, அஷான் மச்சான், கிறிஷான் மச்சான் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஆயக்கடவைப் பிள்ளையார் அருள் பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

# மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் ஆகஸ்ட் 22 முதல் 29 வரை சந்திக்கலாம்**

**Dr. P.Arumugam S.A.M.P. REG.9492**
**SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.**
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனை செப்டெம்பர் 4,5ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

**வவுனியாவில் செப்டெம்பர் 11, 12ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

கடிதத்தொடர்பு:- **Resident T.P. 065-24019**
**Dr. P.Arumugam S.A.M.P.**
**No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.**

# மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய மந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**
தலைசேவியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
**Fax-00941342464.**
**Tel-00941431137.**
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
**342463-344831**

# அஸ்மா நோய்க்கு வைத்தியம்



* தொய்வு
* இளைப்பு
* மூச்சுத்தட்டல்
* நெஞ்சுச்சளி
* இருமல்
* மூக்கடைப்பு
* தலைவலி
* இழுப்பு
* மாய்ச்சல்
* மண்டைச்சளி
* தடிமன்
* கண்கடி
* பீனிசம்
* தும்மல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

டாக்டர்
சுராஜ்சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
Ph.D(Ind); M.B.B.Sch (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஒடியன் தியேட்டர்-காலிவீதி)

தொலைபேசி இலக்கங்கள் ☎ 074-201582 ☎ 728767 ☎ 078-650516

தற்சமயம் தினமும் நோயாளர்கள் அதிகம் இருப்பதனால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பதிவு செய்து வரவும். தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் நான்கு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும்.



சுவிற்ஸர்லாந்தில் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மற்றும் அனைத்து சஞ்சிகைகள், ஒரிஜினல் வீடியோ கொப்பிகள் வாடகைக்கும்—விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**Tarmu Trading**
Aarauer Strasse-76
4600-Olten- Swiss.
T.P.&Fax : 062-2971070 Natel :- 079-2771573

# தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்திமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

# 90ம் நாள் நினைவலைகள்



இராஜரட்ணம் கிறிஸ்டி சுகராஜா
[சுகன்]

தோற்றம் : 1969.12.24
மறைவு : 1999.05.15

❖❖❖

கண்ணீர் சிந்திய மனிதருக்கு
அருள் பண்ணிய பெருமகனை
மன்னவர்க்காக தன்னுயிரை
மாய்த்திடக் கண்டதினால்

பிரிவால் துயருறும்
அம்மா, அன்ரிமார்,
அண்ணாமார்
அக்கா, தங்கை,
உற்றார், உறவினர்கள்



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ரிமோட் குண்டுகள்

வன்னிக்குள் படைகளைக் குவித்து மன்னார்-பூநகரி பாதையை கைப்பற்ற படைத்தரப்பு தயாரிப்புக்களில் ஈடுபட்டு வருகிறது.

இதனால் வவுனியா-மன்னார் வீதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் வாபஸ் பெறப்பட்டு களமுனைக்கு அனுப்பப்பட்டனர்.

மன்னார் வவுனியாவில் விசேஷ அதிரடிப் படையினரே பாதுகாப்பு கடமைகளை பொறுப் பேற்று வருகிறார்கள்.

இதனை நன்கு அவதானித்த புலிகள் விசேஷ அதிரடிப்படையினர் மீது குறிவைத்தனர்.

அதன் முதற்கட்டமாக 04.08.99 அன்று வவுனியா-மன்னார் வீதியில் வேப்பங்குளப் பகுதியில் குண்டுத்தாக்குதல் ஒன்று நடைபெற்றது.

அதிரடிப் படையினரின் வாகனத் தொடரணி அவ்வீதியால் செல்வதை அவதானித்தே புலிகள் தமது தாக்குதல் திட்டத்தை வகுத்தனர்.

வீதியோரத்தில் குண்டு பொருத்திய சைக்கிள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. வாகனத் தொடரணி சைக்கிளை நெருங்கும்போது ரிமோட் கொன்ட்ரோல் மூலம் குண்டை வெடிக்கை வைத்துள்ளனர்.

குறி தப்பவில்லை. ஒரு ட்ரக் வண்டிக்கு நேராக குண்டுவெடித்தது. அந்த ட்ரக் வண்டியில் 40 அதிரடிப் படையினர் இருந்தனர்.

உடனடியாக 14 பேர் பலியானார்கள். ஏனையோர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தோரும் மறுபடி பணிக்கு திரும்புவது சந்தேகமே.

வவுனியா மன்னார் வீதியில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதல் இது தான்.

இதனையடுத்து 06.08.99 அன்றும் மறுபடி அதே பாதையில் சைக்கிள் குண்டுத் தாக்குதல் நடந்தது.

04.08.99இல் தாக்குதல் நடைபெற்றதால் இரண்டு நாட்களுக்குள் அதே இடத்தில் தாக்குதலை யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

அதனை ஊகித்தே அதே பாதையில் புலிகள் சைக்கிள் குண்டை நிறுத்தி வைத்திருந்தனர்.

புலிகள் நினைத்தது போலவே படையினர் அதே இடத்தில் இன்னொரு தாக்குதலை உடனடியாக எதிர்பார்க்கவில்லை.

தாம் விழிப்பாக இருப்போம் என்று நினைத்து புலிகள் உடனடியாக தாக்க முனையார்கள் என்றுதான் படைத்தரப்பு நினைத்திருக்கும்.

06.08.99 வவுனியா-மன்னார் வீதியில் விசேஷ அதிரடிப்படை மீது இரண்டாவது குண்டுத் தாக்குதல் நடந்தது.

குறி சற்றுப் பிசகியதால் அதிரடிப்படையினர் ஆறுபேர் காயமடைந்தனர். இவர்களில் சிலரது நிலை ஆபத்தாக இருந்தது.

வவுனியா-மன்னார் வீதியில் இரண்டு நாட்களுக்குள் புலிகள் நடத்திய தாக்குதல்களால் பலியானவர்கள், காயமடைந்தோர் உட்பட குறைந்தது 50 படையினருக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

தமது தரப்பில் இழப்புக்கள் இன்றியே இரு தாக்குதல்களையும் புலிகள் நடத்தி முடித்துள்ளனர்.

வவுனியா-மன்னார் வீதி தாக்குதல்களில் இன்னொரு முக்கியத்துவமும் இருக்கிறது.

ரிமோட் கொன்ட்ரோல் முறையை பயன்படுத்தி புலிகள் நடத்தியுள்ள பாரிய குண்டுத் தாக்குதல்கள் இவைதான்.

இதற்கு முன்னர் நேரக்கணிப்புக் குண்டுகளையே புலிகள் பயன்படுத்தியுள்ளனர்.

கிளைமோர், கண்ணிவெடித் தாக்குதல்களுக்கு வயர்களை இழுத்துச் சென்று இலக்கு நெருங்கியதும் அமுக்கி வெடிக்க வைப்பார்கள்.

ரிமோட் கொன்ட்ரோலை பயன்படுத்துவதில் சில சிரமங்கள், குறி பிசகும் வாய்ப்புக்கள் இருப்பதாலேயே புலிகள் அதனை அதிகம் பயன்படுத்துவதில்லை.

ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குள்தான் ரிமோட் கொன்ட்ரோலை வைத்திருப்பவர் நிற்க வேண்டும். அதனால் பாரிய குண்டு வெடிப்பு என்றால் ரிமோட் கருவியுடன் நிற்பவரும் பாதிக்கப்படுவார்.

ரிமோட் கருவிக்கும் குண்டுக்கும் இடையே வேறு வாகனங்களோ, தடைகளோ வந்துவிட்டால் குண்டை வெடிக்க வைக்க முடியாது. ரிமோட் இயங்காது. தடை அகலும் வரை காத்திருக்க வேண்டும். அதற்குள் இலக்குத் தப்பிவிடும்.

வீட்டில் ரி.வியை ரிமோட் கொன்ரோலால் இயங்க வைக்கிறோம். அப்போது ரி.விக்கு குறுக்கே யாராவது நின்றால் ரிமோட் வேலை செய்யாது அல்லவா? அப்படித்தான் இதுவும்.

வயர் இழுத்து வெடிக்கவைப்பது, நேரக்கணிப்பு குண்டு போன்றவற்றில் மேற்படி சிரமங்கள் கிடையாது.

எல்லாவற்றையும்விட துல்லியம் கரும்புலித் தாக்குதல்தான். தடைகளைத் தாண்டி இலக்கை குறிவைத்து தாமே குண்டை இயக்குவதால் குறி பிசகாது. ஆனால் குறிப்பிட்ட கரும்புலி சற்று பதற்றமடைந்தால் மட்டுமே குறி தவறும்.

வவுனியா-மன்னார் வீதியில் ரிமோட் குண்டுத் தாக்குதல்களுக்கு வாய்ப்பு இருந்தமையால் அதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

வன்னியில் மேலும் முன்னேற படையினர் தயாரிப்புக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், வன்னியில் படையினரது முக்கிய பின்தளமான வவுனியா நகருக்குள் குண்டோசைகளும், கெரில்லாத் தாக்குதல்களும் ஆரம்பமாகிவிட்டன.

வவுனியாவில் மட்டுமன்றி நாட்டின் சகல பகுதிகளிலும் மறுபடி தமது நடவடிக்கைகளை புலிகள் விரிவுபடுத்த ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களுக்கு வன்னிச் சமரில் அனுபவம் பெற்ற படையணிகளை பிரபாகரன் அனுப்பி வைத்ததும் தக்க பயன் கொடுத்து வருகிறது.

அங்கு பொறுப்பேற்றுள்ள புதிய அணிகள் பரவலான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

ராசிக் மீதான தாக்குதலுடன் கிழக்கில் புதிய அணிகளது நடவடிக்கைகள் வேகம் பெற ஆரம்பித்தன.

வன்னிச் சமரில் முக்கிய சண்டைகள் பலவற்றில் புடம்போடப்பட்ட அணி ஜெயந்தன் படைப் பிரிவு.

கிளிநொச்சியில் ஓயாத அலை-2 நடவடிக்கையின்போது முக்கியமான தாக்குதல் முனைகளில் ஒன்றாக விசுவமடுப் பகுதி காப்பரண்கள் குறிவைக்கப்பட்டன.

அவற்றைக் கைப்பற்றாவிட்டால் கிளிநொச்சி படைத்தளத்தை கைப்பற்றும் இலக்கை எட்டுவது சிரமம்.

விசுவமடு காப்பரண்களை கைப்பற்றும் பொறுப்பு ஜெயந்தன் படையணியிடம் கொடுக்கப்பட்டது.

லெப்ரினன்ட் கேணல் சித்தா (மட்டக்களப்பு) தலைமையில் 50 பேர் கொண்ட அணி காப்பரண்களைத் தாக்கி ஊடறுத்தது. தமக்கு கொடுக்கப்பட்ட பணியை முடித்தது. ஆனால் உள் நுழைந்த 50 பேரில் இரண்டுபேர் மட்டுமே மீண்டனர்.

இவ்வாறான பல உக்கிரச் சண்டைகளில் பங்கேற்ற ஜெயந்தன் படைபிரிவின் அணியொன்றும் மட்டக்களப்பில் தற்போது நிலைகொண்டுள்ளது.







அதனால் மட்டக்களப்பில் தாக்குதல்கள் மேலும் தீவிரமாகும் என்றுதான் ஊகிக்க முடிகிறது.

09.08.99 அன்று நண்பகல் 12.50 மணிக்கு வாகரை இராணுவ முகாமுக்குள்ளேயே கரும்புலித் தாக்குதல் ஒன்று நடந்துள்ளது.

ஜெயந்தன் படைபிரிவின் கரும்புலிதான் இத் தாக்குதலையும் நடத்தி இருக்கலாம் என்று தகவல்கள் கூறுகின்றன.

படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு சவால் விடுவதுபோன்று, முகாமுக்குள்ளேயே புகுந்து, முகாம் அதிகாரி தாக்கி அழிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை கேலி செய்வது போல படையினரின் குகைக்குள்ளேயே கரும்புலி புகுந்து தாக்கியுள்ளார். இந்நிலையில் ஏனைய பாதுகாப்பு நிலவரங்கள் பற்றி அவநம்பிக்கை ஏற்படவே செய்யும்.

பலியான அதிகாரி முக்கியமானவர். இலங்கையின் இரண்டாவது இலகு காலாட்படையின் இரண்டாவது ஆணையிடும் அதிகாரியான கருணாநாயக என்பவரே பலியாகி உள்ளார்.

அகதிகளுக்கு உணவு வழங்கும்போது கரும்புலித் தாக்குதல் நடந்ததாக செய்திகளில் கூறப்பட்டது.

ஆனால், அகதிகளுக்கு உணவு வழங்குவது படையினரின் பணியல்ல.

வாகரை பகுதி முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1998ம் ஆண்டு ஜூன் மாதம் வாகரையை படையினர் கைப்பற்றினார்கள்.

வாகரையைக் கைப்பற்றிய பின்னர் அங்குள்ள மக்களை சந்தேகத்துடனேயே நடத்தினார்கள்.

தமது முகாமுக்கு மக்களை வரவழைத்து உணவுப் பொருள் விநியோகம் செய்ய வைத்ததும் கூட மக்களை கண்காணிப்பில் வைத்திருப்பதற்காகவே.

'நமது கட்டுப்பாட்டில்தான் நீங்கள் இருக்கிறீர்கள். நாம்தான் உணவு தருகிறோம்.' என்று மக்களுக்கு உணர்த்தவும் முகாமில் வைத்து விநியோகம் நடத்துவது உதவும்.

ஆனால் புலிகளுக்கு வாய்ப்பாக இருந்தது இந்த அணுகுமுறைதான். முகாமுக்குள் மக்களை இழுக்கும் படையினரின் திட்டத்தை வைத்தே, முகாமுக்குள் புகுவதற்கு திட்டமிட்டனர் புலிகள்.

09.08.99 அன்று உணவுப்பொருள் பெறுவதற்கு செல்பவர்களோடு உள்நுழைந்த கரும்புலி, முகாம் பகுதியை நோட்டமிட்டபடி வரிசையில் நின்றிருக்கிறார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வழித்துணையுடன் உலருணவு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

புலிகளுக்கு நிவாரணம் போகிறதா? புலிகளுக்காக யாராவது வந்து நிவாரணம் பெற்றுக் கொள்கிறார்களா? என்று படை அதிகாரிகள் கண்காணிப்பது வழக்கம்.

அன்றும் அப்படித்தான் மேஜர் கருணாநாயக்காவும், மற்றொரு மூத்த அதிகாரியான கருணாதாஸவும் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் நின்ற பகுதிக்கும், உணவு விநியோகம் நடைபெற்ற பகுதிக்கும் இடையே குறைந்தது 25 மீற்றர் தூரம் இருந்தது.

திடீரென்று வரிசையைவிட்டு விலகிய கரும்புலி புயல்போல பாய்ந்து சென்றிருக்கிறார்.

ஏனைய படையினர் இதனைக் கண்டு சுதாகரிப்பதற்கு இடையே இலக்கை எட்டிய கரும்புலி தாக்குதலை நடத்திவிட்டார்.

மேஜர் கருணாநாயக ஸ்தலத்திலேயே பலியானார். மற்றொரு அதிகாரியும் மூன்று படையினரும் காயமடைந்தனர்.

புலிகளின் தாக்குதல்கள் இவ்வாறு பரவலாகி வருவதால், வன்னியில் படைக் குவிப்புக்கும் பாதகம் ஏற்பட்டுள்ளது.

வன்னிக்குள் புலிகளை முடக்கிவிட்டதாக அரசாங்கம் கூறிவந்தது. அதனைப் பொய்யாக்கும் விதத்தில் புலிகளது நடவடிக்கைகள் விரிவடைந்து வருகின்றன.

இதற்கிடையே புலிகளது நடவடிக்கைகளை முறியடிக்க தமிழ்க் கட்சிகளது உதவிகளை படையினர் நாடியுள்ளனர்.

வவுனியாவில் தமிழ்க் கட்சிகள் சில படையினருக்கு உதவ முன்வந்துள்ளன. இவர்களது

## வன்னிப் பாதை திறப்பு பலிக்காத உத்தி

தகவலின்படி வவுனியாவில் கைதுகளும் நடந்திருக்கின்றன.

எனினும் வவுனியாவில் புலிகளது நடவடிக்கைகள் தொடர்வதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன.

புலிகள் பலரை வவுனியாவில் கைது செய்துள்ளதாக பொலிசார் கூறியுள்ளனர். இந்த அறிவிப்புக்களுக்கு சவால் விடும் விதமாக புலிகளது நடவடிக்கைகள் வவுனியாவில் மேலும் அதிகமாகவே செய்யும்.

★★★

வன்னிக்கான உணவு விநியோக பாதை திறக்கப்பட்டு விட்டது. மறுபடி எப்போது மூடப்படும் என்று தெரியவில்லை.

பாதையை மூடிவைத்து புலிகளையும், வன்னி மக்களையும் தனிமைப்படுத்தும் உத்தி முனை மழுங்கிய கத்தி போலாகிவிட்டது.

வவுனியா-யாழ் சாலையில்தான் தற்போதைய பாதை திறக்கப்பட்டுள்ளது.

இப்பாதையில் மாங்குளத்தில் 142ம் கட்டை வரை படையினர் நிலைகொண்டுள்ளனர்.

படையினரின் முன்னரங்க நிலைகளில் இருந்து கூப்பிடு தூரத்தில் புலிகளது முன்னரங்க காவல் அரண்கள் இருக்கின்றன.

வன்னிக்கான உணவு விநியோக பாதையைத் திறப்பது என்றால் வவுனியா-யாழ் சாலையில் புலிகள் மேலும் ஐந்து கிலோமீட்டர் பின்னால் செல்லவேண்டும் என்று படையினர் கூறினர்.

வன்னியில் முக்கிய முனைகளில் ஒரு கிலோமீட்டர் தூரத்தை கைப்பற்ற மாதக்கணக்காகவும் சண்டைகள் நடந்தது உண்டு.

மாங்குளத்தை கைப்பற்றிய படையினர் மேற்கொண்டு அரைக்கிலோ மீட்டர்கூட நகரமுடியாதளவுக்கு அப்படியே நிலைகொண்டுள்ளனர்.

ஆட்டிலெறிகள், டாங்கிகள், மற்றும் விமானக் குண்டுகளால் முடியாத காரியத்தை, உணவை ஆயுதமாக பயன்படுத்தி செய்து முடிக்க நினைத்தனர்.

ஆனால் படையினர் எதிர்பார்த்ததுக்கு மாறாக வன்னி மக்களுக்கு ஆதரவாக போராட்டங்கள் ஆரம்பமாகின.

சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தன.

03.07.99 அன்று ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் கவலை வெளியிட்டார்.

இதனையடுத்தே இலங்கை அரசு பொருளாதார முற்றுகையை தளர்த்த முன்வந்தது.

வன்னி மக்களது பட்டினிபற்றி மாதக்கணக்காக கவலைப்படாது இருந்த அரசாங்கம், சர்வதேச அழுத்தம் ஏற்படத் தொடங்கியதும் இறங்கிவந்தது.

இதன்பின்னரே வவுனியா-யாழ் சாலையில் புலிகள் 5 கிலோமீட்டர் தூரம் பின்னால் செல்லவேண்டும் என்ற நிபந்தனையை படையினர் கைவிட்டனர்.

இதனை நேரடியாக கூறாமல், பல யோசனைகளை புலிகளுக்கு அனுப்பி வைப்பது போலவும், அதில் ஒரு யோசனைக்கு புலிகள் இணங்கியது போலவும் கூறி கதையை முடித்துவிட்டனர். விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்ற கதைதான்.

முன்பே புலிகள் இதற்கு தயாராக இருந்தனர். இரு தரப்பு இராணுவ நலனுக்கும் பாதகமில்லாத முடிவு இது தான்.

மாங்குளத்தில் இரு தரப்பினதும் முன்னரங்க அரண்களுக்கு மத்தியில் உள்ள 50 மீட்டர் பகுதி பாதுகாப்பு வலயமாக இருக்கும். இங்கு இரு பக்கமும் வெள்ளைக் கொடிகள் நாட்டப் பட்டுள்ளன. இவை எல்லைக் கோடுகள் மாதிரி. எத்தரப்பு தாண்டினாலும் எல்லை மீறலாக கருதி மோதல் மூண்டுவிடும்.

கார்க்கில் பகுதியில் எல்லைக் கோடு இருப்பது மாதிரி, இங்கும் வன்னியில் எல்லைக் கோடு.

இந்த எல்லைக்கோடு மூலமும், வெள்ளைக் கொடியை பறக்கவிட்டது மூலமும் புலிகளை தமக்கு சமமான இன்னொரு நாட்டு இராணுவமாக அரசாங்கமும், படையினரும் ஏற்றுக்கொண்டதாகவும் ஆகிவிட்டது.

புலிகளைப் பயங்கரவாதிகள் என்று தடை செய்துள்ள அரசு, வன்னியில் புலிகளோடு எல்லை உடன்பாடு செய்து, சமாதானக் கொடி பறக்கவிட்டுள்ளது.

உடன்பாட்டை மதிக்கும் அமைப்பாக புலிகளை ஏற்றுக்கொண்டதால்தான் படைத்தளபதிகள் புலிகளோடு கடிதப் பரிமாற்றம் நடத்தியும் உள்ளனர். பயங்கரவாத அமைப்போடு இவ்வாறு கடிதப் பரிமாற்றம் நடத்தமாட்டார்கள்.

புலிகளோடு பேசி, புலிகளின் அனுமதியை நாடி நின்றது மூலம், வன்னியில் புலிகள் பலவீனமாகிவிட்டார்கள், காட்டுக்குள் முடங்கிவிட்டார்கள் என்ற தமது பிரசாரங்களை தாமே பொய்யாக்கியும் விட்டனர்.

வவுனியா-யாழ் சாலையை திறக்கப் போவதாகவும், புலிகளை ஒழித்துக்கட்டப் போவதாகவும் ஜயசிக்குறுய் படை நகர்வு ஆரம்பமானது.

ஆனால் இரண்டு வருடங்களாகியும் யாழ் சாலையில் 30 கிலோமீட்டரை மட்டுமே தாண்ட முடிந்தது. தற்போது அதே சாலையில் புலிகளுடன் பேச்சு நடத்தித்தான் பாதை ஒன்றை திறக்க முடிந்துள்ளது.

சில வாரங்கள் பட்டினி போட்டாலே போதும். உலக அழுத்தம் ஏற்படும் முன்பாக வன்னி மக்கள் புலிகளை நெருக்கி பணிய வைத்து விடுவார்கள். புலிகளும் வேறு வழியின்றி பின்னால் போய்விடுவர் என்று படைத்தரப்பு நினைத்திருக்கலாம்.

ஆனால் வன்னி மக்கள் நீண்டநாட்கள் உறுதியுடன் தாக்குப் பிடித்ததோடு, அரசை எதிர்த்தே ஆர்ப்பாட்டங்கள் பலவற்றை நடத்தினார்கள்.


அதனால்தான் நினைத்தபடி தமது உத்தியை படைத்தரப்பால் முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது.

இன்னொரு விடயம் இந்த உத்தியை முன்னெடுத்தது படைத்தரப்பாக இருந்தாலும் அரசாங்கத்திற்கு இதில் முழு உடன்பாடு இருந்தது.

ஆனால் படையினர் மட்டுமே இந்த விடயத்தை கையாளுவதுபோல கருதப்படும் விதமாக அரசாங்கம் புத்தியாக நடந்துள்ளது.

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



***சம்பந்தமானவருக்கு கடும்*** பாதுகாப்பு. சக்தியானவர் நேரடியாக உத்தரவிட்டுள்ளாராம். கூட்டான கட்சியில் சம்பந்தமானவரைவிட செல்வாக்குள்ள பிரதிநிதிகளும் இருக்கினம். அவைக்கே இல்லாத பாதுகாப்பும், அவைமிடம் இல்லாத கரிசனமும் இவர்மீது மட்டும் ஏன்? ஏனைய தமிழ்க் கட்சித் தலைவர்கள் தாக்கப்பட்ட போதுகூட அதிகாரத்தரப்பு அனுதாபம் தெரிவித்ததே தவிர, இப்படி பாதுகாப்பை இரட்டிப்பாக்கவில்லை. சக்தியானவர் தனது பிரிவையே பாதுகாப்புக் கொடுக்க இப்படி அனுப்பவும் இல்லை. இப்போது புரியுதோ சங்கதி?!

***நீலமானவர் கடைசியாக இத்தாலிக்குப்*** போய் விட்டு வந்ததாக கூட்டான கட்சி வட்டாரம் கூறியது. ஆனால் அன்னார் அமெரிக்காவிற்கும் போய் இருக்கிறார். அங்கு தங்கியிருந்தபோது சர்வதேச தமிழர் அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகள் சந்தித்து அவரது நிலைப்பாடுகளை காரசாரமாகக் கண்டித்தவையாம். அமெரிக்காவில் நீண்டகாலம் தங்கியிருந்தால் மட்டுமே கிடைக்கக்கூடிய 'கிறீன் கார்ட்'டும் சமீபத்தில் கிடைத்துவிட்டதாம். அந்தளவுக்கு அமெரிக்காவில் செல்வாக்கு. 'இம்மாத இறுதியில் குடும்பத்தோடு அமெரிக்கா சென்று சில காலம் அங்கு தங்குவதற்கான ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்ததாம்.

***'பொதியை எதிர்த்தோ,*** பொதிமீது அவநம்பிக்கை ஏற்படும் விதமாகவோ செய்திகள் போடவேண்டாம்' என்று தமக்கு அறிமுகமான பத்திரிகை மேலாளர்கள் சிலருக்கு அன்புக் கட்டளையிடப்பட்டுள்ளதாம். பொதி பற்றிய பரபரப்பை ஏற்படுத்தும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறும் கோரப்பட்டுள்ளதாம். சபைக்கு இம்மாதம் பொதிவரப்போகிறது என்ற புரளி கிளம்பிய பின்னணியும் அதுதானாம்!

***கழகத்தின் வடமராட்சி*** கிளை முடப்பட்டதற்கு உட்கலகமும் காரணமாம். பருத்தித்துறை சபையின் 'கிளி' கழக மாணிக்கத்தாருடன் முரண்டு பிடிக்கிறதாம். கழக சித்தரின் அன்பு கிளிக்குத்தானாம்.

***டமில் கட்சிகள்*** கொழும்பில் ஒன்றுகூடி, கடிதம் தயாரித்து சக்தியானவருக்கு பவ்வியமாக அனுப்பி வைத்தவையல்லோ? ஒரக்கண்ணால் கூட அதனைப் பார்த்ததாகத் தெரியவில்லை. நேரே குப்பைத் தொட்டி தானாக்கும்! கடிதம் கிடைத்தது என்று பதில் கூட...ம்ஹூம். ஆனால் ரெண்டு எழுத்தாருடன் பேசி, வெள்ளைக் கொடி அசைத்து பாதை திறந்தாச்சு. இப்போதாவது தங்களுக்குள்ள மரியாதையை டமில் கட்சிகள் உணருமோ? ரெண்டு எழுத்தாருடன் பேச முடிந்தால் டமில் கட்சிகளை கணக்கிலும் எடுக்கமாட்டினம் என்பதற்கு கண்கூடான உதாரணமல்லோ.

***வன்னியில் மாங்குளம்*** வரை சென்றுவந்த நிருபர்கள் கண்ணால் கண்ட காட்சிகள் சொல்லும் தரமன்று. இந்து, கிறிஸ்தவ ஆலயங்களை தொல்பொருள் ஆய்வில்தான் கண்டுபிடிக்க வேணும். ஆனால் புதிதாக பௌத்த கோயில்கள் இரண்டு தோன்றியிருக்கிறதாம். பிடித்தவர்கள் தமக்குப் பிடித்ததைத்தானே தூக்கிப் பிடிப்பினம்.

***நீலமானவரின் மரணச்சடங்கில்*** ஈ.பி.டி.பி. ரெலோ இயக்கத் தலைவர்களைக் காணமுடியவில்லை. தங்கள் உறுப்பினர்கள் பலியாகும்போது நீலமானவர் அனுதாபம்கூட சொன்னதில்லையாம். தங்கள் தலைவர் தாக்கப்பட்டபோது நீலமானவர் எட்டிக்கூடப் பார்க்கவில்லையாம். இரு கட்சிகளது வட்டாரங்களும் கூறிய கருத்துக்கள் அதுதான்.

***மிக முக்கியமான*** கேள்வி ஒன்றை ஒரு பிரமுகர் எழுப்பியிருக்கிறார். 'நீலமானவர் சமாதானத்துக்காகப் போராடியவர். தீர்வுக்காகப் பாடுபட்டவர் என்கிறீர்கள். அப்படியானால் அமெரிக்கா சென்று மூன்றுமாதம் கற்பிக்க ஏன் முடிவுசெய்தவர்? அதென்ன சமாதானத்துக்காக போராடியதற்கு ஓய்வு காலமோ? சரியோ, பிழையோ 24 மணி நேரமும் போராட்டத்தைப் பற்றியே சிந்திக்கிற தங்களை விமர்சித்தபடி இப்படி ஓய்வு பெறும் ஆட்கள் விமர்சித்தால் அவைக்கும் கோபம் வரும் தானே?' என்றெல்லாம் கேள்விகளால் துளைத்துப்போட்டார். உங்கள் பதில் என்ன?!

***வவுனியாவில்*** பதிலடிகள் மட்டுமல்ல; பதிலடியில் இரண்டு உயிர்களும் போயிருக்கின்றன. சிருடையினர் மன்னிப்புக் கேட்பினம். பின்னர் பின்னியும் எடுப்பினம் என்று சனமே கதைக்குது. டமில் கட்சிகள் மௌனம் ஏன்? பதிலடி சரியென்று சொல்லுகினமோ? இந்த விஷயங்களில் ஜனநாயக உணர்ச்சி கொப்பளிக்காதோ?!

***இந்தவாரப் பொன்மொழி.*** உபயம் நேரு.

> "தெளிவான சிந்தனை,
> மன உறுதி,
> சிறந்த செயல்முறை–
> இவை மூன்றும் இருப்பவர்கள்
> தொடர்ந்து வெற்றி பெறுவார்கள்!"



படிப்பகம்

www.padippakam.com

# மணலாற்றில் 28 நாள் சமர்

மணலாற்றுப் பகுதியில் 29.08.91 அன்று பாரிய படை நகர்வு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

ஆனையிறவுச் சமரில் புலிகள் கூறியதைவிட பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆயிரத்துக்கு மேற்பட்ட புலிகள் பலியாகி இருக்கலாம் என்று படைத்தரப்பு நினைத்தது.

அதனால் புலிகள் பலவீனமாக இருக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மணலாற்றை தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவர படை நகர்வை மேற்கொண்டனர்.

இந்த படை நகர்வைப் பற்றி குறிப்பிட முன்னர் மணலாறு பற்றி சுருக்கமாக கூறி விடவேண்டும்.

வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் இதயப்பகுதியாக இருப்பதுதான் மணலாறு பிரதேசம்.

முல்லைத்தீவு, திருமலை மாவட்டங்களுக்குள் அடங்கியிருந்த ஒரு வளம்மிக்க பூமியே மணலாறு.

வடக்கு-கிழக்கு நிலரீதியாக ஒன்றுபட்டிருந்தால் தமிழ் பேசும் மக்களது பலத்தை சிதைக்க முடியாது என்பதால், நிலத்தை துண்டாட தென்னிலங்கை ஆட்சியாளர்கள் திட்டமிட்டனர்.

வடக்கு-கிழக்கு நிலத்தொடர்பை துண்டிக்கும் விதமாக மணலாற்றில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன.

மணலாற்றின் பெரும் பகுதியை சிங்களக் குடியேற்றம் விழுங்கிய பின்னர் அதன் செந்தமிழ்ப் பெயரும் வெலி ஓயா என்று சிங்களப் பெயரானது.

ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிக்காது இருந்திருந்தால் மணலாறு மட்டுமல்ல, வன்னியின் பெரும் பகுதிகூட குடியேற்றத்தால் விழுங்கப்பட்டிருக்கும்.

மணலாற்றில் படை முகாம்கள் குடியேற்றத்திட்டத்திற்கு பாதுகாப்பாக இருந்து வருகின்றன.

அவ்வாறிருந்தும் மணலாற்றில் புலிகளது மேலாண்மையும் இருந்து வருகிறது.

எறிகணைகள் காட்டை நோக்கி வீசப்பட்டன. வான் பரப்பில் தோன்றிய குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

படைபலத்தைவிட, வெடி மருந்து பலத்தையே மின்னல் நடவடிக்கை தனது முதுகெலும்பாக கொண்டிருந்தது.

அரசு புதிதாக கொள்வனவு செய்த சீன விமானங்களும் மணலாற்றுச் சமரில் பயன்படுத்தப்பட்டன.

மணலாற்றுப் பகுதியில் இருந்த குடியேற்றங்களில் இருந்தும், முகாம்களில் இருந்தும் 'பிறை' வடிவில் மணலாற்றுக் காட்டுக்குள் இராணுவம் புக முயன்றது.

இராணுவம் புகவசதியாக ஆட்டிலெறித் தாக்குதல்கள் மூலம் பாதை அமைக்கப்பட்டது.

படையினர் எதிர்பார்த்ததுக்கு மாறாக புலிகள் பெரும் எதிர்ப்பை காட்டினார்கள்.

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு புலிகள் தரப்பில் முக்கிய பங்கு வகித்தது.

கடும் சண்டைகள் மத்தியில் மணலாற்று காட்டின் முகப்பிலும், சற்று உள்ளேயும் இருந்த புலிகளது முகாம்கள் படையினரால் கைப்பற்றப்பட்டன.

ஆயினும் அங்கு ஆயுதங்களோ, வேறு இராணுவ உபகரணங்களோ படையினரால் கைபபற்றப்படவில்லை.

பெருமளவான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக அரசாங்கம் கூறியது. அரச செய்தி தொடர்பு சாதனங்களும் அவ்வாறே கூறிக் கொண்டிருந்தன.

'ஆனையிறவுச் சமரைவிட மணலாற்றுச் சமர் பாரியது' என்று படையினர் கூறியிருந்தனர்.

தொடர்ந்து 28 நாட்கள் சண்டை நடந்தது.


ஆனையிறவுச் சமர் 31 நாட்கள் நடந்தது.

ஆனையிறவில் பயன்படுத்திய வெடி பொருட்களைவிட மணலாற்றில் படையினர் பயன்படுத்தியது அதிகம்.

விரைவாக மணலாற்றுக் காட்டை கைப்பற்றவே 'மின்னல்' என்று பெயர் சூட்டப்பட்டது.

ஆனால் 27 நாட்களின் பின்னரே மணலாற்றுக் காட்டுக்குள் இராணுவம் நுழைய முடிந்தது.

இந்த 27 நாள் சண்டையில்




விளைச்சல் நிலங்கள் பெருமளவில் நாசமாகின. வீடுகள் பெருமளவில் அழிந்தன.

காட்டுக்குள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதல்களால் பெருமளவு காட்டு மரங்கள் நாசமாகின.

மணலாற்றுக் காட்டுக்குள் புலிகளது பிரதான முகாம்களை படையினர் நெருங்க முடியவில்லை.

படையினர் தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டன. தொடர்ந்து காட்டுக்குள் முன்னேறினால் புலிகளது தாக்குதல்கள் பலமாக இருக்கும் என்று கருதி, படையினர் தமது பழைய நிலைக்கு திரும்பினார்கள்.

29.08.91 ஆரம்பித்த 'மின்னல்' 26.09.91 அன்று முடிவுக்கு வந்தது.

இச் சமரில் புலிகள் தரப்பில் 230 புலிகள் வரை பலியானார்கள். படையினர் தரப்பில் 300க்கு மேற்பட்டோர் பலியானார்கள்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மூன்றாவது பொறுப்பாளராக இருந்தவர் லெப்டினன்ட் கேணல் ஜஸ்ரின்.

17.09.91 அன்று படையணி ஒன்றுடன் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு கடுமையாக மோதியது.

மணலாற்றின் ஊடாக திருமலைக்கு புலிகள் சென்று வருகிறார்கள்.

மணலாற்றில் புலிகளை ஓரம்கட்டி அங்குள்ள வளமான காடுகளை கைப்பற்றும் நோக்கத்தோடுதான் படை நடவடிக்கை திட்டமிடப்பட்டது.

இந்தியப் படைக்கு எதிராக புலிகளின் போருக்கு தளமாக இருந்தது மணலாறு மாவட்டம்தான்.

மணலாற்றுக் காட்டுக்குள்தான் பிரபாகரன் தங்கிருந்து போரை வழி நடத்தினார்.

அப்போது பல சமர்களை மணலாறு சந்தித்தது.

இந்திய கூர்க்கா படையினர் மணலாறு காடுகளுக்குள் புகுந்தனர். புலிகளைத் தேடினார்கள்.

'அவர்கள் கத்தி எடுத்தால் இரத்தம் காணாது உறைக்குள் திரும்பாது' என்று கூர்க்கா படையினரைப் பற்றி கூறுவார்கள்.

அந்தக் கூர்க்கா படையினருக்கு மணலாற்றுக் காடுகளுக்குள் அதிர்ச்சி காத்திருந்தது.

புலிகளின் தாக்குதலால் பலநூறு கூர்க்கா படையினர் மணலாற்றுக் காடுகளுக்குள் பலியானார்கள்.

இந்தியப் படையினருடான போரில் புலிகளின் வெற்றிக்கு மணலாற்று காடுகளே முக்கிய பங்கு வகித்தன.

எனவே மணலாற்றில் புலிகளது பிடியை இல்லாதொழித்தால், எதிர்காலத்தில் இராணுவரீதியாக தமக்கு சாதகம் ஏற்படும் என்று படைத்தரப்பு நினைத்தது.

'ஒப்பரேசன் மின்னல்' என்று இராணுவ நடவடிக்கைக்கு பெயர் சூட்டியிருந்தனர்.

பெயருக்கு ஏற்பவே இடி மின்னலாகத்தான் நடவடிக்கை காணப்பட்டது.

பெருந்தொகையாக வெடி மருந்துக்களையே பயன்படுத்தினார்கள்.

எடுத்த எடுப்பிலேயே பெருமளவான

**மண்மீட்பு நிதி திரட்டலை முன்னிட்டு போர் செலவில் ஒரு பகுதியை விளக்க புலிகள் 1991 இல் வெளியிட்ட பட்டியல் (அன்றைய விலை):**

| | | |
|---|---|---|
| ஏ.கே.ரகதுப்பாக்கி | 01 | - 15 ஆயிரம் ரூபா |
| இதற்கான ரவை | 01 | - 10 ரூபா |
| ஆர்.பி.ஜி. ஒன்று | 01 | - 40 ஆயிரம் ரூபா |
| இதற்கான எறிகணை | 01 | - 12 ஆயிரம் ரூபா |
| சாதாரண எறிகணை | 01 | - 5 ஆயிரம் |
| விமான எதிர்ப்புத் துப்பாக்கி ரவை | 01 | - 800 ரூபா |
| கடலில் புலிகள் பயன்படுத்தும் படகின் விலை | | - 25 இலட்சம் |
| டோரா சண்டைப் படகின் விலை | | - 5 கோடிரூபா |

தனது அணிகளை திறம்பட வழி நடத்திய ஜஸ்டின் படையணிகளுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தி, அவர்களது முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தினார்.

இச் சண்டையின்போது ஜஸ்டின் பலியானார். தமது சிறந்த தளபதிகளில் ஒருவரைப் புலிகள் இழந்தனர்.

ஜஸ்டினின் சொந்தப் பெயர் பொன்னுச்சாமி பாஸ்கரன். காங்கேசன் துறை தையிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். பலியாகும்போது 29 வயது.

மணலாற்றுச் சமர் படையினர் தீர்மானித்த இலக்கை எட்டாமலேயே முடிவடைந்தது.

91ம் ஆண்டில் நடைபெற்ற இறுதியான பெரும் சமர் இதுதான்.

மணலாற்று காடுகளை கைப்பற்றும் இலக்கை படையினர் எட்டியிருந்தால், மணலாறு முழுவதும் குடியேற்றத்தால் நிரம்பியிருக்கும்.

தற்போது (1999) வன்னிச் சமரில் புலிகளுக்கு பெரும் பாதகம் ஏற்பட்டிருக்கும். படையினருக்கு இராணுவரீதியாக ஆதாயமாக இருந்திருக்கும்.

நீண்டகால அரசியல், இராணுவ நோக்கங்களை மனதில் கொண்டே புலிகளும் மணலாற்று சண்டையில் பெரும் உயிர்ப்பலி கொடுத்து சண்டையிட்டனர்.




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## தீர்வு யோசனைகள்

பிரேமதாசா அரசில் அமைச்சராக இருந்த தொண்டமானின் ஆலோசகர்கள் இனப் பிரச்சனைக்கு தீர்வு யோசனை ஒன்றை தயாரித்தனர்.

தொண்டமானின் யோசனைகள் என்ற பெயரில் அவை புலிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

"யாழ்ப்பாணம் வாருங்கள். நாம் பேசலாம்" என்று புலிகள் அழைத்தனர்.

இந்த ஆண்டு முடிவதற்குள் யாழ்ப்பாணம் செல்லுவேன். இந்த பொங்கலுக்கு யாழ்ப் பாணம் செல்லுவேன் என்று ஒவ்வொரு முறையும் காலக்கெடு விதித்துக் கொண்டிருந்தார் தொண்டமான்.



விமான எதிர்ப்புத் துப்பாக்கியுடன்

தொண்டமானின் யோசனை அப்படி ஒன்றும் முன்னேற்றமானதல்ல. அப்படியிருந்தும் அதனை சிங்களப் பேரினவாதிகள் எதிர்த்தனர்.

சிங்களப் பேரினவாதிகள் எதிர்ப்பதனால் மட்டும் தீர்வு யோசனை ஒன்று சிறந்தது என்று அர்த்தமல்ல என்பதற்கு தொண்டாவின் யோசனையும் ஒரு உதாரணம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைவிட தொண்டாவின் யோசனையில் ஒருபடி மேலாக அதிகாரங்கள் காணப்பட்டன.

எனினும் தொண்டாவின் யோசனையும் ஒற்றையாட்சி அமைப்பு முறையைத்தான் அடிப்படையாக கொண்டிருந்தது.

தொண்டமானின் யோசனைகளை எதிர்த்து பேரினவாதிகள் கிளர்ந்தெழுந்தனர்.

'தொண்டமான் புலிகளோடு சமாதானம் பேசப்போவதாக இருந்தால் தமது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு போகட்டும்.' என்று பௌத்த மகாசங்கம் அறிக்கை வெளியிட்டது.

தொண்டாவின் யோசனைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று அரசாங்கம் கூறிவிட்டது.

என்னதான் வீரமாகப் பேசினாலும் தொண்டமான் பயந்துதான் போனார். தனது யாழ்ப்பாணப் பயணம் தனது அமைச்சர் பதவிக்கு ஆபத்தாக முடியலாம் என்பதே அவரது பெரும் கவலை.

அதனால் தனது யாழ் பயணக் கதையை மெல்லக் கைவிட்டார்.

இதனையடுத்து புலிகளது உலகத் தமிழர் பின்வருமாறு எழுதியிருந்தது.

"தொண்டமான் தனது தோல்வியை மறைக்க எப்படித்தான் வீராவேசமான வசனங்களை நாடக பாணியில் பேசினாலும், ஜனாதிபதி பிரேமதாசா அரசின் பக்க பலம் ஒத்துழைப்பு இன்றி அவரால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது.

பதவியா? தன்மானமா? இல்லை தமிழ் மானமா? என்று வரும்போது தொண்டமான் எதனைத் தேர்ந்தெடுப்பார் என்பதை விளக்கத் தேவையில்லை.

தொண்டமான் ஒரு பழுத்த தொழிற்சங்கவாதி என்பதில் சந்தேகம் இல்லை. அதேபோல அவர் ஒரு தீர்க்கமான அரசியல்வாதி என்பதிலும் இரண்டு கருத்துக்கள் இருக்கமுடியாது.

இதிலும் ஒரு புதுமை. உலகில் தோட்டத் தொழிலாளர்களுக்கு தலைமைதாங்கும் ஒரேயொரு தோட்ட முதலாளியும் இவரேதான்.

ஒரு அரசியல் தீர்வுக்கு தொண்டா முன் வைத்துள்ள யோசனைகள் அப்படி ஒன்றும் புரட்சிகரமானவையல்ல.

தமிழ்-சிங்களவர் இடையிலான யுத்தத்தை முடிப்பதற்கும், சமாதானத்தை தோற்றுவிக்கவும் தமிழினத்தின் சார்பாக முன்வைக்கப்படும் மூன்று அடிப்படைக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

அ. தமிழ் ஈழம் (வடக்கு-கிழக்கு) தமிழரின் பாரம்பரிய பூமி என்பதை அங்கீகரித்தல்.

ஆ: தமிழினம் ஒரு தேசிய இனம் என்பதை அங்கீகரித்தல்.

இ: தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

இந்த மூன்று அடிப்படைகளையும் அங்கீகரிக்காத எந்தத்தீர்வும் தமிழினத்தால் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

1985ம் ஆண்டில் திம்புவில் நடந்த மாநாட்டில் தமிழர்களது சார்பாக இந்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இவற்றை ஜே.ஆர். அரசாங்கம் அங்கீகரிக்க மறுத்தமையாலேதான் திம்பு பேச்சு தோல்வியில் முடிந்தது.

ஆயுதம் ஏந்திய சில போராளிக் குழுக்கள், இடையில் சோரம்போய் தமிழ் ஈழ விடுதலையையும், தன் மானத்தையும், தமிழ் மக்களது நலன்களையும் முற்றாக அழிக்க கங்கணம் கட்டி நிற்கின்றன.

தம் வயிற்றைக் கழுவுவதற்கு எட்டப்பர்களாக, காக்கை வன்னியர்களாக மாறிவிட்டன.

தமிழ்க் குழுக்கள் காட்டிக் கொடுத்தாலும் தமிழினத்தின் அடிப்படைக் கோரிக்கைகளும், அதற்கான ஆயுதப் போராட்டமும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்." என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஒரே நேரத்தில்

புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கமும் தொண்டாவின் திட்டம் பற்றி யாழ் நகரில் கருத்துக் கூறியிருந்தார்.

"அமைச்சர் தொண்டமான் யாழ் வந்தால், அவரது திட்டம் குறித்து விரிவாக பேசலாம்.

தொண்டமானின் திட்டம்பற்றி அரசும், எதிர்க்கட்சிகளும் என்ன முடிவைக் கூறுகின்றன என்பதையும் நாம் கவனித்து வருகிறோம்.

பேச்சுவார்த்தை மூலமாக அரசியல் தீர்வைக் காண்பதே தகுந்த வழி என்று அரசாங்கம் கருதுமானால், சமாதான சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும்.

போரையும், சமாதானப் பேச்சையும் ஒரே நேரத்தில் நடத்தலாம் என்று அரசாங்கம் எண்ணுமானால், அது விவேகமற்ற செயலாகும்" என்று அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார்.

"இராணுவ ரீதியில் புலிகளை என்றுமே அழித்துவிடவோ, அடக்கிவிடவோ, முடியாது. கடந்த 15 ஆண்டு காலப்போர் அனுபவத்தில் இருந்து சிறீலங்கா ஆட்சியாளர்கள் இந்த உண்மையை இன்னும் உணராமல் இருக்கிறார்கள்" என்றும் பாலசிங்கம் கூறியிருந்தார்.

## மீட்பு நிதி

போர்ச் செலவுகளை ஈடுசெய்வதற்காக 'மண் மீட்பு நிதி' என்ற பெயரில் நிதி திரட்டும் திட்டம் ஒன்றை புலிகள் ஆரம்பித்தனர்.

புலிகளது நிதிப் பிரிவு பொறுப்பாளரான தமிழேந்திதான் மண்மீட்பு நிதி திட்டத்துக்கும் பொறுப்பாக இருந்தார்.



பிரபா

ஒவ்வொரு குடும்பத்திடம் இருந்தும் இரண்டு பவுண் தங்கம் அல்லது பத்தாயிரம் ரூபா பெறுவது என்று புலிகள் தீர்மானித்தனர்.

வறிய குடும்பங்கள், போராளிகள், மற்றும் மாவீரர் குடும்பங்களிடம் இருந்து நிதி கோரப்படவில்லை.

தங்கம் அல்லது பணத்தை கடனாகப் பெற்று மாதாந்தம் நூறுபேர் வீதம் திருப்பிக் கொடுக்கவும் புலிகள் தீர்மானித்தனர்.

மண்மீட்பு நிதி கொடுத்தவர்களின் பெயர்களை குலுக்கல் முறையில் தெரிவு செய்து திருப்பிக்கொடுத்தும் வந்தனர்.

புலிச் சின்னம் பொறித்த தங்க நாணயங்களாகவும் திருப்பிக்கொடுத்தனர்.

யாழ் மாவட்டத்தில் அப்போது சுமார் இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் குடும்பங்கள் இருந்தன.

அதில் சுமார் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் குடும்பங்கள் வசதியற்றவர்களாகக் கருதப்பட்டன.

மிகுதி ஒரு இலட்சம் குடும்பங்களிடமே மீட்பு நிதி பெறத்தீர்மானித்தனர்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# நீலனின் மறைவும் மறுபக்க உண்மைகளும்

அலசுவது - இராஜதந்திரி

நீலன் திருச்செல்வம் கரும்புலித் தாக்குதலில் பலியாகிவிட்டார். அதனையடுத்து அவர் பற்றிய விபரிப்புக்கள் வெளியாகி வருகின்றன.

ஒருவர் இறந்த பின்னர் அவரது குறைகளும் மறைந்து போகின்றன என்ற சம்பிரதாயம் பொதுவாழ்வில் ஈடுபடுகிறவர்களுக்கு பொருந்தாது.

அவ்வாறு பொருந்துமாயின் ஹிட்லர் முதற்கொண்டு நம்நாட்டில் ஜே.ஆர்.ஜெவர்த்தனாவரை ஒப்பற்ற தலைவர்கள், மனிதாபிமானிகள் என்றே நம்மால் போற்றப்பட வேண்டியவர்களாகிவிடுவர்.

புலிகளை பயங்கரவாத சக்திகளாக சித்தரிப்பதற்கே ஆட்சியாளர்கள் நீலனின் மரணத்தை பயன்படுத்த முனைந்துள்ளனர்.

உள்நாட்டிலும், வெளியுலகிலும் தமது கட்சிக்கு மேதாவித்தனமான தோற்றப்பாட்டை ஏற்படுத்த முனையும் கூட்டணியினரும் நீலனை பெரும் மேதாவியாக சித்தரிக்க ஆர்வம் காட்டுகின்றனர்.

நீலனிடம் தனிப்பட்ட முறையில் பலன் பெற்ற பத்திரிகை விமர்சகர்களும் நீலனை போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

தமிழ் பத்திரிகைகளைவிட சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள்தான் நீலனின் இழப்பு தொடர்பாக பக்கம் பக்கமாக எழுதிவருகின்றன.

நீலனின் மறைவுக்கு சில நாட்கள் முன்னதாகத்தான் மன்னாரில் ஜுடா கமாலிட்டா என்னும் தமிழ்ப் பெண் படையினரால் மிகக் கொடூரமாக பாலியல் வதைக்கு உள்ளானார்.

இந்தக் கொடூரம் பற்றி சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் குறிப்பிடவேயில்லை. படையினரால் நிகழ்த்தப்படும் பாலியல் வல்லுறவுகள், படுகொலைகள் தொடர்பாக சிங்கள வெகுஜன தொடர்பு சாதனங்கள் சிறிதும் அனுதாபம் காட்டுவதில்லை.

குடாநாட்டில் செம்மணியில் பாம்புத் தலைகளும், எலிகளது உடல்களுமே கிடக்கின்றன என்று அரச செய்தி ஊடகங்கள் முதற்கொண்டு ஐலண்ட் போன்ற பத்திரிகைகளும் தலைப்புச் செய்திகள் வெளியிட்டிருந்தன.

இதே செய்தி ஊடகங்கள் நீலனின் மறைவு குறித்து கடும் கரிசனம் காட்டியிருப்பதுடன் தமது பெரும்பாலான பக்கங்களை ஒதுக்கியிருப்பதும் ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும்.

இச் சக்திகள் அனைத்துமே நீலனுக்காக அனுதாபப்படுவதைவிட, புலிகளை பயங்கரவாதிகளாக காண்பித்து, சர்வதேச ரீதியாக தமிழர் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக சித்தரிப்பதற்கே முன்னிற்கின்றன.

தூரதிஷ்டவசமான உண்மை யாதெனில், நீலன் உயிருடன் இருந்தபோது செய்த பணியைத்தான், அவரது மறைவை வைத்தும் மேற்கொள்ள முனைகிறார்கள்.

தமிழ் பேசும் தரப்புக்காக உண்மையாக பாடுபட்ட தலைவர்களை சிங்களப் பேரினவாதிகளும், சிங்கள செய்தி ஊடகங்களும் பயங்கரமானவர்களாகவே வசைபாடி வந்துள்ளன.

தமிழ் பேசும் தரப்பின் நலன்களை பேரினவாத நலன்களுக்கு கீழ்ப்படுத்த தயங்காத தமிழ்ப் பிரமுகர்களைத்தான் பேரினவாதிகள் வஞ்சகப் புகழ்ச்சி செய்து, தமிழ்பேசும் தரப்பின் பலத்தை அழிக்க பயன்படுத்தி வந்துள்ளனர்.

அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு ஆங்கிலத்தில் விளக்கமளிக்க தெரிந்த தமிழ்ப் பிரமுகர்களை புத்திஜீவிகள், கல்விமான்கள், கனவான்கள் என்று சிங்கள பேரினவாதம் புகழுவதற்கு தயங்கியதில்லை.

உலகில் பலநாடுகளில் இதே தந்திரத்தையே ஒடுக்குமுறை அரசுகளும், ஒடுக்கும் இனங்களும் கையாண்டு வந்துள்ளன.

ஒடுக்கப்படும் இனத்தின் மத்தியில் தமக்கு அடிபணியத் தயாரான சிலரை தலைப்பாகை கட்டி தலைவர்களாக மாற்றுவார்கள். அவர்களை புகழ்ந்து பெரிய சக்திகளாக சித்தரிப்பார்கள். இதன்மூலம் ஒடுக்கப்படும் மக்களிடம் அவர்கள் பற்றிய பிரமிப்பை ஏற்படுத்தி, பின்னர் அப்பிரமுகர்கள் ஊடாக அடிமைச் சாசனங்களை மக்களிடம் திணிப்பார்கள்.

இலங்கை அரசியலில் நீலனின் பாத்திரமும் இத்தகைய உத்திகளோடுதான் சிங்கள அரசியல் தலைமைகளால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

நீலன் குடும்பத்தின் பூர்வீகம் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை. ஆனால் நீண்டகாலம் முன்பே நீலனின் முதாதையர் வடக்கு-கிழக்கு தொடர்புகளை இழந்து விட்டனர்.

நீலனுக்கு தமிழ் ஒழுங்காக பேசவராது. ஆங்கிலத்தில் சிந்தித்து, ஆங்கிலத்தில் பேசும் ஒரு அந்நியத்தனமே அவரிடம் காணப்பட்டது.

தமிழர்களைவிட சிங்கள மேல் தட்டு வர்க்கத்தினருடன்தான் நீலனின் சகவாசம் அதிகமாக இருந்தது.

கொழும்பில் நீலனின் குடும்பத்தாரின் வீட்டருகேதான் பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் இல்லமும் அமைந்திருந்தது.

இன்றைய ஜனாதிபதி சந்திரிக்காவும் நீலனும் சிறுபிராயத்து தோழர்கள். சின்ன வயதில் ஒடிப்பிடித்து விளையாடியவர்கள்.

நீலனின் தந்தையாரான மு.திருச்செல்வம் தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவராவர். இவர் பற்றியும் மிகையான புகழாரங்கள் கூறப்பட்டு வருகின்றன.

சத்தியாக்கிரகங்கள், உண்ணாவிரதங்கள் போன்ற போராட்டங்கள் முலமாக தமிழ் மக்களிடையே செல்வாக்கு பெற்ற கட்சியே தமிழரசுக் கட்சியாகும்.

ஆனால் அமரர் மு.திருச்செல்வம் அத்தகைய போராட்டங்களில் ஈடுபட்ட ஒருவரல்ல. கண்ணீரும், வியர்வையும், செந்நீரும் சிந்தி கட்சியை வளர்த்தவருமல்ல.

தமிழரசுக் கட்சி நன்கு வளர்ந்த பின்னர் 1960களில் மு.திருச்செல்வம் அக் கட்சிக்குள் பிரவேசித்தார். எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் நண்பர் என்ற கோதாவில்தான் திருச்செல்வம் கட்சிக்குள் ஊடுருவினார்.

கொழும்பில் இராணி அப்புக்காத்தான திருச்செல்வம் சிங்களத் தலைவர்களுடன் நன்கு பரிச்சயமான ஒருவராக விளங்கினார். சிங்களத் தலைவர்களால் புத்திஜீவி என்றும் மதிக்கப்பட்டார்.

எனவே, சிங்களத் தலைவர்களுக்கும், தமிழரசுக்கட்சித் தலைமைக்கும் இடையேயான புரோக்கராகவே திருச்செல்வம் தன்னை நியமித்துக் கொண்டார்.

சிங்களத் தலைவர்களுடன் மாலை வேளைகளில் விருந்துண்டபடி தந்தை செல்வாவின் அபிப்பிராயங்களை அவர்கள் காதில் போடுவது, பின்னர் அவர்கள் கூறியதை தந்தை செல்வாவின் காதில் போடுவது என்பதுதான் திருச்செல்வத்தின் புரோக்கர் வேலையாக அமைந்திருந்தது.

1960ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ, ஐ.தே.கட்சிக்கோ அரசாங்கம் அமைக்க ஆசனங்கள் போதவில்லை. அப்போது இரு கட்சிகளுமே திருச்செல்வம் ஊடாகவே தமிழரசுக் கட்சியோடு பேரம் நடத்தியிருந்தன.

பின்னர் 1965இல் டட்லி தலைமையிலான அரசுக்கு தமிழரசுக் கட்சி ஆதரவளிப்பதற்கும் திருச்செல்வமே முக்கிய காரணமாக இருந்தார். அதே அரசில் அவரது புரோக்கர் வேலைக்கு பரிசாக அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

அமரர் திருச்செல்வம் திருமலை இந்து ஆலய விவகாரத்தால் அரசுடன் மோதி தனது அமைச்சர் பதவியை தூக்கியெறிந்தவர் என்று தற்போது கூறப்படுகிறது.

ஆனால் அது உண்மையல்ல. டட்லி அரசு தமிழரசுக் கட்சியை துச்சமாக மதிக்கத் தொடங்கியிருந்தது. டட்லி அரசுமீது தமிழ மக்களுக்கும் நம்பிக்கையீனம் ஏற்பட்டு வந்தது. இவற்றையெல்லாம் உணர்ந்த தந்தை செல்வா அவர்கள் திருச்செல்வத்திடம் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யுமாறு கூறியிருந்தார்.

எனவே தமிழ் மக்களது அபிமானத்தைப் பெறத்தக்கதாக திருமலை ஆலய விவகாரத்தை சாட்டாக வைத்து பதவி விலகினார் திருச்செல்வம்.

ஆனால் டட்லி அரசில் திருச்செல்வம் அமைச்சராக இருந்தபோதுதான் திருமலை துறைமுகத்தை தேசியமயமாக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டமே திருமலை மண்ணை தமிழர்களிடம் இருந்து பறிப்பதற்கு வழிவகுத்தது.

அது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு நீண்ட கால நெருக்கடியை உண்டாக்கும் சட்டம் ஒன்றுக்கும் திருச்செல்வம் ஆதரவளித்திருந்தார்.

இலங்கையில் வதியும் ஆட்களைப் பதிவு செய்யும் சட்டமே அதுவாகும். இச் சட்டமூலத்தை ஆதரிப்பதற்கு தனது கட்சியின் அனுமதியைக்கூட திருச்செல்வம் பெறவில்லை என்பது மிக முக்கியமானதாகும்.

பெரும் புத்திஜீவி என்று தன்னைக் கருதிய திருச்செல்வத்தை பிரதமர் டட்லி மிகச் சுலபமாக தனது வலையில் விழ வைத்திருந்தார்.

ஆட்களைப் பதிவு செய்யும் இச் சட்ட மூலமே அடையாள அட்டை நடைமுறைக்கு வருவதற்கு வழிகோலியது.

இந்த ஆட்பதிவு சட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்தில் உரையாற்றினார் ஊர்காவத்துறை பாராளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம். இதனால் அவரை தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றினார்கள்.

1965இல் போதிய அதிகாரமே இல்லாத மாவட்ட சபைகளை உருவாக்குவதற்கு வெள்ளை அறிக்கை ஒன்றை தயாரித்தவரும் திருச்செல்வம்தான்.

இந்த வெள்ளையறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது அதனை எதிர்த்தும் வி.நவரத்தினம் முழக்கமிட்டார்.

'தமிழ் மக்களை காலம் காலமாக சிங்களத் தலைமைகள் எமாற்றி வந்துள்ளன. இப்போது டட்லி-செல்வா ஒப்பந்தமும் தமிழரை ஏமாற்றிவிட்டது' என்று நீண்ட உரையொன்றை



வி.நவரத்தினம் ஆற்றியிருந்தார்.

அமரர் மு.திருச்செல்வம் இவ்வாறு பல்வேறு புரோக்கர் வேலைகள் மூலம் தனது பெயரையும், புகழையும், சிங்களத் தலைமைகளோடு இருந்த தனிப்பட்ட உறவுகளையுமே தக்கவைக்க அரும்பாடுபட்டார்.

அமரர் மு.திருச்செல்வத்தின் புரோக்கர் அரசியல் பற்றி மேலும் விபரிக்க இது சமயமல்ல. ஆனால் தனது தந்தையின் அடிச்சுவட்டில்தான் நீலனது அரசியலும் தொடர்ந்தது.

ஜே.ஆர் அரசுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையேயான புரோக்கராகவே நீலனின் அரசியல் பிரவேசமும் ஆரம்பமானது.

டட்லி அரசுக்காக மு.திருச்செல்வம் மாவட்ட சபை வெள்ளையறிக்கையை தயாரித்திருந்தார். அவரது தனயனான நீலன் திருச்செல்வம் ஜே.ஆர்.அரசுக்காக மாவட்ட அபிவிருத்திச் சபை திட்டம் ஒன்றை தயாரித்திருந்தார்.

இத் திட்டத்தை கூட்டணியினரும் ஏற்க முன்வந்தபோதே போராளி அமைப்புக்கள் கூட்டணிமீது இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் இழந்தனர்.

இங்குதான் நீலனின் முக்கியமான பின்னனியை நாம் நோக்கியாக வேண்டும்.

நீலன் அமெரிக்காவில் கல்வி கற்றவர். சிறந்த திறமைசாலி. அக் கட்டத்தில் அமெரிக்க சி.ஐ.ஏ உளவு நிறுவனமும், சோவியத் நாட்டின் கே.ஜி.பி. உளவு நிறுவனமும் போட்டா போட்டியாக இருந்தன.

மனித உரிமை நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள், அபிவிருத்தி பணிகள் போன்றவற்றில் ஈடுபடுகின்ற கல்விமான்கள், புத்திஜீவிகள் போன்றோரையும் வளைத்து பிடிப்பதில் போட்டி போட்டன.

அமெரிக்காவில் கல்வி கற்ற நீலனை அமெரிக்க சி.ஐ.ஏ. தனது ஆதரவாளராக மாற்றிக்கொண்டது.

இலங்கைத் தீவில் இனப்பிரச்சனையை சாட்டாக வைத்து இந்தியா எதிர்காலத்தில் தலையிடலாம். அவ்வாறு தலையிட்டால் இலங்கையில் அமெரிக்காவின் பிடி தளரும். அமெரிக்காவுக்கு தளம் கொடுக்காதே என்று இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்கலாம்.

எனவே, ஜே.ஆரும், மிதவாத கூட்டணியும் சமரசமாகிவிட்டால் இந்தியா தலையிடும் வாய்ப்பு அற்றுப் போய்விடும்.

இதுதான் அன்று அமெரிக்காவின் இலங்கை தொடர்பான அணுகுமுறையாக இருந்தது. இதன் பொருட்டு சமரசத் திட்டம் ஒன்றை தயாரிக்கும் பொறுப்பு நீலனிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன்படி அவர் தயாரித்த திட்டமே மாவட்ட அபிவிருத்தி சபை திட்டமாகும். உப்புச் சப்பற்ற அரை குறைத் தீர்வாக மட்டுமன்றி, தமிழர்களது போராட்ட வீரியத்தை திசை திருப்பும் திட்டமாகவும் இது முன்வைக்கப்பட்டது.

அப்போதே தமிழ் அமைப்புக்கள் நீலன் சி.ஐ.ஏ.யின் முகவர் என்று பிரகடனப்படுத்தி எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. நீலனை கூட்டணியினர் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராக்கியதையும் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் பலமாக கண்டித்திருந்தன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனேயும் நீலனை கல்விமான், கனவான், அரசியல் நிபுணர் என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்துகொண்டே, தமிழர்களை ஒழித்துக் கட்டும் இனப்படுகொலைகளை கட்டவிழ்த்துவிட்டார்.

பிரேமதாசா ஜனாதிபதியான போது நீலனுக்கு அதிக முக்கியத்துவம் இருக்கவில்லை. அதனால் தனது சிறுபிராய தோழரான சந்திரிக்காவின் அரசியல் வெற்றிக்காக நீலன் பாடுபட்டார்.

1994 இல் கொழும்பு மாவட்டத்தில் கூட்டணியினர் குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேட்சைக் குழுவுக்கு ஆதரவு வழங்கினார்கள். தமது ஆட்களையும் அப்பட்டியலில் போட்டியிட வைத்திருந்தனர்.

ஆனால் பொது ஜன முன்னணியின் சார்பாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு ராசரத்தினம் என்னும் சட்டத்தரணியை நீலன் திருச்செல்வம் சந்திரிக்கா அம்மையாரிடம் சிபாரிசு செய்தார். இதனையறிந்த குமாரும், சுயேட்சைக் குழுவும் நீலன் தமது முதுகில் குத்திவிட்டதாக குமுறியிருந்தனர்.

அதுமட்டுமன்றி லக்ஸ்மன் கதிர்காமரை சந்திரிக்கா அம்மையாருக்கு அறிமுகம் செய்ததோடு, தமிழர் ஒருவரை வெளிநாட்டமைச்சராக நியமிக்க ஆலோசனை கூறியவரும் நீலனேயாவர்.

லக்ஸ்மன் கதிர்காமரை சந்திரிக்கா அம்மையார் நன்கு அறிந்திராதபோதும், அவரை வெளிநாட்டமைச்சராக நியமித்தால் நீலனின் அனுசரணையும், ஆலோசனையும் அவருக்கு கிடைக்கும் என்பதாலேயே நியமித்திருந்தார்.

அமரர் மு.திருச்செல்வமும், எஸ்மண்ட் விக்கிரமசிங்கா என்பவரும் இணைந்தே டட்லி செல்வா ஒப்பந்தத்தை தயாரித்தனர். எம்.வி.பீரிஸ் என்பவரது வீட்டில் வைத்தே பேச்சுக்கள் நடந்திருந்தன. அந்த ஒப்பந்தம் பண்டா செல்வா ஒப்பந்தத்தைவிட குறைவானதாகும். திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை நடத்த வசதியாக அந்த ஒப்பந்தம் அமைந்திருந்தது.

அதேபோல பொது ஜன முன்னணி பதவிக்கு வந்ததும் பேராசிரியர் பீரிசும், நீலனும் இணைந்தே தீர்வு யோசனைகளை தயாரித்திருந்தனர்.

இந்த தீர்வு யோசனைகளிலும் தமிழ் பேசும் மக்களது பாரம் பரிய தாயகப் பிரதேசத்தை கூறுபோடுவதற்கான வாய்ப்பே வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு பிரிப்பு, நிலப்பறிப்பு, தமிழ் பேசும் தரப்புக்கு நீதியான தீர்வை வழங்க தயாராக இருப்பதாக உலகுக்கு காண்பிப்பு ஆகிய பயன்களை மட்டுமே அந்த அரைகுறைப் பொதியால் சாதிக்க முடியும்.

ஆட்சியாளர் பொதியை ஒருகையால் முன்வைத்த வேகத்தில், மறுகையால் இராணுவத்தீர்வு முனைப்பை முடுக்கிவிட்டனர். எனவே, பொதி என்பது இராணுவத் தீர்வு முனைப்புக்களை முடிமறைக்கும் சதி என்பதை புத்திஜீவியான நீலனால் புரிந்து கொள்ள முடியாதிருந்தது என்று கூறுவதோ, நினைப்பதோ சிறுபிள்ளைத்தனமானதாகும்.

புலிகளோடு அரசு பேசவேண்டும் என்று நீலன் கூறிவந்தமை புலிகளையும், தமிழ் மக்களையும் ஏமாற்றும் வாய் வீச்சுக்களாகவே விளங்கியிருந்தன.

உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பொதியை ஆதரித்து பிரசாரம் செய்ததோடு, புலிகளை பலவீனப்படுத்தும் அவசியத்தையும் நீலன் ஆதரித்தே வந்துள்ளார்.

மனித உரிமை வாதியாக உலக இராஜதந்திரிகளிடம் தன்னை அவர் அறிமுகம் செய்துகொண்டார். பெருமளவான வெளிநாட்டு நிதி உதவிகளுடன் இன ஆய்வு நிறுவனம் போன்ற பலவற்றை அவர் நடத்தினார்.

ஆனால், யாழ் குடாநாட்டில் அறுநாறுக்கு மேற்பட்டோர் கைதாகி படுகொலையான செய்தியைக்கூட உலக அரங்கில் அவர் ஒலிக்கத் தவறியிருந்தார்.

இலங்கை எங்கும் தமிழர்களது மனித உரிமைகள் இன்று துச்சமாக மிதிக்கப்பட்டு வரும்போதும், நீலன் இவைபற்றி மௌனமே சாதித்திருந்தார்.

நீலன் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்புதான் ஜுடா கமாலிட்டா பாலியல் கொடூரங்களுக்கு உள்ளானார். குடாநாட்டில் மீனவர்கள் கோவணத்தோடு மட்டுமே மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டனர். மனித உரிமை மீறல்களது உச்சகட்டமான இக் கொடூரங்கள் தொடர்பாக நீலனோ அவரது மனித உரிமை மற்றும் சிறுபான்மையோர் உரிமைக்கான அமைப்புக்களோ சிறிதும் குரல் கொடுக்கவில்லை.

நீலன் உண்மையிலேயே சிறந்த மனித உரிமைவாதி என்றால், இராணுவத் தீர்வில் நம்பிக்கையுள்ள ஆட்சியாளருடன் நட்பாக இருந்திருக்க முடியாது.

அதுமட்டுமன்றி, எப்போதுமே பல முகம் கொண்ட ஒருவராகவே நீலன் திகழ்ந்திருக்கிறார். தன் நிலைப்பாட்டை தமிழ மக்களிடம் கூறுவதற்குப் பதிலாக, உலகப் பிரமுகர்களிடம் திரை மறைவில்தான் கூறிவந்திருக்கிறார்.

பொதியை தயாரிப்பதில் பங்குகொள்ளாத மூன்றாமவர் போல தமிழ் மக்களிடம் காண்பித்தபடி, பொதியின் சூத்திரதாரியாகவும், பொதியின் பிரசார பீரங்கியாகவும், பொது ஜன முன்னணியின் உத்தியோக பூர்வமற்ற வெளிநாட்டமைச்சராகவும் அவர் விளங்கியிருக்கிறார். ஆனால் அவரது மரணத்தோடு மேற்கண்ட உண்மைகள் அம்பலமாகியுள்ளன.

நீலனின் மேற்படி செயற்பாடுகள் தமிழ் பேசும் மக்களது அடிப்படை நிலைப்பாடுகளுக்கு மாறானவை என்பதில் ஐயமில்லை.

ஆனால் அவரது செயற்பாடுகளுக்கு மரணம்தான் முடிவா? என்பது விவாதத்திற்குரியதேயாகும். அதற்காக நீலனை தமிழ் மக்களது விமோசனத்திற்காக பாடுபட்ட ஒருவராகவோ, மனித உரிமை வாதியாகவோ மிகையாக புகழாரம் சூட்டுவது, மேலும் தவறான அரசியலுக்கு தளம் கொடுப்பதாகவே அமைந்து விடும்.

இலங்கை அரசியலில் நீலனின் பாத்திரமானது 'அரசியல் புரோக்கர்' பாத்திரமேயாகும். இப் பாத்திரம் தமிழ் பேசும் தரப்பை விட, பேரினவாத தரப்புக்கே அதிகபலனை அறுவடை செய்து கொடுத்துள்ளது. என்பதே உண்மையாகும்.

நீலனது மறைவையடுத்து பேரினவாத முகாமில் ஏற்பட்ட பேரதிர்ச்சியும் அதற்கு எடுத்துக்காட்டாகும்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

வன்னிப் பாதை திறப்பு விடயத்தில் படைத் தரப்புக்கு தோல்விதான். புலிகளை தனிமைப் படுத்தலாம் என்னும் திட்டத்தோடு பாதையை முடி வைத்தார்கள். உணவை ஆயுதமாக்கி னார்கள்.

ஆனால் நினைத்தது ஒன்று, நடந்தது வேறொன்று.

வன்னிப் பாதை தடைக்கு எதிராக வன்னிக்கு வெளியேயும் தமிழ் மக்கள் ஒன்று பட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். போராட்டங்கள் நடத்தினர்.

அரசுக்கு ஆதரவான தமிழ்க் கட்சிகளும் மக்களின் எதிர்ப்புக்கு பயந்து போய்விட்டன.

தாமும் எதிர்ப்பதுபோல காட்டாவிட்டால் தமிழ் மக்கள் தம் முகத்தில் காறி உமிழுவார்கள் என்ற நிலையில்தான் இக் கட்சிகள் அரசை எதிர்ப்பது போன்றும், கோரிக்கை விடுப்பது போன்றும் பாவ்லா காட்டின.

இப்போது அரசுக்கும், படையினருக்கும் ஓர் உண்மை புரிந்திருக்கும். தமக்கு விசுவாச மான தமிழ்க் கட்சிகளை வைத்து தமிழ் மக்களை தம் விருப்பப்படி ஆளுகை செய்ய முடியாது என்பது புரிந்திருக்கும்.

●●●

புளொட் உபதலைவர் மாணிக்கதாசன் மறுபடி திரும்பப் போவதில்லை. நாட்டைவிட்டு ஒட்டம் என்று அவரது அமைப்புக்குள் இருந்தே பத்திரிகைகளுக்கு செய்தி கூறப்பட்டது. தாசனை படையினர் தேடுவதாகவும், சந்தே கிப்பதாகவும்கூட வதந்திகள் உலாவின.

சிங்கப்பூர் சென்று, அப்படியே சென்னை போய்விட்டு ஒரு வாரத்தின் முன்னர் நாடு திரும்பிவிட்டார் தாசன்.

வவுனியா இராணுவத்தளபதி பலகல்ல உட்பட பல படை அதிகாரிகளை சந்தித்து பேசினாராம்.

தற்போது வவுனியாவில் புளொட் இரகசியமாகத்தான் ஆயுதம் வைத்திருக்கிறது. முன்னர் போல பகிரங்கமாக ஆயுதத்தோடு நடமாட அனுமதி கிடையாது.

இது பற்றியும் தாசன் பேசியுள்ளாராம். விரைவில் ஆயுதத்தோடு முன்புபோல நடமாட அனுமதி கிடைக்க உள்ளதாம்.

தாசனுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் வவுனியாவில் போட்டியிடும் உத்தேசம் உண்டு.

### வவுனியாவை குறிவைக்கும் தமிழ்க் கட்சிகள்

ஆதற்காக ரெலோவை ஒரம்கட்டினால்கூட புதிய சவால்கள் தோன்றியுள்ளன. ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும்அடுத்த தேர்தலில் வவுனியாவில் கேட்கத்தான் ஆசை. அதனால் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். ஆயுத கலாசாரத்திற்கு எதிரான நல்ல பிள்ளைக் கட்சி என்று வவுனியா மக்களிடம் நற்பெயர் தேடும் முயற்சி நடக்கிறது.

மாதத்தில் ஒரு தடவையாவது வவுனியா சென்று நேரடியாக கவனித்துக் கொள்கிறார் சுரேஸ். எந்தக் கட்சியையும் பகைக்காது, சுழியோடி, மெல்லக் காலூன்றி ஒரு ஆசனத்தை யாவது பிடிப்பதுதான் சுரேசின் இலட்சியம்.

சமீபத்தில் வவுனியாவில் ஈ.பி.டி.பியும் அலுவலகம் திறந்திருக்கிறது.

சென்ற வருடம் வவுனியாவில் ஈ.பி.டி.பி. அலுவலகம் திறக்க முற்பட்டபோது, அலுவலகத் திற்கு வீடு கொடுத்தவரை புளொட் மிரட்டிய தாம். ஆனால் இம்முறை நிரந்தரமாக அலுவலகம் திறந்துவிட்டது ஈ.பி.டி.பி.

புளொட், ரெலோ இரண்டுக்கும் பெயர் கெட்டிருப்பதால் ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். இரண்டும் வவுனியாவில் செல்வாக் குப் பெறுவதற்கு போட்டி போடுகின்றன.

ஆனால் வவுனியாவில் அடுத்த தேர்தலை தமிழ்க் கட்சிகள் சந்திக்கும்போது அபாயம் காத்திருக்கிறது. அந்தளவுக்கு வவுனியாவில் புலிகள் ஊடுருவியுள்ளனர்.

★★★

ரெலோவுக்கும் புலிகளுக்கும் வவுனியா வில் இரகசியத் தொடர்பு இருப்பதாக படைத் தரப்புக்கு பலத்த சந்தேகம்.

இந்த சந்தேகத்தை உருவாக்கியதே ரெலோவின் போட்டி அமைப்புக்கள்தானாம்.

ரெலோ முகாமை சோதனையிட்ட படை யினர் இரண்டு ரெலோ உறுப்பினர்களை கைது செய்தனர்.

புளொட் எம்.பி. பாலச்சந்திரன் வீட்டை தாக்கி புலிகள் கைப்பற்றிய துப்பாக்கிகளில் ஒன்று ரெலோ முகாமில் இருந்ததாகவும் தகவல் கசியவிடப்பட்டுள்ளது. இதில் உண்மை உண்டா இல்லையா என்று தெரியவில்லை.

தனது உறுப்பினர்கள் இரண்டுபேர் கைதானதை ரெலோ மறுத்திருக்கிறது. ஏன் இந்த மறுப்பு? அரசுடனும், படையினருடனும் மட்டக் களப்பு, திருமலை போன்ற பகுதிகளில் இணைந்து செயல்படும் தமக்கே இக்கதி நேர்ந்ததால் ஏற்பட்டதால் எழுந்த வெட்கமா?

அல்லது கைதானதைக் கூறினால் படைத் தரப்பு சீற்றமடையும் என்று தயக்கமா?

●●●



படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

'கே'யை விவாகரத்து செய்த அமீன் மறுபடி அவளை ஏற்பதாக நாடகமாடியதற்குக் காரணம் இருந்தது.

'கே'யை அணு அணுவாக சித்திரவதை செய்ய வேண்டும். ஏற்கனவே ஒரு மனைவியைக் கொலை செய்தும், ஏனைய மனைவியர் பயந்ததாகத் தெரியவில்லை.

அதனால் ஒரேயடியாகக் கொலை செய்வதைவிட, கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்ல வேண்டும்.

அவமானப்படுத்தி, அழுது துடிக்க வைத்து, தன்னிடம் மண்டியிட வைத்து வேடிக்கை பார்க்க வேண்டும்.

அதற்காகத்தான் 'கே'யுடன் நாடகமாடினான் அமீன். தன் தந்தை மன்றாடியதால்தான் அமீன் தன்னை மன்னித்ததாகவே 'கே'யும் முதலில் நினைத்தாள்.

ஆனால் அமீன் தன்னோடு படுக்கையறையில் நடந்துகொண்ட முறைகளால் அவளுக்கு உள்ளூர சந்தேகம் இருந்தது.

தன்னோடு சல்லாபித்துவிட்டு கொல்லப்போகிறானோ என்றும் சந்தேகம் ஏற்பட்டது.

அமீன் விடைபெற்று சென்றதும் அந்தச் சந்தேகம் மெல்லக் குறைந்தது. அவளிடமிருந்து நிம்மதிப் பெருமூச்சு ஒன்று புறப்பட்டது.

அப்போதுதான் கதவு தட்டப்பட்டது. அமீன்தான் திரும்பி வந்துவிட்டானோ என்று நினைத்துக் கொண்டுதான் கதவைத் திறந்தாள்.

பொலிஸாரைக் கண்டதும் ஏமாற்றமானாள். பொலிஸ் உயரதிகாரி, "உங்கள் வீட்டை சோதனையிடப் போகிறோம்!" என்று கூறியதும் அதிர்ந்து போனாள்.

விடைபெறும்போது அமீன் உதித்த புன்னகைதான் சட்டென்று நினைவில் வந்து போனது.

அது கபடமான புன்னகை என்பதும் புத்தியில் ஏறியது.

தன்னைச் சுற்றி வலை ஒன்று வீசப்பட்டுவிட்டது, அந்த வலையில் இருந்து மீள்வது கடினம் என்பதும் அவள் மூளையில் உதித்தது.

"யார் உத்தரவு?" என்று அவள் கேட்டபோது, "அதிபரின் உத்தரவுப்படியே சோதனை"யிடப்போவதாக பொலிஸ் உயரதிகாரி கூறினார்.

அமீனின் மனைவி வீட்டில் தாமாக சோதனையிட யாருக்கு துணிச்சல் வரும்? ஆகவே "யார் உத்தரவு?" என்று தனது கேள்வி பைத்தியக்காரத்தனம் என்று தன்னைத் தானே கடிந்து கொண்டாள்.

சொல்லி வைத்தாற்போல பொலிசார் நேராக 'கே'யின் படுக்கையறைக்குச் சென்றார்கள். அமீனும் அவளும் அங்கு புரண்டதின் அடையாளமாக படுக்கை தாறுமாறாகக் கலைந்து கிடந்தது.

படுக்கையையும் அவளையும் மாறி மாறிப் பார்த்த பொலிஸ் அதிகாரியின் பார்வையில் கேலி இருந்தது.

மெத்தையைத் தூக்கி கீழே பார்த்தார்கள். "இதோ இருக்கிறது!" என்று கூவினான் ஒரு பொலிஸ்காரன்.

'கே'யும் பார்த்தாள். அவளுக்கு உச்சந்தலையில் யாரோ கத்தியால் குத்தியது போல இருந்தது.

மெத்தைக்குக் கீழே புத்தம் புதிய பிஸ்டல் ஒன்று பளபளத்துக் கொண்டிருந்தது.

'கே'க்கு அது யாருடைய வேலை என்று மூளையைக் குடையும் அவசியம் இருக்கவில்லை.

அமீன்தான் தனக்குத் தெரியாமல் அதனை அங்கே வைத்துவிட்டுப் போயிருக்கிறான் என்பதும், அது தனக்கு வைத்த பொறி என்பதும் அவளுக்குப் புரிந்துவிட்டது.

"இது யாருடைய துப்பாக்கி?" என்று கேட்டார் பொலிஸ் உயரதிகாரி.

இடி அமீனுடையது என்று உண்மையைக் கூறினாலும் அதற்கு பலன் இருக்கப் போவதில்லை என்பது அவளுக்குத் தெரியும்.

அதனால் 'கே' மௌனமாக நின்றாள். அவள் கண்கள் குளமாகியிருந்தன.

"தங்களைக் கைது செய்கிறேன்!" என்று பணிவாகக் கூறினார் உயரதிகாரி. அந்தப் பணிவு வெளி வேசம் என்பது அவளுக்கு தெரியும்.

'கே' கைது செய்யப்பட்டதும் உகண்டா அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையின் ஒவ்வொரு வாசகமும் கலப்படமில்லாத பொய்யில் தோய்ந்திருந்தன.

அதிபர் இடி அமீனைக் கொல்லச் சதி. அவரது முன்னால் மனைவி 'கே' கைது.

அதிபர் இடி அமீனின் முன்னாள் மனைவி 'கே'. இவரது நடத்தையில் சந்தேகப்பட்டு விவாகரத்து செய்திருந்தார் இடி அமீன்.

அதிபர் இடி அமீனிடம் கேயும் அவரது தந்தையும் தம்மை மன்னிக்குமாறும், இரக்கம் காட்டுமாறும் இறைஞ்சினார்கள்.

தன்னை ஒரே ஒரு தடவை சந்திக்குமாறும், வீட்டுக்கு வருமாறும் 'கே' அதிபர் இடி அமீனிடம் அழைப்பு விடுத்திருந்தாள்.

அதிபரும் மனம் இரங்கி 'கே'யைச் சந்திக்கச் செல்ல முன்வந்தார்.

அந்த நேரத்தில் நமது புலனாய்வுப் பிரிவுக்கு முக்கியமான தகவல் ஒன்று கிடைத்தது.

நமது நாட்டின் எதிரிகள் கேயை பணத்தால் வாங்கிவிட்டனர்.

'கே'யின் வீட்டுக்கு அதிபர் செல்லும் போது கே அவரைச் சுட்டுக் கொல்லத் திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

தகுந்த நேரத்தில் புலனாய்வுத்துறை சதித்திட்டத்தை அறிந்து கொண்டதால் நம் அதிபரின் உயிர் தப்பியது. சதி முறியடிக்கப்பட்டது."

இந்த அறிக்கையை உகண்டா மக்கள் நம்பவில்லை. ஆனால் 'மக்கள் அனைவரும் நம்பிவிட்டனர்' என்றுதான் இடி அமீனுக்கு புலனாய்வுத்துறை தகவல் சொன்னது.

இடி அமீனின் மனம் மகிழ்ச்சியடையக் கூடியதாக தகவல்களை கூறுவதற்கு புலனாய்வுத்துறை பழகியிருந்தது.

உண்மைகளைக் கூறினால் புலனாய்வுத் துறை அதிகாரிகள்மீதே தவறு கண்டு பிடிப்பான் அமீன்.

அதனால் பொய்களைக் கூறி அவனிடம் பாராட்டுப் பெறுவதற்கு அதிகாரிகள் கற்றுக் கொண்டனர்.

அமீனைச் சுற்றி அவனை முகஸ்துதி செய்து மகிழ்விக்கும் கூட்டமும் பெருகியிருந்தது.

ஆலோசகர்கள், மக்கள் தொடர்பாளர்கள், அறிக்கைகள் தயாரிக்கும் செய்தித் தொடர்பாளர்கள் என்று பலர் அமீனைச் சுற்றி இருந்தார்கள்.

கொளுத்த சம்பளம், குடியிருக்க மாளிகை, கூத்தடிக்க அழகிகள் என்று அந்தக் கூட்டம் கொட்டமடித்தது.



அமீன் எதனைச் செய்தாலும் 'ஆமாம்' போடுவதே அவர்களது முக்கியமான வேலை. மக்கள் அமீன் பக்கமே என்று அவர்கள் சத்தியம் செய்து கொண்டிருந்தார்கள்.

'கே' சதி செய்ததாக அறிக்கை தயாரித்ததும் அவர்களில் ஒருத்தர்தான். அறிக்கையை பார்த்துவிட்டு அமீன் பாராட்டினான்.

அந்த அறிக்கையால் உகண்டா முழுக்க அனுதாப அலை வீசுவதாக 'ஜால்ரா' கோஷ்டி அமீனிடம் புளுகியது.

புலனாய்வுத்துறையும், ஜால்ரா கோஷ்டியும் ஒரேவிதமாக புளுகியதால் அமீன் நம்பி விட்டான்.

அதனால் மேலும் மேலும் 'கே'யை துன்புறுத்தத் துணிந்தான்.

1974 ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட 'கே' மூன்று மாதகாலம் சிறையில் அடைக்கப்பட்டாள்.



அமீனின் மனைவி கே

## தருவது ரசிகன்

சிறைக்கு அனுப்பப்பட முன்னர் பொலிஸ் நிலைய சிறைக் கூண்டில் ஒரு நாள் வைக்கப்பட்டிருந்தாள்.

திடீரென்று அந்த பொலிஸ் நிலையத்துக்கு அமீன் விஜயம் செய்தான். அங்கிருந்த பொலிசாருக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

நேராகக் கேயிடம் சென்றான் அமீன். அவனது உதடுகளில் கபடமான புன்னகை குந்தியிருந்தது.

அமீனைக் கண்டதும் கேயின் கண்கள் வெறுப்பை உமிழ்ந்தன. அமீன் அவள் முன்பாக நின்று கொண்டு: **"ஏனம்மா, கணவன்மேல் மனைவி உயிரை வைக்கலாம். உயிரை எடுக்க நினைக்கலாமா?"** என்று கேட்டான்.

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 74

**கடந்தவாரம்**

**அமீனின் மனைவி மலயாமு பல உண்மைகளை வெளியிட்டதால் அவளது குடும்பத்தை அமீன் அச்சுறுத்துகிறான். தனது ஆறுபிள்ளைகளையும் அமீனிடம் ஒப்படைத்துவிட்டு நாட்டைவிட்டு போகிறாள் மலயாமு. அதன்பின்னர் இரண்டாம் மனைவி 'கே'யை பழிவாங்க ஆரம்பிக்கிறான். இனி....**

"துரோகி, சண்டாளா! நீதானே அந்த துப்பாக்கியை வைத்துவிட்டுப் போனாய்! நீ இரக்கமில்லாத அரக்கன்!" என்று கத்தினாள்.

அமீன் கடகடவென்று சிரித்தான். "எந்தக் குற்றவாளியாவது தன் குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கிறானா? குற்றத்தை மறைக்க நடிப்பார்கள். துடிப்பார்கள். அழுவார்கள். புலம்புவார்கள்!" என்று சிரித்தபடியே கூறினான்.

அமீன் அங்கிருந்து சென்றபின்னர் 'கே' சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

கே சிறையில் இருந்தபோது அவளது காதலன் டாக்டர் முக்காசா பழிவாங்கப்பட்டார். அவரை வெவ்வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றல் செய்து பந்தாடினார்கள்.

அமீன் முக்காசாவை உயிரோடு விட்டு வைத்திருந்தது ஒரு திட்டத்தோடு தான்.

அது கொடூரமான திட்டம்.

மூன்று மாதங்களில் கே எச்சரிக்கப்பட்டு விடுதலையானாள்.

வெளியே வந்த கே தன் உயிரைப் பற்றிக் கவலைப்படவில்லை. இடி அமீனை பழிவாங்கத் துடித்தாள்.

இடி அமீனைப் பற்றிய பல தகவல்களை வெளியிட்டதோடு, தன்னை இடி அமீன் வஞ்சகமாக ஏமாற்றிய கதையையும் மக்களிடம் கூற ஆரம்பித்தாள்.

இடி அமீனின் படைகளின் கண்களில் மாட்டாது கே தலைமறைவாகவே இருந்தாள்.

அப்படியிருந்தும் அவள் பற்றிய தகவலை அறிந்து, இரவோடு இரவாக கைது செய்து, அமீன் முன்னால் நிறுத்தினார்கள்.

அவர்கள் அனைவரையும் வெளியே செல்லுமாறு கூறிவிட்டு கதவுகளைத் தாழிட்டான். உள்ளே என்ன நடந்தாலும் வெளியே கேட்காது.

தன் உயிர் இனித் தப்பாது என்று கேக்குத் தெரிந்துபோனது. என்ன நடந்தாலும் அதனை ஏற்க அவள் சித்தமானாள்.

"முதலில் நீ, பின்னர் உன் உடம்பை அனுபவித்த அந்த டாக்டர்! நீ தனியாக போகப் போகிறாய். டாக்டர் குடும்பத்தோடு அனுப்பி வைக்கப் படுவார்!" அமீன் அரக்கத்தனமாய்ச் சிரித்தான்.

அவள் அப்போதும் வாய் திறக்கவில்லை. வன்மம் முழுவதையும் மனதில் வைத்துக் கொண்டு மௌனமாய் நின்றாள்.

அவள் மௌனம் தன்னை அவமதிப்பதாக கோபம் கொண்ட அமீன் அவளை எட்டி உதைத்தான்.

"எனக்கு ஏனடி துரோகம் செய்தாய்? நான் என்ன ஆண்மை இல்லாத பேடியா? சொல்லடி நாயே?" என்று அவள் வயிற்றில் மிதித்தான்.

இப்போதுதான் அவள் ஆவசம் வந்தது போலக் கத்தினாள்; "நீ மட்டும் எங்களுக்கு துரோகம் செய்யவில்லையா? எங்களை இரவுகளில் பட்டினி போட்டுவிட்டு ஊர் மேய்ந்தாயே. எங்களைப் பற்றி எங்களுக்கும் உணர்ச்சிகள் இருக்கிறது என்று நினைத்திருக்கிறாயா?..." அவள் மேற்கொண்டு பேசவிடாமல் குரல் வளை நசிக்கப்பட்டாள்.

குரல்வளையை நசித்தபடியே கேட்டான், "என்னைவிட அந்த டாக்டர் கெட்டிக்காரனாக இருந்தானா?" அக் கேள்விக்கு அவள் ஏதோ சொல்லத் துடிக்க, குரல் வளையை நெரிப்பதை நிறுத்தி "சொல்லடி!" என்றான்.

"அவன் கெட்டிக்காரன்தான். உன்னைவிட ஆண்மகன்தான், உன்னைவிட திறமையானவன்தான்...!" அமீனை இறுதியாக பழிவாங்க, துடிக்க வைக்க, நினைத்து, நினைத்து புழுங்க வைக்க அவள் அப்படிக் கூறினாள்.

அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அமீனுக்குள் புயலாக அடித்தது. அவன் கோபத்தை உக்கிரப்படுத்தியது. அவனுக்கு உடம்பு முழுக்க தீயால் சுட்டதுபோல இருந்தது. அவன் கை கால்கள் நடுங்கின.

"அடியே வேசி..." என்று கத்தினான். அவன் கையில் கூரான கத்தி இருந்தது.

அந்தக் கத்தியை கேயின் குரல் வளையில் ஒங்கி, ஓங்கி, ஓங்கிக் குத்தினான்.

'பளக்...' என்ற சத்தத்தோடு கழுத்தில் இருந்து பீறிட்ட குருதி அவனது முகத்தையும் நனைத்தது. அப்படியே வழித்து நாவால் நக்கினான்.

தன் நிலை மறந்தவனாய்க் கத்தியோடு கேயின் உடல் அருகே அமர்ந்தான்.

உலகமே நடுங்கும் கொடூரம் ஒன்று அங்கே அரங்கேறியது.

*(இடி தொடரும்)*

# அவர்தான் முதலில் சொன்னார்

## ஷாலினி பேட்டி



நடிகை ஹீராவுடன் காதல் ஓவியம் வரைந்தவர் அஜித்குமார். இருவரும் நகமும் சதையுமாக இருந்தனர். சமீபத்தில் தம்மை சேரவைத்த காதலுக்கு அஞ்சலி செய்துவிட்டு பிரிந்துவிட்டனர்.

இதன்பின்னர் வேறு சில நடிகைகளுடன் அஜித்குமாருக்கு தொடர்பு ஏற்பட்டது. ஆனாலும் அவை காதல் என்றளவுக்கு போகவில்லை. உல்லாசத்தோடு சரி.

'அமர்க்களம்' பட்த்தில் ஷாலினியோடு ஜோடியாக நடித்தபோது அஜித்துக்கு ஷாலினியை மெத்தப் பிடித்தது.

குழந்தை நட்சத்திரமாக பல படங்களில் கொடி கட்டிப் பறந்தவர் ஷாலினி. பின்னர் 'காதலுக்கு மரியாதை' படத்தில் கதாநாயகியாக நடித்தார்.

'அமர்க்களம்' படப்பிடிப்பில் அஜித், ஷாலினி காதல் மலர்ந்தது. இந்த விடயம் அரசல் புரசலாக வெளியே தெரிந்தது. இது பெரிதாகும் முன்பே ஷாலினி உண்மையை பகிரங்கமாக கூறிவிட்டார்.

அடுத்த ஆண்டுதான் திருமணம் செய்யப்போகிறார்களாம். ஷாலினியின் தந்தையும் அதனை உறுதி செய்துள்ளார். அடுத்த வருடம் வரை ஜாலியாக காதலிக்கப் போகிறார்களாம்.

அஜித்துடன் காதல் பற்றி ஷாலினி என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போமா?

**கே: உங்களுக்கும் அஜித்துக்கும் காதல் மலர்ந்தது எப்படி?**

**ஷா:** சரண் இயக்கத்தில் நாம் இருவரும் 'அமர்க்களம்' படத்தில் நடித்தோம். படப்பிடிப்பில் அஜித் என்னிடம் பேசிய விதமும், பழகிய விதமும் என் மனதைக் கவர்ந்தது. முதலில் நண்பர்களானோம். பின்னர் காதலிக்கத் தொடங்கினோம்.

**கே: முதன் முதலில் யார் 'ஐ லவ் யூ' சொன்னது?**

**ஷா:** முதலில் அஜித்தான் என்னிடம் வந்து 'ஐ லவ் யூ' சொன்னார். அவர் என்னை விரும்புவதாகக் கூறியதும் சந்தோசமாக இருந்தது. எனினும் நான் என் பெற்றோர்கள் மீது மதிப்பும் அன்பும் கொண்டவள். அதனால் என் தந்தையிடம் இவ் விஷயத்தைக் கூறினேன்.

**கே: உங்கள் காதலுக்கு தந்தை பச்சைக் கொடி காட்டிவிட்டாரா?**

**ஷா:** எப்போதுமே என் விருப்பத்துக்கு மாறாக என் தந்தை நடந்ததில்லை. அஜித் என்னை மனப்பூர்வமாக விரும்புவதாக சொன்னபோது, "மகளே இது உன்னுடைய வாழ்க்கை. உன் எதிர்காலத்தைப் பற்றி நீதான் தீர்மானிக்க வேண்டும்' என்று கூறிவிட்டார்.

**கே: இப்போது பல படங்களில் நடிக்கிறீர்களே, திருமணம் எப்போது நடக்கும்?**

**ஷா:** கண்டிப்பாக இந்த வருடம் நடக்காது.


**கே: திருமணத்தின் பின்னர் நடிப்பீர்களா?**

**ஷா:** அதுபற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது.

# மேடையில் ரத்து

*திருமணமாகி குறைந்தது சிலமாதங்கள் சென்றபின்னர்தான் விவாகரத்து கேட்பார்கள்.*

*ஆனால் திருமண மேடையில் வைத்தே தன் மனைவியை ஒரு வாலிபர் விவாகரத்துச் செய்திருக்கிறார்.*



*இச் சம்பவம் சவுதி அரேபியாவில் நடந்துள்ளது.*

*திருமண விழாவில் மணமகனின் தாயார் நடனம் ஆடினார். அந்த நடனத்தை காணச் சகிக்காத மணமகள், 'தயவு செய்து உங்கள் அம்மாவிடம் நடனமாடுவதை நிறுத்தச் சொல்லுங்கள். காணச் சகிக்கவில்லை' என்று கூறினார்.*

*தன் தாயாரின் நடனத்தில் மனைவி குறை கண்டதால் மாப்பிள்ளையின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.*

*'உன்னை இப்போதே விவாகரத்து செய்கிறேன்' என்று கூறிவிட்டார்.*

# கொடூரமான காதலன்

*சோவியத் யூனியனின் ஒருபகுதியாக இருந்தது உக்ரைன். தற்போது தனியாக இருக்கிறது.*

*இங்கு நடந்த ஒரு சம்பவம் உங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தக்கூடியது.*

*உக்ரைனைச் சேர்ந்தவர் டிமித்ரிட யோமின். இவருக்கு 19 வயது.*

*14 வயதான டமாரா என்பவளை டயோமின் காதலித்து வந்தார்.*

*ஒருநாள் தனது காதலியை தன் ஆசைக்கு பணியுமாறு கேட்டார். அவள் மறுத்தாள். அதனால் ஏற்பட்ட கோபத்தில் அவளை அடித்தே கொன்றுவிட்டார்.*

*அத்தோடு விட்டாரா? அதுதான் இல்லை. அந்தப் பெண்ணின் மூளையையும், நாக்கையும் வேகவைத்து சாப்பிட்டானாம்.*



*அவளது மண்டை ஓட்டை தன் வீட்டு தொலைக்காட்சி பெட்டியின்மேல் காட்சிப் பொருளாகவும் வைத்திருந்தான்.*

*வக்கிரமான மனநிலையே இப்படியான செயல்களுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.*

*இவனைப் பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள். நீதிபதி தயக்கமே இல்லாமல் மரணதண்டனை வழங்கியுள்ளார்.*

# சலிக்கவைக்கும் அறிவிப்பாளர்கள்

தொலைக்காட்சியில் அறிவிப்பது வேறு, வானொலியில் அறிவிப்பு வேறு.

தொலைக்காட்சி அறிவிப்பாளர்களுக்கு ஆளுமையான தோற்றம், இயல்பான பாவனை போன்றவை தேவை.

நம்நாட்டில் சக்தி வானொலியில் நன்கு அறிவிக்கும் சில அறிவிப்பாளர்கள் தொலைக் காட்சியிலும் தோன்றி தாமும் நெளிந்து, வளைந்த நம்மையும் நெளிய வைக்கிறார்கள்.

சக்தி வானொலிமூலம் புகழ் பெற்ற லோஷன் வளர்ந்து வரும் அறிவிப்பாளர். நல்ல குரல்வளம் உள்ளவர். மூத்த அறிவிப்பாளரான எழில்வேந்தனின் குரல் போல இவரது குரலும் ஒலிக்கிறது.

ஆனால் இவரை தொலைக்காட்சி அறிவிப்பில் காணும்போது நேர்மாறாக இருக்கிறது. அருகில் இருப்பவரையே திரும்பித் திரும்பி பார்ப்பதும், கைகளை அப்படி இப்படி அசைப்பதும், உரத்துப் பேசுவதுமாக சகிக்கவில்லை. அவற்றைத் தவிர்த்தால் முன்னேறலாம்.


தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் பலரும் போதிய பயிற்சி இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். 'சன்' தொலைக் காட்சி அறிவிப்பாளர்களைப் பார்த்து கொப்பியடிப்பதும் குறைபாட்டுக்கு ஒரு காரணம்.




படிப்பகம்

www.padippakam.com










## தகவல் பெட்டி

## சுவையான குழு

↑ நீங்கள் இடி அமீன் போன்று மனித மாமிசப்பிரியராக இல்லாதிருக்கலாம். ஆனால் இந்த இசைக்குழு உறுப்பினர்களை சுவைத்துச் சாப்பிடலாம். ஏன் தெரியுமா? இவை யாவுமே பழவகைகள், பருப்புக்கள் என்பவற்றை பயன்படுத்தி செய்யப்பட்டவை.

தோடம்பழம், பியர்ஸ் பழம், அன்னாசிப்பழம் மற்றும் வாதுமைப் பருப்பு ஆகியவற்றை பயன்படுத்தி மனித உருவங்களும், இசைக் கருவிகளும் செய்யப்பட்டுள்ளன. சிற்பக் கலைஞரான ஹென்றி றொக்ஸ் என்பவரே இதனை அற்புதமாக தயாரித்துள்ளார்.





## எல்லாம் பொம்மைகள்

← இரட்டையர் போலத் தெரிகிறதல்லவா. கண்களை நம்பாதீர்கள். இவற்றில் நின்றுகொண்டிருப்பது சிறுமி. மற்றது பொம்மை. சிறுமியைப்போலவே தத்ரூபமாக தயாரிக்கப்பட்ட பொம்மை நீயும் பொம்மை, நானும் பொம்மை. நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை, என்று பொம்மையிடம் கூறுகிறாரோ அந்த சுட்டிச் சிறுமி.

## உயரத்தில்

← அமெரிக்காவில் காதல் ஜோடி ஒன்றுக்கு வித்தியாசமான யோசனை தோன்றியது. வழக்கமாக காதல் என்றாலே கற்பனைகளுக்கு தட்டுப்பாடு இருக்காது. இவர்களது காதல் கற்பனை உச்சிக்கே போய்விட்டது.

தமது திருமணத்தை அடுத்து உயரமான கொடிக்கம்பத்தின் மீது ஏறி நின்று தமது முதல் முத்தத்தை பரிமாறுகின்றனர்.

அமெரிக்க ஒஹையோ மாநிலத்தில் 1946ம் ஆண்டு எடுக்கப்பட்ட படம் இது. சித்தம் இனிக்கும் முத்தம், அதைக் கொடுத்த இடம் உச்சம். கீழே வந்து பரிமாறவும் வைத்திருப்பார்களோ மிச்சம்?!

## இறுதிக் கதறல்

→ இரண்டாம் உலகப் போரின் கோரங்களில் இதுவும் ஒன்று.

அமெரிக்க தாக்குதலில் ஜப்பான் டாங்கி ஒன்று தீப்பிடித்து எரிந்தது.

நீண்ட நாட்களின் பின்னர் பார்த்தபோது தீயில் எரிந்த சிப்பாயின் தலைமட்டும் இப்படி காட்சியளித்தது. தீயின் வெப்பம் தாங்காது அந்தச் சிப்பாய் கூக்குரலிட்ட நிலையும் தெரிகிறதல்லவா! போரின் அவலங்கள் இவ்வாறு ஏராளமாயுள்ளன.



## உதவிச் சிரிப்பு

↘ அழவைப்பதை விட சிரிக்கவைப்பது தான் கஷ்டம். சிரிப்பது உடல் நலத்துக்கும் நல்லது. இங்கிலாந்தில் 'சிரிப்பு உதவி' என்றொரு அமைப்பு இருக்கிறது.

அதன் உறுப்பினர்கள் மக்களை சிரிக்கவைத்து நிதி திரட்டுவார்கள். அந்த நிதியை வைத்து உலகில் வறுமையான நாடுகளுக்கு உதவுகிறார்கள்.

அந்த பொதுநல சிரிப்பு மன்னர்களையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். சிரிக்க வைக்க தங்கள் முகங்களையே என்ன பாடுபடுத்தியிருக்கிறார்கள் பாருங்கள்.






படிப்பகம்

www.padippakam.com

## மினி சினி

* 'சின்னத்தம்பி' உட்பட பிரபுவை வைத்துப் பல வெற்றிப் படங்களைத் தயாரித்தவர் கே. பாலு. நீண்ட இடைவெளிக்குப்பின் இவர் பிரபுவை வைத்து புதிய படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.
* புதிய இயக்குநர் அன்வர் இயக்கும் 'ஊட்டி' படத்தில் முரளி கதாநாயகனாக நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடிகளாக ரோஜாவும், புதுமுக நடிகை ஒருவரும் நடித்து வருகிறார்கள்.
* கமல் இயக்கி நடிக்கும் 'ஹேராம்' படத்தில் முக்கிய வேடத்தில் கௌதம் என்ற புதுமுகத்தை நடிக்க வைக்கிறார். இவர் மும்பாயில் உள்ள கமலின் சகோதரியின் மகன் ஆவார்.
* ரவிச்சந்திரன் இயக்கத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் 'சந்தித்த வேளை' படத்தில் ஸ்வேதா மேனன் என்னும் மும்பாய் நடிகை ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடவுள்ளார்.
* விரைவில் இயக்குநர் அவதாரம் எடுக்கவிருக்கும் விவேக், அடுத்து கஸ்தூரிராஜா இயக்கும் படம் உட்பட இரண்டு படங்களில் சொந்தக் குரலில் பாடல்களைப் பாடவுள்ளார்.
* லிவிங்ஸ்டன் முக்கிய வேடத்தில் நடித்த 'போலீஸ் டிபார்ட்மெண்ட்' என்ற தெலுங்குப் படம் அதே பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இதில் ஷோபனா கதாநாயகியாக நடித்துள்ளார்.
* இயக்குநர் விக்ரமனின் உதவி இயக்குநராகப் பணியாற்றியபடி 'ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ', 'ஏதோ ஒரு பாட்டு...' போன்ற பாடல்களை எழுதிய கலைக்குமார் இப்போது முழுநேர பாடலாசிரியராகிவிட்டார்.
* 'வைகாசி பொறந்தாச்சு' படம் மூலம் பிரசாந்தை கதாநாயகனாக அறிமுகப்படுத்திய ராதாபாரதி, நீண்ட காலத்திற்குப் பின் இயக்கவுள்ள படத்தில் பிரசாந்த் நாயகனாக நடிக்கவுள்ளார்.
* தமிழில் படம் எதுவுமின்றி இருக்கும் வினிதா 'துர்கதா ஹுலி' என்ற கன்னடப் படத்தில் சாய்குமாருக்கு ஜோடியாக நடித்து வருகிறார். இதில் வினிதாவுக்கு வக்கீல் வேடம்.
* விக்ரமன் இயக்கும் 'வானத்தைப் போல' படத்தில் விஜயகாந்திற்குத் தம்பியாக நெப்போலியன் நடிப்பதாக இருந்தது. இப்போது அந்தப்பாத்திரத்தில் நெப்போலியன் நடிக்கவில்லை.

## பிடித்தமான நடிகைகள்

சத்யராஜ் பல நடிகைகளோடு நடித்தாலும் அவருக்கு பிடித்தமான முதல் நடிகை குஷ்புதானாம்.

குஷ்பு ஜோடியாக சத்யராஜ் நடித்த படங்கள் பெரு வெற்றி பெற்றுள்ளன. அந்த வரிசையில் ஆகஸ்ட் 06இல் திரைக்கு வந்துள்ளபடம் 'மலபார் பொலிஸ்.'

இப்படத்தின் இயக்குநர் வாசுவுக்கும் குஷ்புவை பிடிக்கும். குஷ்புதாசர் என்றும் கூறலாம்.

'சின்னத்தம்பி' படத்தில் பிரபு, குஷ்பு ஜோடியை நடிக்கவைத்து அபாரமாக இயக்கியவர் வாசு தான். வாசுவின் பல படங்களில் குஷ்பு இருக்கிறார்.

சத்யராஜ் குஷ்புவுக்கு அடுத்ததாக விரும்பும் நடிகை ரஞ்சிதா. 'அமைதிப்படை', 'தோழர் பாண்டியன்' போன்ற படங்களில் நடித்தபோது ரஞ்சிதா சத்யராஜுடன் ஒப்புக்கொண்டார். 'ரஞ்சிதா நல்ல நடிகை. நம்ம 'மூட்' அறிந்து நடக்கக்கூடியவர். அதாவது நடிப்பில்!' என்று கூறியுள்ளார் சத்யராஜ்.

எம்.ஜி.ஆர்.ஜோடிகளாக நடித்த நடிகைகள் அனைவரையும் சத்யராஜுக்கு பிடிக்குமாம். இன்று அம்மா நடிகையாக இருக்கும் என்.எம்.ராஜம் ஒருகாலத்தில் சத்யராஜின் கனவில் வந்து தொல்லைப் படுத்தியிருக்கிறாராம்.

சினிமா விமர்சனம்

## கல கல பார்த்திபன்

45/100

நமது விமர்சனக் குழு — **படம்: அந்தப்புரம்**

**நடிப்பு:** பார்த்திபன், பிரகாஷ்ராஜ், சௌந்தர்யா, சாரதா, சாய்குமார், மன்சூரலிகான்

**இயக்கம்:** கிருஷ்ணவம்சி - **இசை:** இளையராஜா

தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பார்த்திபன் நடித்த காட்சிகள் மட்டும் தமிழில் புதிதாக எடுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.


பிரகாஷ்ராஜும், மன்சூரலிகானும் பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகள். இவர்களது குடும்ப பகையில் பல தலைகள் உருளுகின்றன.

இந்த வன்முறை பிடிக்காது மொரீசியஸ் தீவுக்கு சென்று சௌந்தர்யாவை மணக்கிறார் பிரகாஷ்ராஜின் மகன் சாய்குமார். குழந்தை ஒன்றும் பிறக்கிறது.

தாய்க்கு ஆப...
யுடன் ஊர்திரும்ப...
கிறார். அதன் பின்...
தானே வளர்க்க ...
மகனை மீட்கப் ...
சௌந்தர்யா...
பாத்திரத்தில் 'து...
கிறார் பார்த்திப...
பார்த்திபன் ...
கலப்பாகிறது. அ...
இருமி வில்லத்த...
காஷ்ராஜ் இதில் ...
போட்டி போட்டு ...
டன் பாடல் காட்சி...
மன்சூரலிகா...
பிரகாஷ்ராஜ் முன்...
பழக்கமான ...
பட்ட விதமும், ...




ரியா சென்
படம்: தாஜ் மஹால்





சத்தார்-ராசாத்தி
படம்: கதாநாயகி

## அலைபாயு...

இயக்குநர் மணிரத்னம் முதன் முதலில் ஒரு படத்தில் ...
படம் அவரே இயக்கும் 'அலைபாயுதே'. சிறு வேடம் ஒன்றில்தா...
மாதவன், ஷாலினி ஜோடியாக நடிக்கும் இப்படம்தா...
களிலேயே குறைந்த பட்ஜெட்டில் தயாராகும் படமாம்.
பாடல்களே இல்லாமல்தான் படத்தை எடுக்க நி...
வியாபார ரீதியான வெற்றியைக் கருதி பாடல் காட்சிகளும்...
'அலைபாயுதே' படத்தில் விவேக் நடிக்கிறார். ஆனால் ந...
புதுமையாக அவரை நடிக்கவைத்து ரசிகர்களை வியக்க...
மணிரத்னம்.
'அலை...
'தேசிய ...
திருக்கி...

"தொட்டுக் கொள்ள விரல் துடிக்கும்-விழி
தூரம் போக சொல்லி நடிக்கும்!
ஆளை மயக்கும் பாளைச் சிரிப்பில்
ஆசை பிறந்தது எனக்கும்!"

## "காந்தி மகாத்மா அல்ல!"

தனது பேட்டிகளில் சர்ச்சையான கருத்துக்களைக் கூறி பலரது விமர்சனங்களுக்கு உள்ளாகுவது கமலின் வழக்கம். சமீபத்தில் சர்ச்சைக்குள்ளான கமலின் பேட்டியில் இருந்து சில பகுதிகள்:

**கே: 'ஹேராம்' ஆரம்பித்தவுடன் அளித்த பேட்டியில் காந்தியை மகாத்மாவாக உங்களால் பார்க்கமுடியவில்லை என்று கூறியிருந்தீர்கள். அது பற்றி கூறுங்கள்?**

கமல்: காந்தியை மகாத்மாவாகப் பார்ப்பதில் பல இடைஞ்சல்கள் உள்ளன. நான் பாரதியாரை வெறும் கவிஞராகத்தான் பார்க்கிறேன். மகா கவியாக்கி விடுவதன்மூலம் இன்னொருவர் நல்ல கவிஞராக வராமல் தடுக்கப்பட்டு விடுகிறார். ஆக, நான் சொல்ல வருவது காந்தியை மகாத்மாவாக தனிமைப் படுத்திவிடாமல், இன்னும் நிறைய காந்திகள் உருவாக வாய்ப்புக் கொடுங்கள் என்பதுதான்.

**கே: காந்தி சாகிறபோது 'ஹேராம்' என்று கூறவில்லை. காந்தியின் உதவியாளர் கல்யாணம் கூறியிருக்கிறார். உங்கள் படத்துக்கு அதனையே தலைப்பாக வைத்திருக்கிறீர்களே?**

க: படம் பார்த்தாலே தெரியும். அதைப்பற்றி நான் இப்போது ஒன்றுமே சொல்ல விரும்பவில்லை. நான் இப்போது எது சொன்னாலும், பிரச்சனை கிளப்ப சில மகராசன்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**கே: படம் எப்போது வெளிவரும்?**

க: அநேகமாக என் பிறந்தநாள் அன்று. ஏன் பிறந்த நாள் என்று சொல்கிறேன் என்றால், அதுதான் என் தந்தையின் இறந்த நாளும்கூட. உபரியாக இந்த வருடம் தீபாவளியும் அதேநாளில் (நவம்பர் 7) வருகிறது. மூன்றும் ஒரே நாள்.

## தேசியவிருது

'அந்தப்புரம்' படத்தில் அசத்தலாக நடித்ததுக்காக பிரகாஷ்ராஜ்க்கு துணை நடிகருக்கான தேசிய விருது கிடைத்துள்ளது. மிக மகிழ்ச்சியில் மிதக்கிறார் பிரகாஷ்ராஜ்.

தெலுங்கு 'அந்தப்புரம்' தமிழிலும் நன்றாக போய்க் கொண்டிருப்பதால் பிரகாஷ்ராஜ்க்கு செம இலாபம். தமிழில் தயாரிப்பாளர் அவர்தானே.

சென்ற ஆண்டு 'இருவர்' படத்துக்காக துணை நடிகர் விருது கிடைத்தது. இந்த ஆண்டு 'அந்தப்புரம்' படத்தில் நடித்த 'நரசிம்மன்' பாத்திரத்துக்காக கிடைத்திருக்கிறது.

'நரசிம்மன்' பாத்திரத்தில் நடிக்கும் போதே விருது கிடைக்கும் என்று எதிர்பார்த்தாராம் பிரகாஷ் ராஜ். எதிர்பார்ப்பு நிறைவேறியதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

## முகப்பில்

கார்த்திக்-லைலா
படம்: ரோஜாவனம்
குஷ்பு



விஜய்-இஷா
படம்: நெஞ்சினிலே



படிப்பகம்

www.padippakam.com

று மனைவி, பிள்ளை
ய்குமார். அங்கு பலியா
ாஷ்ராஜ் தன் பேரனை
தும், சௌந்தர்யா தன்
பதும்தான் கதை.
விவிட்டு தியாகியாகும்
ண்டி'யாக தோன்று
ன்னர்தான் படம் கல
பிரகாஷ்ராஜ் இருமி
து மிரட்டுகிறார். பிர
டராஜ். சௌந்தர்யா
க்கிறார். சாய்குமாரு
வர்ச்சியும் காட்டுகிறார்.
கம்போல வருகிறார்.
வர் பிரகாசிக்கவில்லை.
ன்றாலும் சொல்லப்
ஷ்ராஜ், பார்த்திபன்.

## ஏன் இல்லை

'நெஞ்சினிலே' படத்தின் பின்னர் இஷா கோபிகருக்கு குறிப்பிட்டு சொல்லும்படியான படம் கிடைக்கவில்லை.

'காதல் கவிதை', 'என் சுவாசக் காற்றே ' 'நெஞ்சினிலே' போன்ற மூன்று படங்களுமே வெற்றிப்படங்கள் தான். அப்படியிருந்தும் தனக்கு பட வாய்ப்புக்கள் தமிழில் குவியாதது குறித்து ஏராளமாக ஆச்சரியப்படுகிறார் இஷா கோபிகர்.

சௌந்தர்யா கூட்டணியும் படத்தை நிமிர வைத்துள்ளது. ஆனால் கடைசி வரை 'அந்தப்புரம்' என்ற பெயருக்கும் படத்திற்கும் என்ன சம்பந்தம் என்பது தான் புரியவில்லை. பார்க்கக் கூடிய படம். விறுவிறுப்பு!



சூர்யா-ஜோதிகா
படம்: பூவெல்லாம் கேட்டுப்பார்

திரையுலக மறுபக்கம் (115)

# நட்சத்திரக் குடும்பத்தின் மாளிகை

தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

நட்சத்திர குடும்பம் என்றுதான் அந்தக் குடும்பத்தை கூறுவார்கள். ஏற்கனவே அவர்களுக்கு ஒரு மாளிகை இருந்தது.

நடிகர், நடிகைகளுக்கு விருந்துக் கேளிக்கைகள் வைத்து தூள் கிளப்புவார்கள். நடிகர், நடிகைகள் தங்களுக்கு பிடித்தமான ஜோடிகளை தெரிவு செய்து ஜாலியாக இருக்கவும் ஏற்பாடு செய்வார்கள்.

நடிகைகளை பெரும் செல்வந்தர்களுக்கு அறிமுகம் செய்துவைப்பதும் நடக்கும். இதற்காக ஒரு கமிஷன் வாங்கிக் கொள்ளுவார்கள்.

இந்த நட்சத்திரக் குடும்பத்தின் பெண் நடிகைகளும் நடிகர்களுக்கும், பெரும் புள்ளிகளுக்கும் கம்பனி கொடுப்பார்கள்.

பெரிய நடிகர்கள் சிலரை தமது பெண் வாரிசு நடிகைகள் மூலம் வலைவீசிப் பிடித்தவர் மஞ்சளான நடிகை. எம்.ஜி.ஆரின் அபிமானம் பெற்ற அந்தக் கால நாயகிதான் இந்த மஞ்சளான நடிகை.

அப்போதே இவருக்காக சில நடிகர்கள் சண்டை போட்டிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் இரண்டு பிரபல நடிகர்களை சமாளித்து அவர்கள் இருவருக்குமே ஜோடியாக நடித்தவர். நீச்சல் உடையில் தோன்றி பலரது நித்திரையைக் கெடுத்தவர்.

இந்த மஞ்சளான நடிகை பற்றி முன்னரே விபரங்கள் தந்தாகிவிட்டது. தற்போதும் தன் திறமைகளை காண்பிக்க இவர் தவறுவதில்லை. அதனையிட்டு இவரது கணவரான வெற்றிகுமார நடிகர் கண்டு கொள்ளமாட்டார்.

அந்தக் காலத்தில் இவரை திரையில் ரசித்த இன்றைய கதாநாயக நடிகர்கள் சிலருக்கு இவர்மீது இப்போதும் ஆசை. அதனை நிறைவு செய்ய இவர் தவறுவதில்லை.

இரண்டெழுத்து இயக்குநர் ஒருவர் இந்த மஞ்சளான நடிகையின் ரசிகர். பெரிய இயக்குநரானதும் நடிகையிடம் தன் ஆசையை ஜாடைமாடையாகக் கூறினார்.

நடிகை விடுவாரா? அப்படியே கப்பென்று பிடித்துக் கொண்டார். நடிகையின் வாரிசுகளுக்கும் தன் படத்தில் சந்தர்ப்பம் கொடுத்தார் இயக்குநர். அந்த இயக்குநரிடமும் கணிசமாக கறந்துவிட்டார் நடிகை.

இந்த நட்சத்திர குடும்பத்திடம் பணத்தை இழந்த நடிகர்கள் பலர். ஆளைவிட்டால் போதும் என்று புலம்பிக் கொண்டு ஓடியவர்கள் மேலும் பலர்.

தற்போது சென்னை புறநகரில் புது மாளிகை ஒன்றை கட்டி முடித்துள்ளார் மஞ்சளான நடிகை.

இந்த வீட்டின் பெறுமதி இங்குள்ள (இந்தியா) மதிப்பில் நான்கு கோடி ரூபாய்கள்.

நடித்து சம்பாதித்து பெற்ற வருமானமல்ல இது. நட்சத்திர குடும்பத்தின் சாதுரியம்பற்றி கோடம்பாக்கம் வட்டாரம் மூக்கில் விரல் வைக்கிறது.

## மச்சி பொல்லாத ஆளு

'குச்சிபோல தோற்றமளித்தாலும் மச்சி பொல்லாத ஆளு'. இவ்வாறு திரையுலகத்தினரால் அழைக்கப்படுபவர் 'வேல்' நடிகர்.

இந்த நகைச்சுவை 'வேல்' நடிகர் வறுமையில் வாடியவர். அந்தக் காலத்தில் திரையில் நடிகைகளைப் பார்த்து ஜொள்ளுவிட்டவர்.

இப்போது நடிகராகி முன்னுக்கு வந்துவிட்டார். கையிலும் பசை இருக்கிறது.

இதனால் முன்னாள் நடிகைகள் சிலருடன் நட்பை ஏற்படுத்தி பணத்தை கரைத்தார். புன்னகைக்கு பெயர் போன ஒரு நடிகையிடம் இவர் அடிக்கடி சென்று வந்தார்.

அதன் பின்னர் 'அம்பிக' நடிகையுடன் சுற்றினார். 'கலைச் சேவையில்' கரை கண்டவர் அம்பிக நடிகை. தன் சேவையை வழங்கி கறக்க வேண்டியதைக் கறந்தார்.

'அம்பிக' நடிகைக்கு சமீபத்தில் திருமணம் நடந்துவிட்டது. அதனால் நடிகரின் பார்வை 'சங்கீத' நடிகையின் பக்கம் திரும்பியுள்ளது.

'பார்' நடிகருடனும், 'ராம' நடிகருடனும், பின்னர் ஒளிப்பதிவாளர் ஒருவருடனும் காதலில் சிக்கியவர் 'சங்கீத' நடிகை

ஒளிப்பதிவாளருடன் திருமணம் நடக்கப் போவதாக பேசப்பட்டது. ஒளிப்பதிவாளர் வீட்டில் சிகப்புக் கொடி காட்டப்படுவதால் திருமணம் தள்ளிப் போகிறது.

இந்தக் கட்டத்தில்தான் 'வேல்' நடிகரின் அரவணைப்பில் சிக்கியுள்ளார் நடிகை. திருமணத்தின் முன்பு 'வேல்' நடிகரின் கையிருப்பையும் கழற்றிக் கொள்ளலாம் என்று திட்டமிட்டுள்ளார் நடிகை. அதனால் வேல் நடிகரின் இழுப்புக்கெல்லாம் இசைந்து கொடுக்கிறார்.

## ஜாடை இல்லை

'வாலி' படத்தின் பின்னர் ஜோதிகாவுக்கு நல்ல நேரம். நக்மாவின் தங்கையான ஜோதிகா சூர்யாவுடன் ஜோடி சேர்ந்துள்ள படம் 'பூவெல்லாம் கேட்டுப்பார்.'

ஆகஸ்ட் 6இல் திரைக்கு வந்துள்ளது. 'வாலி' படம் போல இப்படம் பிரமாதமாகப் பேசப்படமாட்டாது. அதனால் ஜோதிகாவுக்கு ஏமாற்றம் காத்திருக்கிறது.

ஜோதிகாவும் சூர்யாவும் இணைந்து நிற்கும் படத்தைப் பாருங்கள். நக்மாவின் ஜாடை ஜோதிகாவிடம் மருந்துக்கும் இல்லையல்லவா.

மேலதிக தகவல்: 'வாலி' படம் இந்தியில் 'பாலி' என்ற பெயரில் தயாராகிறது. இந்தியில் 'வாலி'யை பாலி என்றே அழைப்பார்கள்.



"நீயா? இல்லை நானா?
நெஞ்சக் கதவை கொஞ்சம் திறந்தது
நீயா? இல்லை நானா?"

முரளி-சிம்ரான
படம்: கனவே கலையாதே

ர். அந்தப்
றுகிறாராம்.
னம் படங்
. பின்னர்
ட்டுள்ளன.
கலக்காது
போகிறார்
படத்திற்கு
குறிவைத்

## பாலசந்தரின் ஜன்னல்

நம் நாட்டிலும் தொலைக்காட்சி நேயர்களிடம் பலத்த வரவேற்பை பெற்ற தொடர், 'ஜன்னல்'. 'சன்' தொலைக் காட்சியில் பாலசந்தர் நாடகங்கள் நிறுத்தப் பட்டதால் ஜன்னலும் இங்கு பாதியில் நின்றது. ஆனால் தமிழ்நாட்டில் 'ராஜ் ரி.வி.'யில் தொடர்ந்தது.

தற்போது ஜன்னலின் அடுத்த பகுதி ஆரம்பமாகியுள்ளது. 'அடுத்த வீட்டு கவிதை' என்ற தலைப்பிலான இரண்டாவது பகுதியில் எஸ்.பி. பாலசுப்பிரமணியம், லட்சுமி ஜோடியாக நடிக்கின்றனர். இவர்கள் இருவரும் சின்னத்திரையில் முதன் முதலில் நடித்துள்ளனர்.

இங்கு 'சன் ரி.வி' மட்டுமே நம்மால் பார்க்க முடிகிறது. தமிழ் நாட்டில் 'சன்' னுக்கு போட்டியாக ராஜ் ரி.வி, நிலா ரி.வி விஜய் ரி.வி போன்றவற்றோடு விரைவில் ஜெயலலிதாவின் ஜெயா ரி.வியும் வரப்போகிறது.



"தொட்டுப் பார்!
தொடும்போது-இன்பம், இன்பம்
துள்ளாத
உள்ளம் துள்ளும்!"

## காதோடு சொல்லுகிறோம்

**கா**தலர்களது கொண்டாட்ட நாளை குறிக்கும் பெயருடன் வெளிவந்துள்ள படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் 'ரம்ப' நடிகை ஆட்டம் போட்டிருக்கிறார். அதற்காக பலரகங்கள் கிடைத்ததாம். இதனை அறிந்த சுந்தரமான இயக்குநர் கோபித்துக் கொண்டாராம். "உனக்கு பணம் தேவையானால் நான் தருகிறேன். இப்படி மார்க்கெட்டை குறைத்துக் கொள்ளாதே!" என்று ஆலோசனை ஜொள்ளினாராம்.

'குமார' இளம் நடிகருக்கும், 'ஷா' நடிகைக்கும் இடையே அமர்க்களமான படப்பிடிப்பில் நட்பு உருவாகியுள்ளது. பல காதலிகள் உள்ள 'குமார' நடிகர் 'ஷா' நடிகையுடன் எத்தகைய நட்பை நாடுகிறார் என்பது தெரியவில்லை.

**மூ**ன்றெழுத்து இளைய தளபதி நடிகரின் ரசிகர் மன்றங்களுக்கு இரகசிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம். எதிர்வரும் இந்திய தேர்தலில் தமிழ் நாட்டில் கழகத்தை ஆதரித்து பணியாற்றுமாறுதான் உத்தரவாம்.

'ஒருவன்' நாயகியான மும்பாய் நடிகையை சிலர் ஆசையோடு அணுகினார்களாம். அவரும் ஆசைக்கு ஆப்பு வைக்காது, தன் கூலியைக் கூறினாராம். தேடிப் போனவர்கள் துண்டைக்காணோம், துணியைக்காணோம் என்று ஓடிவந்து விட்டார்களாம்.

## இரண்டு நாயகிகள்

'ரோஜாவனம்' படத்தில் கவுசல்யாவுக்கு பதிலாக கார்த்திக் சிபாரிசு செய்த நாயகிதான் லைலா. இதில் இன்னொரு நாயகி மாளவிகா.

இந்த இரண்டு நாயகிகளுமே கார்த்திக்குடன் தாராளமாக நடந்து படப்பிடிப்பு தளத்திலேயே பலரையும் வெட்கப்பட வைத்துவிட்டார்களாம்.

'ரோஜாவனம்' ஆகஸ்ட் 6ம் திகதி வெண்திரைக்கு வந்துவிட்டது. கார்த்திக் படங்கள் தான் இப்போது வெற்றிக்கு உத்தரவாதம். ரோஜாவனமும் அதனை உறுதிப்படுத்துமா பார்க்கலாம்.

## மீனாவின் தோழர்

கார்க்கில் நிவாரண நிதிக்காக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மீனாவுக்கு பாதுகாப்பு விஜயகுமார்தான்.

அத்தனைபேர் . முன்பாக மீனாவை தோளோடு அணைத்தபடி வலம்வந்தார். விஜயகுமாரின் மனைவி நடிகை மஞ்சுளா பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்தார். அவர் இதையெல்லாம் கண்டுகொள்ளமாட்டார். அர்களுக்குள் அப்படி ஒரு ஒப்பந்தமாம்.



படிப்பகம்



## யார் இவர்?

இந்த சின்னம் சிறு பூ இன்று பெரும் நடிகை. சமீபத்தில் வெளியான தமிழ்ப்படம் ஒன்றிலும் நாயகி. இந்திப்பட உலகில் இருந்து தமிழுக்கு வந்தவர். என்ன தெரிந்து விட்டதா?

விடை உதவி 18ம் பக்கம்.

ஒடுக்குமுறை இரண்டு வகைப் படும். ஒன்று மறைமுக ஒடுக்குமுறை. இன்னொன்று வெளிப்படையான ஒடுக்குமுறை. உதாரணமாக, நம்நாட்டில் பாதுகாப்பு காரணங்களை கூறி கோவணத்தோடு மீன் பிடிக்குமாறு தமிழ் மீனவர்களுக்கு கட்டளையிடப் பட்டதல்லவா. இதனை மறைமுக ஒடுக்கு முறை எனலாம். இங்கு படத்தில் காண்பது பகிரங்கமான ஒடுக்குமுறை. அமெரிக்காவின் நிறவெறிக்கு உதாரணம். 1937ம் ஆண்டு மிஸிஸிப்பி மாநிலத்தில் வெள்ளை இனத்தவர் ஒருவரை இந்த கறுப்பின இளைஞன் ஏதோ ஒரு தகராறில் கொன்று விட்டான்.

# ஒடுக்குமுறை



'கறுப்பினத்தவன் நம் நிறத்தவனை கொல்வதா?' என்று கொதித்த நிறவெறியர்கள் கொடுத்த கொடூரமான தண்டனை தான் இது. சங்கிலியால் பிணைத்து இறுக்கியே கொன்று விட்டார்கள்.

## தேன்கிண்ணம்

## நன்றி! வணக்கம்!

புத்தகங்களாக
எழுதிய அந்த-
கற்பனை வாழ்க்கை
உன் பதிலோடு
எரிந்து போய்விட்டது!
*
இந்த தேசத்தில்
எந்த உயிரிகளுக்கும்
இந்த எரிவு வராமல்-
இருக்க பிராத்திக்கிறேன்!
*
புன்னகைக்காத
உதடுகள்
மலராத பூக்கள்
இவைகளுக்கு
இன்னுமொருதரம்
கும்பிடுபோட வேண்டும்.
*
ஏனெனில்
புன்னகைத்தவை,
மலர்ந்தவை,
நிச்சயமில்லாதவை!
*
சொல்லி வராததும்
சொல்லியும் போகாததும்,
கொடுக்கவும்-
கொடுக்க முடியாததுமானது
காதல் என்பது நிச்சயம்!
*
தொடர்புகள்
தொடக்கமாக
இருக்க முடியாது!
*
காலத்திற்கு
கட்டுப்படாதவர்களும்கூட
கடிகாரத்திற்கு
கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும்.
*
இன்றோடு-
இந்த தேசம்
இந்த புழுதிச்சுவாசம்
மலை முகடுகள்
நீரற்ற கால்வாய்
மனசு இல்லாத அவள்
இவைகளை விட்டு
காதல் அகதியாக
செல்கிறேன்!
*
நிம்மதி இருந்தால்
கால் வலிக்கும்!
*
சென்று வருகிறேன்
நன்றி! வணக்கம்!

எம்.ஏ. தஸ்ரிப்

## நீ யாரோ?

நீ யாரோ?
எனக்குத் தெரியாது-நீ
என்னை பெண் பார்க்க
நாளை வருவதாக,
தரகா் தகவல் தந்தார்.
-o-
எத்தனையோ நடவையாக
சேலை கட்டிக் கட்டி
சேமித்து வைத்திருக்கிறேன்
மன ரணங்களை,
சரி...
நாளையும் சேலைக் கட்டி
ஒரு சோலையாக,
உன் கண் முன்
காட்சி தீர காத்திருக்கிறேன்,
நீ யாரோ?
எனக்குத் தெரியாது.
-o-
இரவில்
இதயச் சுவரில்
எண்ணத் தூரிகை
கீறிப் பார்க்கிறது
இப்படியெல்லாம் உன்
முகவடிவு இருக்குமோ என்று:
நீ யாரோ?
எனக்குத் தெரியாது.
-o-
பொழுது விடிந்தது
எனக்கும் பொழுது
விடியாதா...? என்ற
பழைய ஆதங்கத்தோடு
உனக்காக காத்திருக்கிறேன்,
நீ யாரோ?
எனக்குத் தெரியாது.
-o-
என்
மனது முழுதும்
வேட்கை வேர்விட்டிருந்தது
நீ வந்து
நீர் வார்த்தால்-என்
வாழ்க்கை தளிர்விடுமென்று,
நீ யாரோ?
எனக்குத் தெரியாது.
-o-
வேறொரு பெண்ணை
நேர்முக பரீட்சை
நடத்த போய்விட்டதாக,
தரகரின் தந்தி
தகவல் சொல்லியது,
தவித்துப் போனேன்
உன் வருகை
தந்தியில்கூட
வரவில்லையேயென்று,
நீ யாரோ?
எனக்குத் தெரியாது.
-o-

கதிர் பிட்டியகந்தை.

## இந்தவாரம் உங்கள் பலன்

15.08.99 முதல் 21.08.99வரை

ஜோதிடர் 'கானா'

### மேடம்:

ஜென்ம நிலையில் பலம் கொள்வதால் எடுத்த விடயங்கள் ஓரளவு சீர் பெறும். உறவினர் நண்பர்களின் வருகையும், புதிய திட்டங்கள் சில கைகூடி கொடுக்கும். துலாராசிக்காரர் ஓரளவு உதவுவார்கள். அசுவினி நட்சத்திரருக்கு எதிர்பார்த்த விடயங்கள் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை: எண் : 7.
அதிஷ்ட திகதிகள் : 16, 20.

### இடபம்:

ஜென்ம, குடும்பஸ்தானங்கள் பலம் கொள்வதால் கல்வி, தொழில் சீராக அமைந்து கொள்ளும். பயணவாய்ப்புக்கள், பயிர்விருத்திகள் என்பன காணப்படும். கார்த்திகை நட்சத்திரருக்கு, பயண, பண வாய்ப்புக்கள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளம் சிவப்பு, எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 15, 21.

### மிதுனம்:

11ம் இடம் சிறப்பாக உள்ளது. கிரக அமைப்பு சாதகமாக உள்ளதால் பல்வேறுப்பட்ட முயற்சிகள் முன்னேற்றங்கள் காணப்படும் வாய்ப்பு உள்ளது. கல்வி, பரீட்சைகள் நன்றாக அமைந்து சென்றுவிடும். திருவாதிரை, புனர்பூச நட்சத்திரருக்கு அதிஷ்ட யோகம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை: எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 18,21.

### கடகம்:

அர்த்தஷ்டபம் அடையும் கிரக நிலைகளால் வீண் அலைச்சல்கள், செலவுகள் என்பன ஏற்படும் நிலை உருவாகும். மனதில் பயம், நோய் துன்பங்கள் கொடுக்கும். கல்வியில் சிற்சில தடைகள் ஏற்படும். வார இறுதியில் தூர இடத்திற்கு பயண வாய்ப்பு கூடும். ஆயிலிய நட்சத்திரருக்கு, சிறப்பு உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : சனி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : றோஸ்: எண் : 2.
அதிஷ்ட திகதிகள் : 20, 17.

### சிம்மம்:

யோகபலம் கொள்வதால் முயற்சிகள் கைகூடும். பிரயாண வசதிகள் எடுக்கப்படும். பண வசதி வந்து சேரும், மனதில் அமைதியும் குடும்பத்தில் பற்றும் காணப்படும். மக, உத்திராடம் நட்சத்திரருக்கு சிறப்பான காலமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்: எண்: 1.
அதிஷ்ட திகதிகள் : 15, 19.

### கன்னி:

பலபிரச்சனைகள் குறைவு பெறும். நோய் துன்பங்கள் குறைவுபெறும் அத்துடன் பணக்கொடுக்கல் வாங்கல்கள், தொழில் நிலை வளர்ச்சிகள் ஓரளவு சீராக அமைந்து செல்லும். எதிலும் நிதானமாக கவனமாக நடந்து கொள்ளவும் முயற்சிகளுக்கு வழி திறக்கும். உத்தர, அத்த நட்சத்திர பெண்களுக்கு சிறப்பு உண்டு.
அதிஷ்ட நாட்கள் : சனி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண் : 4.
அதிஷ்ட திகதிகள் : 18, 20.

### துலாம்:

களத்திரம பலம் கொண்ட கிரக நிலை பல வெற்றிகளைக் கொடுக்க இருக்கும். பலதான் எதிர்பார்த்த விடயங்கள் வந்து சேரும். முடிவுகள் பல செயல்படும். பரீட்சைகள், தொழில் முயற்சிகள் சிறப்பாக அமைந்து கொள்ளும். சிங்க, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள். மனதில் திருப்தியான வாரமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மருண் வர்ணம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 18, 21.

### விருச்சிகம்:

பணவசதிகள் ஏற்படும், அலைச்சல்கள் கரைச்சல்கள் தொடரப் பார்க்கும். மனதில் வார இறுதியில் அமைதி காணப்படும். கேட்டை, விசாக, நட்சத்திர காரர்கள் ஓரளவு அசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்: எண் : 8.
அதிஷ்ட திகதிகள் : 17, 19.

### தனுசு:

5 இல் குருபலம் கொள்வது காரிய சித்தியும் மனதில் தைரியமும் காணப்படும். தேவாலய தரிசனமும், இடமாற்ற இயல்பும் தூர இடத்தில் சென்றுவரக் கூடிய காலமாகவும் அமைந்து கொள்ளும். பூராட, உத்திராட நட்சத்திரருக்கு, உறவினர்களின் உதவி கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை: எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 15, 21.

### மகரம்:

மனதில் பயம் ஏற்படும், எடுத்த விடயங்கள் தடைப்படும். நோய் துன்பங்கள் சிக்கலைக் கொடுக்கும். திருமணத் தடைகள், வீண் பிரச்சனைகள் தலைதூக்கும். வார இறுதியில் உறவினர் நண்பர்களின் வசதிகள், உதவிகள் கிடைக்கும். எதிலும் கவனமாக செயல்படுவது மிகவும் நன்மையாகும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண் : 9.
அதிஷ்ட திகதிகள் : 16, 18.

### கும்பம்:

3 இல் சனிபலம் உள்ளதால் உறவினர்களை சந்திக்கும் வாய்ப்பு, மனதில் சிறுசங்கடமும் அமையும். அலைச்சல்கள் நோய் துன்பங்கள் ஏற்பட்டபடி அமையும். பொருள், முக்கிய சந்தர்ப்பங்களை இழக்கவேண்டி ஏற்படும். சதய, பூரட்டாதி நட்சத்திரகாரர் கவனமாக அவசரப்படாது இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 21, 17.

### மீனம்:

2இல் கிரகபலம் கொள்வதுவும், 5 இல் புதன் உள்ளதும் கல்வி, பரீட்சைகள் நன்றாக அமைந்து கொள்ளும். திருமண முயற்சிகள், குடும்ப மகிழ்வு அமையும். உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரருக்கு மகிழ்ச்சியான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 1.
அதிஷ்ட திகதிகள் : 19, 21.

## நில்-கவனி-முன்னேறு



- உங்கள் பதவி, வருமானம். கார் மற்றும் பங்களாவிற்கும் உங்கள் தோற்றத்திற்கும் சம்பந்தமில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
- பதவியில் வெளிப்படுத்தப்படும் உங்கள் திறமை, வருவாய்க்குள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் பாங்கு, எளிமையான தோற்றம், இயல்பான பேச்சு இவைகள்தாம் உங்கள் தோற்றத்தை நிர்மானிப்பவைகள்.
- பாக்கெட்டில் பேனா மற்றும் சிறிய பொக்கட் டயறியை எப்பொழுதும் வைத்திருங்கள். பொது இடங்களில் மற்றவர்களின் உதவியை எதிர்பாராது செயல்பட உதவும்.
- அலுவலகத்திற்கோ முக்கிய நிழ்ச்சிக்கோ போகும்போது தாமதத்தை முற்றிலும் தவிருங்கள்.
- உங்களின் அன்றாடப் பணிகளில் அவைகளின் முக்கியத்துவத்தைப் பொறுத்து வரிசைப்படுத்திக்கொண்டு செயல்படுங்கள்.
- ஒவ்வொரு தாமதத்திற்கும், தவறுக்கும் ஒவ்வொரு காரணத்தைக் கண்டு பிடித்து சமாதானம் செய்து கொண்டிராமல், அடுத்தடுத்து வேலைகளில் தாமதமும் தவறும் நேராதவாறு திட்டமிட்டுச் செயல்படுங்கள்.
- உங்களின் அன்றாடதேவைகளையும் வேலைகளையும் மற்றவர்களின் உதவியை நாடாமல், நீங்களே செய்து முடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
- அதிகமாக பேசுபவர்களின் செயல்பாடு குறைவானதாகவே இருக்கும். நேரத்தை பேசிச் செலவழிக்காமல் செயல்பாட்டில் செலவழியுங்கள்.
- மற்றவர்களின் சிறு தவறுகளை மன்னிப்பதில் தாராள மனதுடையவராக இருங்கள்.
- சிரித்த முகமும், இனிமையான பேச்சும், இயல்பான சுபாவமும்தான் உங்கள் ஆளுமையை மேன்மைப்படுத்திக் கொள்ள அடிப்படை தேவை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
- புகழையோ, பெருமையையோ எதிர்பார்த்து எதையும் செய்யாதிருங்கள். முக்கியமாக மற்றவர்களின் புகழ்ச்சி உரையில் மயங்காதிருக்கும் மனநிலைப் பெற்றவராய் இருங்கள்.
- உங்களுடைய தோற்றத்தை நீங்களாகவே உருவாக்குவதை காட்டிலும், உங்களைப் பற்றிய அபிப்பிராயத்தால் மற்றவர்கள் உங்களுக்குக் கொடுக்கும் தோற்றம்தான் சிறப்பானது.
- உங்கள் சொல், செயல், பேச்சு, நடை, உடை, பாவனைகளை... மேன்மைப்படுத்தி நேர்மையாய் செயல்படுங்கள். உயர்வான தோற்றத்திற்கு நீங்கள் தானாய் சொந்தக்காரராவீர்கள்.

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கூந்தல் இரகசியம்

கூந்தல் அடர்த்தியாக வளர இதோ சில வழிமுறைகள்:

✷ விரல் நுனியால் கூந்தலின் அடிப் பகுதியை (தலை ஓடு) மெதுவாக மசாஜ் செய்யவும். இவ்வாறு தொடர்ந்து செய்தால் கூந்தல் நன்றாக வளரும்.

✷ ஒரு முட்டை, அரை கப் பசும்பால், ஒரு மேசைக்கரண்டி தேங்காய் எண்ணெய் ஆகியவைகளை நன்றாக அடித்துக் கலக்கி, தலை ஓட்டில் தேய்த்து ஒரு மணிநேரம் சென்று கழுவுங்கள். தலையைச் சுத்தப்படுத்த பயறைப் பொடி செய்து பயன்படுத்தவும்.

✷ 4 மேசைக்கரண்டி கெட்டியான தேங்காய்ப்பாலில் ஒரு எலுமிச்சம்பழ சாறைப் பிழிந்துவிட்டுக் கலந்து வாரத்தில் ஒரு தடவை தலையில் தேயுங்கள்.

✷ இளவயது நரையையும், முடி உதிர்தலையும் போக்க நெல்லிக்காயை தண்ணீரில்



ஊறவைத்து, மருதோன்றியை அரைத்துக் கலந்து புரட்டுங்கள்.

✷ மருதோன்றி சேர்த்த எண்ணெயை தலையில் தேய்ப்பதால் முடி கருகருவென வளரும்.

## எடை பாருங்கள்

| வயது | சிறுவர் உயரம் (அடி) | சிறுவர் நிறை (கிலோ) | சிறுமியர் உயரம் (அடி) | சிறுமியர் நிறை (கிலோ) |
|---|---|---|---|---|
| 4 | 3.43 | 16.1 | 3.42 | 15.8 |
| 5 | 3.72 | 19.3 | 3.68 | 18.6 |
| 6 | 3.90 | 22.1 | 3.86 | 21.5 |
| 7 | 4.04 | 24.4 | 4.00 | 24.4 |
| 8 | 4.19 | 26.4 | 4.17 | 25.7 |
| 9 | 4.38 | 30.0 | 4.37 | 29.8 |
| 10 | 4.54 | 32.2 | 4.56 | 33.5 |
| 11 | 4.70 | 35.2 | 4.76 | 37.1 |
| 12 | 4.88 | 38.7 | 4.95 | 42.9 |

உங்கள் குழந்தைகளை அன்பும் ஆதரவும் காட்டி அரும்பாடுபட்டு வளர்ப்பீர்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்ட வயதில் எவ்வளவு நிறையோடு உயரத்தோடு இருக்க வேண்டும் என்பது பற்றி அறிவீர்களா? இது பற்றி இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் ஆரோக்கியமான குழந்தைகள் இந்த வயதில் இவ்வாறு இருக்கவேண்டும் என்று கூறுகிறது.

## அழகுக் குறிப்புக்கள்

### ஆமணக்கு எண்ணெய்:

இரவு படுக்கப் போகுமுன் ஒரு சொட்டு ஆமணக்கு எண்ணெயை இரு கண்களின் இமைகளிலும் பூசுங்கள். ஒரு மாதத்தில் கண் இமைகள் கருகருவென்று நீண்டு



அடர்ந்து அழகாகக் காணப்படும். கண்களும் நட்சத்திரமாக டாலடிக்கும். சின்னஞ்சிறு குழந்தைகளின் புருவத்தில் ஆமணக்கு எண்ணெய் தடவி வந்தால் புருவங்களும் கருமையாக அழகாக வளரும்.

" படுக்கப்போகுமுன் தலைமுடி வேரில் ஒரு கரண்டி ஆமணக்கு எண்ணெய் தடவி மசாஜ் செய்து விட்டு முழுகினால் தலைமுடி நன்கு வளரும்.

### தேன்:

முகம் மென்மையாகவும் பளபளப்பாகவும் வைத்திருக்க உதவுவது தேன். எண்ணெய்ப்பசை சருமம் கொண்டவர்கள், தேனில் முட்டையின் வெள்ளைக் கரு சேர்த்து அடித்துப் பூசலாம். வறண்ட சருமக்காரர்கள் தேனில் சிறிதளவு பால் சேர்த்துப் பூச வேண்டும். ஒரு பக்கெட் வெதுவெதுப்பான தண்ணீரில் ஒரு பெரிய கரண்டி தேன் சேர்த்துக் கலக்கிக் குளித்தால் களைப்புப் பறந்து போகும். குளியல் முடித்தபின் சுகமான தூக்கமும் வந்து கண்ணைத் தழுவும்.

### வெள்ளரிக்காய்:

சோர்ந்து களைத்த கண்களுக்கு வெள்ளரிக்காய் அருமருந்து, வெள்ளரிக்காய்த் துண்டுகளை இருகண்களின் மீதும் வைத்து அப்படியே கால் மணிநேரம் படுத்திருங்கள். துவண்ட கண்கள் துள்ளும். துருவிய வெள்ளரிக்காயில் சிறிது பால் சேர்த்து முகத்தில் தடிமனாகப் பற்றுப்போடுங்கள். அரை மணிக்குப்பிறகு கழுவினால் முகம் புத்துணர்ச்சியுடன் மிளிரும்.

### உருளைக்கிழங்கு:

முகத்தின் கரும்புள்ளிகளை நீக்கக்கூடியது உருளைக்கிழங்குச்சாறு. மேலும் 'எக்சிமா' எனப்படும் தோல் வியாதியைக்கூட குணப்படுத்தக்கூடியது. உருளைக்கிழங்கைத் துருவி, சாறெடுத்து முகத்தில் பூசுங்கள். தளர்ந்த தோலை இறுகச் செய்யும். மேலும் உருளைக் கிழங்குகளை வில்லையாக நறுக்கி கண்கள் மீது வைத்து வந்தால் கருவளையங்களும், உப்பிப்போன சதைப்பகுதியும் கூடக் குறையத் தொடங்கும். ■

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GF

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 21-08-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**மூதூர் வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | கு. உதயசந்திரிகா, 5ம் வட்டாரம், சம்பூர், மூதூர். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

வழங்குவது புவனா

03

# மோனிக்கா என் மோனிக்கா



தன் உடலை மெலிய வைப்பதற்கு மோனிக்கா காட்டிய ஆர்வம் தாயார் மார்சியாவுக்கு கலக்கமாக இருந்தது.

உடல் பெருத்துவிட்டதை எண்ணி மோனிக்கா அதிக கவலையடைந்திருப்பதன் வெளிப்பாடாகவே மார்ச்சியா அதனைக் கருதினார்.

மோனிக்காவையும் அழைத்துக் கொண்டு வடகரோலினாவில் உள்ள 'த ரைஸ் ஹவுஸ்' என்ற எடை குறைப்பு நிலையத்துக்கு சென்றார் மார்சியா.

அங்கே மோனிக்காவின் எடையை குறைப்பதற்கு பல ஆலோசனைகள் கூறினார்கள். அரிசியை மட்டுமே உணவாகக் கொடுத்து அதற்கேற்ற உடற்பயிற்சிகளும் சொல்லிக் கொடுத்தார்கள்.

அங்கு சில வாரங்கள் பயிற்சி. மோனிக்கா



தாயாரோடு மோனிக்கா

பயிற்சி பெற்றாள்.

தாயார் மார்சியா எதைச் செய்தாலும் தந்தையார் லிவின்ஸ்கிக்கு பிடிக்காது.

அந்த எதிரும்புதிருமான நிலை மோனிக்காவின் எடைக் குறைப்பிலும் எதிரொலித்தது.

தன்னைக் கேட்காமல் மார்சியா செய்த ஏற்பாட்டைக் குறைகூறினார் லிவின்ஸ்கி.

அதனால் மோனிக்காவின் உடல் எடைக் குறைப்பு பயிற்சி நின்றுவிட்டது.

மோனிக்காவுக்கு அழுகைதான் வந்தது. ஒழுங்காகச் சாப்பிடாது இருந்தாள்.

சாப்பிடாமல் இருந்தாவது உடலை மெலியவைக்கலாம் என்று நினைத்தாள்.

சாப்பிடாமல் இருந்ததால் உடம்பு சத்திழந்து, மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள்.

டாக்டர்களிடம் காண்பித்தனர். "ஒழுங்காக சாப்பிடாமல் இருக்கக்கூடாது. மகள் மனக்கவலையில் இருக்கிறாள். அதனால் எங்கள் மருந்து மட்டும் போதாது. நீங்களும் மருந்தாக இருக்க வேண்டும்!" என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

மோனிக்காவுக்காக அம்மா மார்சியாவும், அப்பா லிவின்ஸ்கியும் தங்கள் பகையை ஓரமாக வைத்துவிட்டு, உட்கார்ந்து கலந்தாலோசித்தனர்.

முதலில் உளவியல், உடலியல் நிபுணர் ஒருவரை அணுகினார்கள். அவருடைய ஆலோசனையின்படி லொஸ் எஞ்சலிலுள்ள கல்வார் சிற்றி ராடர் கிளினிக்கில் மோனிக்கா சேர்க்கப்பட்டாள்.

### திருப்பு முனை

மோனிக்காவின் வாழ்க்கையில் இந்த மருத்துவமனைப் பிரவேசம் ஒரு திருப்பு முனை என்றே சொல்ல வேண்டும்.

ஒரே மாதத்தில் மோனிக்காவின் குண்டுடல் கட்டுடலாக மாறியது.

உடல் மெலிந்ததோடு உளவியல் ரீதியாகவும் மோனிக்கா உற்சாகம் கொண்டவளாக மாறினாள்.

மருத்துவமனையில் மோனிக்காவின் உளவியல் ஆற்றலை வளப்படுத்தும் விதமான பயிற்சிகளும் தரப்பட்டன.

அப்போது அவளிடம் பல கேள்விகள் உளவியல் நிபுணர்களால் கேட்கப்பட்டன.

தனது பெற்றோரின் பிணக்குகளால் மோனிக்கா கடும் கவலை கொண்டிருந்தாள் என்பது அப்போது தெரிய வந்தது.

மோனிக்காவின் உணவுப் பழக்க வழக்கங்கள் மாற்றியமைக்கப்பட்டன.

தினசரி நடைமுறைச் செயற்பாடுகளும் மாற்றப்பட்டன.

'மனம் உண்டானால் மார்க்கம் உண்டு' என்போம் தமிழில்.

அதனைத்தான் உளவியல் நிபுணர்கள் மோனிக்காவுக்குப் படித்துப் படித்து சொல்லிக் கொடுத்தனர்.

"உன்னைப் பற்றி நீ எப்போதுமே தாழ்வாக எண்ணாதே! தாழ்வு மனப்பான்மைதான் உற்சாகத்தின் முதல் எதிரி. முன்னேற்றத்தின். முழு விரோதி!

நீதான் உலகிலேயே மிகவும் அழகி என்று நினைத்துக் கொள். நீ நினைத்தால் உலகமே உன் காலடியில் இருக்கும்."

தினசரி வகுப்புக்களில் அப்படித்தான் மோனிக்காவுக்கு உற்சாக மாத்திரைகள் கொடுத்தார்கள்.

## உற்சாக மாத்திரைகள்?

மோனிக்காவுக்குள் உற்சாக மாத்திரைகள் வேலை செய்தன.

அவள் இப்போது ஆண்களை ஏக்கத்துடன் பார்க்கும் பெண்ணல்ல. ஆண்களை வெகு அலட்சியமாக நோக்கினாள்.

அவளது அலட்சியமும், கம்பீரமும், புதிய மெருகும் ஆண்களை ஈர்த்தது.

அவளோடு நட்புக் கொள்ள ஆண்கள் நாடி வந்தனர். அவளது புன்னகைக்காக தவம் கிடந்தனர். தங்கள் ஜோக்குகளுக்கு அவள் சிரிக்கமாட்டாளா என்று ஏங்கினார்கள்.

மோனிக்கா சிரிக்க முடியாத ஜோக் சொன்னால்கூட அவளது ஆண் நண்பர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர்.

யாருடனும் அவள் அதிகம் நெருங்கவில்லை. யார் விரலும் தன் தேகத்தில் தீண்ட விடவில்லை.

"நான் விரும்புகிறவன் மட்டும்தான் என்னைத் தொட அனுமதிப்பேன். என்னை விரும்புகிறவன் எல்லாம் என்னைத் தொட அனுமதிக்க மாட்டேன்!"

என்று கூறுகின்ற மோனிக்காவை அவளது நண்பிகள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.



மோனிக்காவின் தந்தை

### பிரிவு

1987 செப்டம்பர் 21ம் திகதி மாலையை மோனிக்காவால் எளிதில் மறக்க முடியாது.

மோனிக்காவையும், அவள் தம்பியான மைக்கேலையும் தாயார் மார்சியா உணவகம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்.

'ஹம்போர்கர் ஹாம்லெட்' என்னும் அந்த உணவகம் மோனிக்கா குடும்பத்திற்குப் பிரியமானது.

அங்கு தங்களை தாயார் அழைத்துச் சென்று விருப்பமான உணவு வகைகளை வாங்கித் தந்தது இருவருக்கும் பெரு மகிழ்சியாக இருந்தது.

அந்த இனிய மாலைப் பொழுதில் அம்மா மார்சியா குண்டு ஒன்றை தூக்கிப் போடப் போகிறார் என்பது இருவருக்கும் தெரியாது.

பிள்ளைகள் இருவரிடமும் மார்சியா அந்தச் செய்தியைக் கூறினார்.

செய்தியைக் கேட்டதும் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்றே அவர் எதிர்பார்த்தார்.

"நானும் உங்கள் அப்பாவும் இன்று காலை முதல் தனித்தனியாகப் பிரிந்து விட்டோம்! இனிமேல் அவர் யாரோ, நான் யாரோ. நீங்கள் என்னோடு இருக்கலாம். நீங்கள் இருவருமே அம்மா பிள்ளைகள்."

தாயார் எதிர்பார்த்ததுக்கு மாறாக மைக்கேல் விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

மோனிக்கா எழுந்து தன் முகத்தை மூடிக்கொண்டு அருகே இருந்த ஒய்வு அறைக்கு ஓடினாள். அதற்குள் அரைமணிநேரம் அமர்ந்து அழுது தீர்த்தாள்.

பின்னர் மூவரும் வீட்டுக்குப் புறப்பட்டனர். காரின் பின் இருக்கையில் இருபிள்ளைகளுக்கும் நடுவில் இருந்து, இருவரையும் அணைத்த வண்ணம் மார்சியா ஆறுதல் வார்த்தைகளைக் கூறிக்கொண்டு இருந்தார்.

### தந்தை அழுதார்

மூவரும் வீடு திரும்பியபோது தந்தையாரான லிவின்ஸ்கி முன் மண்டபத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

மோனிக்கா அவரை நோக்கி 'அப்பா' என்றபடி ஓடினாள். பின்னால் மைக்கேலும் ஓடினான். இருவரும் தமது தந்தையைக் கட்டி அணைத்துக் கொண்டனர்.

லிவின்ஸ்கியும் தன் பிள்ளைகளுடன் சேர்ந்து கண்ணீர் விட்டு அழுதார்.

மோனிக்கா தன் கைக்குட்டையை எடுத்து தந்தையின் கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

இக் காட்சிகளைக் காண தாயார் மார்சியா அங்கு நிற்கவில்லை. மாடிப்படியேறி தன் அறைக்குள் புகுந்து கொண்டார்.

மோனிக்கா இந்த நாளைப் பற்றி பின்னர் நினைவு கூர்ந்தபோது:

"அது மிகவும் துன்பமானது. அதிர்ச்சியைத் தந்தது. உலகமே வெடித்துச் சிதறுவது போலிருந்தது. எனது வாழ்நாளில் மிகவும் துன்பமானதும், வேதனை தரத்தக்கதுமான நாள் அதுதான்!" என்று கூறினாள்.

மோனிக்காவின் கவலைகளை மறக்கடிக்கக்கூடிய சம்பவங்கள் அடுத்து நிகழத் தொடங்கின.

(வருவாள்)



படிப்பகம்





சக்தி தனக்கே கருவியாக்கு-அது
சாடியெழு கடைலயுந் தாவும்-கால்
சக்தி தனக்கே கருவியாக்கு-அது
சஞ்சலமில் லாமலெங்கும் மேவும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நல்ல குணம்



ஓர் ஊரில் ஒரு வயோதிபர் வாழ்ந்து வந்தார். அவர் பெரிய பணக்காரர். அவருக்கு மூன்று மகன்கள். தன் சொத்துக்களை மூவருக்கும் பகிர்ந்தளித்தார். இறுதியாக அவர் விரலில் போட்டிருந்த வைர மோதிரம் ஒன்று மட்டும் இருந்தது.

ஒருநாள் மூன்று பேரையும் அழைத்து, "என்னிடம் விலையுயர்ந்த மோதிரம் ஒன்று உள்ளது. ஆனால் நீங்கள் மூன்றுபேர் உள்ளீர்கள். அதனால் உங்கள் மூவரில் யார் நல்ல காரியம் செய்கிறாரோ அவருக்கே வைர மோதிரம். அதற்காக உங்களுக்கு ஒரு மாதகால அவகாசம் தருகிறேன்," என்று சொன்னார்.

ஒருமாதம் கழித்து மூவரும் தந்தையிடம் வந்தனர்.

முதல் மகன், "தந்தையே! ஒருவன் வந்து என்னிடம் அதிக பணம் தந்து அதை ஒரு வாரம் வைத்திருக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றான். ஒரு வாரத்தின்பின் அவன் பணத்தைத் திருப்பிக் கேட்க, அதை நான் கொடுத்துவிட்டேன்!" என்றான்.

அதற்கு வயதானவர், "நீ நல்லகாரியம் தான் செய்துள்ளாய். ஆனால் இந்தக் காரியத்தை எல்லாரும் செய்வார்கள்," என்று கூறினார்.

பின் இரண்டாவது மகன் வந்து, "நான் ஒரு வழியாகச் சென்று கொண்டிருந்தபோது குழந்தை ஒன்று குளத்தில் விழுந்துவிட்டது. நான் குளத்தில் குதித்து அக்குழந்தையைக் காப்பாற்றினேன்," என்றான்.

அதைக் கேட்ட வயதானவர், "ஒரு உயிரைக் காப்பாற்றுவதுதான் மனித குணம். நீ நல்லதுதான் செய்திருக்கிறாய். எதற்கும் உன் தம்பி என்ன செய்திருக்கிறான் என்று பார்ப்போம்!" என்று சொன்னார்.

கடைசி மகனைப் பார்த்து, "நீ என்னப்பா செய்தாய்?" என்று வயோதிபர் கேட்டார்.

அதற்கு அவன், "அப்பா! நான் ஒரு காரியமும் செய்யாமல் வீதியால் வந்து கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய பகைவன், அவன் வீட்டுத் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தான். அந்நேரத்தில் ஒரு கொடிய விஷப்பாம்பொன்று அவனைக் கடிக்கச் சென்றது. நான் ஓடிச்சென்று அந்தப் பாம்பைக் கொன்றுவிட்டேன்," என்றான்.

அதற்கு வயதானவர், "நீ செய்ததுதான் உயர்ந்த செயல்; உன்னுடைய பகைவன் என்றுகூட நினைக்காமல், அவன் உயிரைக் காப்பாற்றியுள்ளாய். இதனால் இந்த வைர மோதிரம் உனக்குத்தான்!" என்று கூறி வைர மோதிரத்தை மூன்றாவது மகனுக்குக் கொடுத்தார்.

**'குழந்தைகளே! எமது பகைவனுக்கு ஆபத்து என்றால், அந்த நேரத்தில் பகையை மறந்து அவனுக்கு உதவி செய்ய வேண்டும். இதுதான் நல்ல குணம்!'**

# அதிசயம் - ஆனால் உண்மை!



ஆபிரிக்காவில் போர்னு என்ற நாட்டின் அரசன் அமீர் அலி இபன் ஹஜ் 1000 குதிரைப்படை வீரர்களுடன் அஹீர் என்ற அண்டை நாட்டின்மீது படை எடுத்தான். போர்னு நாட்டு மாது ஒருவரிடம், அஹீர் நாட்டு சிப்பாய் பானை மூடி ஒன்றைத் திருடியதே படையெடுப்பிற்கான காரணம். இறுதியில் அமீர் மூடியைக் கைப்பற்றினான். இதற்காக தனது 70 குதிரை வீரர்களைப் பலி கொடுத்தான்.



ஃபிரெஞ்சுப் புரட்சி வீரரான ஜீன் பிஷன் டி விலன்யுவ் சிறு வயதிலிருந்தே பலமுறை பயங்கரக் கனவுகள் கண்டு வந்தார். அவரையும் அவரது கூட்டாளிகளையும் காட்டுமிருகங்கள் கடித்துக் குதறுவதாக இருந்தது அவரது கனவு. அதேபோல் 1794ல் பிஷனும் அவரது நண்பர்களும் காட்டில் மிருகங்களால் கடித்துக் கொல்லப்பட்டார்கள்.



பாக்தாத் நாட்டை ஆண்ட கலீஃபா தாஹேர் ஆட்சியில் அமர்வதற்கு முன் அவரது தந்தையால் 19 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறையில் விலங்குடன் இருந்து பழக்கப்பட்ட இவரால் வெளியே விலங்கில்லாமல் இருக்கமுடியவில்லை. சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும்போதும் விலங்கு பூட்டிக் கொண்டிருப்பார்.

# ஸ்லீப்பிங் பியூட்டி

## (SLEEPING BEAUTY)




பல நூற்றாண்டுகளுக்கு முன் அழிந்து போனதாகக் கூறப்பட்ட ஒரு தாவரத்தின் விதையை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் எதிர்பாராத விதமாகக் கண்டுபிடித்தனர். 1989ல் எதையோ தோண்டிப் பார்க்க முற்பட்டபோதுதான் இந்த விதை கிடைத்தது.

அந்த விதையைப் பரிசோதனைச்சாலையில் முளைக்க வைத்து பிறகு நிலத்தில் வளர விட்டார்கள். 10. ஆண்டுகளுக்குப்பிறகு பெரிய மரமாகி தற்போது பூத்துக் குலுங்குகிறது.

இந்தப் பழமையான தாவரத்தின் தன்மை மற்றும் பயன்கள் பற்றி இப்போது ஆராயப்பட்டு வருகிறது. பல ஆண்டுகளாக பூமிக்கு அடியில் புதைந்து கிடந்து, மீண்டும் முளைத்து எழுந்ததால் இத்தாவரத்திற்கு 'ஸ்லீப்பிங் பியூட்டி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

# ஏன் தெரியுமா?



ஐஸ்கட்டி ஒன்றை தண்ணீரில் போட்டால் அது மிதந்து கொண்டிருக்கும். இப்படி மிதப்பதற்குக் காரணம் என்ன வென்று தெரியுமா உங்களுக்கு?

தண்ணீரின் அடர்த்தியைவிட ஐஸ்கட்டியின் அடர்த்தி குறைவாக இருப்பதே இதற்குக் காரணம். பொதுவாக திரவ வடிவில் உள்ள பொருளை மேலும் மேலும் குளிர்வித்தால் அது திண்ம நிலையைப் பெறும். அப்படித் திண்ம நிலையை அடையும்போது அதன் கொள்ளளவு குறைந்து அடர்த்தி அதிகரிக்கின்றது.

சாதாரண தண்ணீர் அடர்த்தி குறைவாக இருக்கும். இதனால்தான் அடர்த்தி கூடிய ஐஸ்கட்டியை, அதனிலும் அடர்த்தி குறைந்த சாதாரண தண்ணீரில் போடும்போது ஐஸ்கட்டி மிதக்கிறது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **21.08.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **309**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 307

### பரிசுக்குரியவர்:

ஸ்ரீஸ்கந்தராஜா வினோதன்,
இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| வைஷ்ணவி மகேஸ்வரன்,<br>சாந்த அந்தோனியார் மகளிர் கல்லூரி, கண்டி. | எல். ராதிகா,<br>மலை மகள் மத்திய கல்லூரி. |
| அ.மா. பாத்திமா லீனா,<br>கமு/ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை-03. | என். றிஸ்மினா,<br>அசோகாராம வீதி, டிக்வெல்ல. |
| வை. சியாட்,<br>அநு/நேகம முஸ்லிம் மகா வித்தியாலயம், நேகம்பஹா. | ஷர்மினா கிரிதரன்,<br>சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை, கொழும்பு-06. |
| பே. தினேஸ்குமார்,<br>கமு/கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. | வி. பிரதீபா,<br>இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-06. |
| செல்வி ஷருவான்,<br>மதீனா முஸ்லிம் வித்தியாலயம், கனேதன்ன, ஹிங்குல. | பி. பிரியதர்சனி,<br>தமிழ் தேசிய கல்லூரி, பண்டாரவளை. |

# குட்டிச் செய்திகள்

- பாம்புகள் ஒலியலைகளை அவற்றின் நாக்குகளால்தான் உணர்கின்றன.
- இயற்கை வைரங்கள் எப்போதும் குளிர்ச்சியாகவே இருக்கும்.
- விலங்கினங்களில் யானைக்கு மட்டுமே 4 கால்களையும் மடக்கும் சக்தி உண்டு.
- டேபிள் டென்னிஸ் விளையாட்டிற்கு முதன் முதலில் வைத்த பெயர் கோசமர்.
- உலகில் முதன் முதலில் அணுப் பரிசோதனை நடத்திய நாடு அமெரிக்கா.

# ஊழல் நாடுகள்

வர்த்தகம் செய்வதில் உலகிலேயே குறைந்தளவு ஊழல்களைக் கொண்டுள்ள முதல் 3 நாடுகள் நியூஸிலாந்து, டென்மார்க், சிங்கப்பூர் ஆகியவை. இத்தகவலை ஜெர்மனியில் பெர்லின் நகரில் உள்ள 'ட்ரான்ஸ்பரன்ஸி நஷனல்' என்னும் அமைப்பு வெளியிட்டுள்ளது.

**ஊழல் குறைவான நாடுகள்:**

| | |
|---|---|
| 1. நியூஸிலாந்து | 2. டென்மார்க் |
| 3. சிங்கப்பூர் | 4. ஃபின்லாந்து |
| 5. கனடா | 6. சுவீடன் |
| 7. அவுஸ்திரேலியா | 8. சுவிற்ஸர்லாந்து |
| 9. நெதர்லாந்து | 10. நோர்வே. |

**ஊழல் அதிகமான நாடுகள்:**

| | |
|---|---|
| 1. இந்தோனேஷியா | 2. சீனா |
| 3. தாய்லாந்து | 4. இந்தியா |
| 5. ஃபிலிப்பைன்ஸ் | 6. பாகிஸ்தான் |
| 7. மெக்ஸிக்கோ | 8. இத்தாலி |
| 9. பிரேஸில் | 10. வெனிஸுலா. |

# இராட்சத சிலந்தி

கோலியாத் சிலந்தி என்பது சிலந்தி இனங்களில் ஒன்று. இது தனது வலைக்குள் ஒரு பெரிய பூச்சி விழுந்தால்கூட அதன் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து விடும். இந்த வகைச் சிலந்திகளின் ஒரு காலின் நீளம் மட்டும் 11 அங்குலம். இவை 5 அடி விட்டத்திற்கு வலை பின்னுகின்றன. ஆபிரிக்கக் காடுகளில் இந்த இராட்சத சிலந்திகள் காணப்படுகின்றன.

# போசம் (POSSUM)




இது அவுஸ்திரேலிய மற்றும் நியூகினிய தீவுகளில் வாழும் ஓர் உயிரினம். இவற்றின் உணவு இலை, பழம், பூச்சிகள்.

மரங்களில் வாழும் இவற்றிற்கு மிகவும் பிடித்தமான உணவு என்ன தெரியுமா? பூக்களில் இருக்கும் சிறுபூச்சிகள் தான்.

இவை பூச்சிகளை எப்படிப் பிடிக்கும் என்பதைப் பார்ப்போம். மரக் கிளைகளின் மேல் இவை வந்து, தமது வால்களால் மரக் கிளையை ஒரு சுற்றுச் சுற்றிக் கொள்ளும். பிறகு, தமது பின்னங்கால்கள் இரண்டாலும் மரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும்.

பின் தமது நீளமான நாக்கினைப் பூவிற்குள் விட்டு பூவிலுள்ள பூச்சிகளைத் தேடும். அதன்பின் நாக்கை பூவிலிருந்து வெளியே இழுக்கும்போது, பூச்சிகள் நாக்கில் ஒட்டியிருக்கும். பிறகென்ன? பூச்சிகளைச் சுவைத்துச் சாப்பிட்டுவிடும்.

# சூரிய கிரகணம்



சூரிய கிரகணம் ஏற்படும்போது வெற்றுக் கண்களால் பார்ப்பதால் பல தீங்குகள் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சூரிய கிரகணத்தின்போது புற ஊதாக் கதிர் வீச்சுக்கள் ஏற்படுகின்றன. நாம் சூரிய கிரகணத்தை வெற்றுக் கண்களால் பார்க்கும் போது, புற ஊதாக் கதிர்களால் கண்களின் வெளிப்படலம் பாதிக்கப்படும். இதனால் 'கட்ராக்ட்' என்ற நோய் வரும்.

எனவே பாதுகாப்பு முறையுடன் சூரிய கிரகணத்தைப் பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் குருட்டுத் தன்மை ஏற்படும். விழித்திரையும் காயமடையும்.

# வைப்பர் (VIPER)



விரியன் பாம்புகளுக்கு ஆங்கிலத்தில் 'வைப்பர்' (VIPER) என்று பெயர். வைப்பர் என்ற சொல் இலத்தீன் மொழியில் இருந்து வந்ததாகும். இலத்தீன் மொழியில் வைப்பர் என்றால் 'குட்டிபோடுதல்' என்று பொருள்.

அநேகமான பாம்புகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். ஆனால் விரியன் இனப் பாம்புகள் குட்டிபோடும். இதனால் தான் இவற்றிற்கு வைப்பர் என்ற பெயர் ஏற்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

> **இதுவரை**
> பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது.
> இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். **இனி...**

பார்கவி வர்ணாவையே இமைக்காமல் பார்த்து மூச்சிறைத்தபடி பேச ஆரம்பித்தாள்.

"வர்ணா.. ஆறு மாசத்துக்கு முன்னாடி என் வீட்ல ஒரு திருட்டு நடந்ததே... உனக்கு ஞாபகம் இருக்கா...?"

"ம்.. ஞாபகம் இருக்கு. உன்னோட



# சிக்கிய மின்னல் 16



பத்து பவுன் செயின் திருட்டுப் போனதைத்தானே சொல்றே?"

"ஆமா..."

"அதுக்கென்ன இப்போ..?"

"அன்னிக்கு உண்மையிலேயே திருட்டு நடக்கலை."

"பின்னே...?"

"அந்த நகையை நான்தான் எடுத்து வெச்சுக்கிட்டு திருட்டுப் போயிட்ட மாதிரி எம் புருஷனுக்கு முன்னாடி நடிச்சேன்..." சொல்லிவிட்டு பார்கவி மூச்சிறைக்க- வர்ணா வியப்பில் உறைந்து போனவளாய் மெல்லக் கேட்டாள்.

"ஏன் அப்படிப் பண்ணினே..?"

"வர்ணா...! உனக்கே தெரியும். ஊர்ல இருக்கிற என்னோட அப்பாவும், அம்மாவும் என் தங்கச்சி கஸ்தூரிக்கு ஒரு கல்யாணத்தை முடிக்க எவ்வளவு கஷ்டப்படறாங்கன்னு...! பத்துப் பவுன் கையில் இருந்தா ஒரு நல்ல மாப்பிள்ளைக்கு கஸ்தூரியைக் கட்டிக் கொடுத்துடலாம்னு என்னோட அம்மா சொன்னாங்க. நான் பலநாள் யோசனை பண்ணிப் பார்த்துட்டு கடைசியில் எம் புருஷன் வெளியூர் போயிருந்த சமயத்துல பத்துப்பவுன் நகைய எடுத்து ஓர் இடத்துல ஒளிச்சு வெச்சுட்டு, நகைய யாரோ திருடிட்டுப் போயிட்டதா சொன்னேன். என் புருஷன் உள்பட எல்லாரும் நம்பிட்டாங்க... பொலிஸ் ஸ்டேஷன்ல திருட்டு போயிட்டதா ஒரு புகார்கூட இருக்கு. வர்ணா நான் பண்ணினது தப்பான காரியம்தான். இருந்தாலும் எனக்கு வேற வழி தெரியலை. பத்து பவுன் நகையில்லாமே என்னோட தங்கச்சிக்கு கல்யாணம் ஒண்ணை நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது..."

வர்ணா, அவசரக் குரலில் இடைமறித்துக் கேட்டாள்.

"இப்ப அந்த நகை எங்கே இருக்கு? உன்னோட அப்பா அம்மாகிட்ட கொண்டுபோய்க் குடுத்துட்டியா?"

"இல்ல... அவங்களுக்கு இந்த விஷயம் தெரியாது. அந்த பத்து பவுன் நகைய பரண் மேல இருக்கிற, ஒரு பழைய பெயிண்ட் டப்பாவுக்குள்ளே போட்டு வெச்சிருக்கிறேன். அந்த நகையை எம் புருஷனுக்குத் தெரியாம என்னோட அப்பா, அம்மாகிட்ட நீ கொண்டு போய் சேர்க்கணும். என் குடிகார புருஷன் கிட்டயிருந்து பத்து பவுன் நகையைக் காப்பாத்துறதுக்கும் என் தங்கச்சி கஸ்தூரி கல்யாணம் நடக்கிறதுக்கும் இதைத் தவிர வேற வழி எனக்குத் தெரியலை... வர்ணா! என் உயிர் பிரியப்போற கடைசி நிமிஷத்துல எனக்கு உதவி செய்யறதுக்காகவே நீ வந்திருக்கே. அந்தக் கடவுள்தான் உன்னை அனுப்பி வெச்சிருக்கணும்..."

வர்ணா பார்கவியை இறுகப் பற்றிக் கொண்டாள். "பயப்படாதே பார்கவி! உனக்கு ஒண்ணும் ஆகாது. தைரியமாயிரு. நீ செத்துப் போயிடற மாதிரி உனக்கு ஒண்ணும் ஆயிடலை... நீ கண்டிப்பா உயிர் பிழைக்கத்தான் போறே..."

வர்ணா சொல்லிக் கொண்டிருக்கும் போதே டாக்டரும் இன்ஸ்பெக்டரும் உள்ளே வந்தார்கள்.

"என்னம்மா...ஸ்டேட்மெண்ட் கொடுத்தாளா...?"

"கொடுத்தா ஸார்...! பார்கவியோட நிலைமைக்கு யாரும் காரணமில்லை. ஷெல்ப்புல வெச்சிருந்த மண்ணெண்ணெய் டின்னை எடுக்கறதுக்காக பார்கவி முயற்சி பண்ணியிருக்கா.. டின் எதிர்பாராத விதமாகவிழ்ந்து எண்ணெய்யெல்லாம் மேல கொட்டியிருக்கு. பக்கத்துல ஸ்டவ் எரிஞ்சிட்டிருந்ததால உடம்புல தீப் பிடிச்சுடிச்சு..."

"இதுதான் பார்கவியோட ஸ்டேட்மெண்டா?"

"ஆமா...ஸார்..."

"இதை எங்ககிட்டயே சொல்லியிருக்கலாமே. இதுல போய் என்ன இரகசியம் வேண்டிக் கிடக்கு...?"

"அவ உங்களையெல்லாம் பார்த்து ரொம்பவும் பயப்படறா ஸார்.." இன்ஸ்பெக்டர் பார்கவிக்குப் பக்கத்தில் வந்து குனிந்த நிலையில் கேட்டார்.

"அப்படீன்னா உன்னோட உடம்புல தீப்பிடிச்சதுக்கு காரணம் உன் புருஷனோ அந்நிய ஆட்களோ யாரும் காரணம் இல்லை...?"

பார்கவி 'இல்லை' என்பது போல் தலையாட்டினாள். வர்ணா டாக்டரிடம் திரும்பினாள்.

"டாக்டர்..."

"என்னம்மா...?"

"பார்கவியை உடனடியா ஹாஸ்பிடலைஸ் பண்ணணும். ப்ளீஸ் அதுக்கு வேண்டிய ஏற்பாடுகளை பண்ணுங்க..."

டாக்டர் வர்ணாவின் பக்கமாய் தலையை மெல்லச் சாய்த்துக் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னார்:

"ஹாஸ்பிடலுக்கு கொண்டுபோய் பிரயோசனம் இல்லேம்மா... அந்தப் பொண்ணு

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

உயிரோட இருக்கப் போறது இனி சில நிமிஷங்கள்தான். ஹார்ட் பீட் பல்ஸ் ரேட் எல்லாமே கடைசி நேரத் துடிப்புகளோடு இருக்கு... உடம்பை மூவ் பண்ணி வேனுக்கு கொண்டு போறதுக்குள்ளே உயிர் போயிடும்."

"டாக்டர்... நீங்க சொல்ற அளவுக்கு மோசமான கண்டிஷன்ல பார்கவி இல்லை. கான்ஷியஸ்ஸோடு நல்லா தெளிவா பேசறா... நீங்க வேணும்னா அவ கூட பேசிப்பாருங்க. ஹாஸ்பிடலுக்குக் கொண்டுபோய் ப்ராப்பர் ட்ரீட்மெண்ட் கொடுத்தா பார்கவி நிச்சயமா உயிர் பிழைச்சுக்குவா டாக்டர்."

டாக்டர் கோபமாய் அவளைப் பார்த்தார்.

"இப்ப நீ டாக்டரா... இல்ல நான் டாக்டரா..? இது மாதிரி எத்தனை தீக் காயக் கேஸ்களைப் பார்த்திருப்பேன். நான் வெச்ச கெடுவை இதுவரைக்கும் எந்த கேஸும் தாண்டியதில்லை. இந்தப் பொண்ணுக்கு ஏற்பட்டிருக்கிற தீக்காயத்தோட அளவுகோல் மருத்துவரீதியா பார்க்கப்போனா எழுவது சதவீதம். ஐம்பது சதவீதம் இருந்தாலே உயிர் பிழைக்கிறது கஷ்டம்.."

"எதுக்கும் ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணிப் பார்க்கலாம் டாக்டர்..."

"என்னம்மா நீ..?" டாக்டர் எரிச்சலோடு சொல்லிக்கொண்டே பார்கவிக்குப் பக்கத்தில் போய் குத்துக்காலிட்டு உட்கார்ந்து அவள் கையைப் பிடித்துப் பார்த்தார்.

அவர் முகம் ஒரு மாறுதலுக்கு உட்பட்டது.

பார்கவியின் நாடித்துடிப்பு ஆரோக்கியமாக இருந்தது. அவசர அவசரமாய் இதயத் துடிப்பை பரிசோதித்தார்.

பத்து நிமிடங்களுக்கு முன்புவரை பலஹீனமாய் நொண்டிக்கொண்டிருந்த இருதயம் இப்போது அட்சர சுத்தமாய் 'லப்டப் லப்டப்' என்று சொல்லிக்கொண்டிருந்தது.

டாக்டர் வியப்போடு வர்ணாவை ஏறிட்டார். "நீ சொன்னது சரிதாம்மா- இந்தப் பொண்ணை உடனடியா ஹாஸ்பிடலைஸ் பண்ணினா உயிர் பிழைக்க வாய்ப்பிருக்கு. உன் கையில் நீ என்னம்மா வெச்சிருக்கே, மந்திரக்கோலா...? பார்கவியை கொஞ்ச நேரம் தொட்டுப் பேசினதுமே இப்படியொரு சேஞ்ச்?"

டாக்டர் இப்படிச் சொன்னதும் வர்ணாவின் மனசுக்குள் ஒரு மின்னல் வெட்டியது.

'உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நாய்க்குட்டி பிங்கி அதிசயமாய் உயிர் பிழைத்ததற்கும் இப்போது பார்கவி உயிர் பிழைத்ததுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ?'

வர்ணாவுக்கு மேற்கொண்டு யோசிக்க பயமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

❊❑❊

"வாங்க... இன்ஸ்பெக்டர்...! நீங்க தேடிட்டு வந்த மிதுன் நான்தான். பூவிழி கொலையான செய்தியைப் பேப்பர்ல படிச்ச நிமிஷத்திலிருந்து உங்களை நான் எதிர்பார்த்துட்டிருக்கேன், ப்ளீஸ்... உள்ளே வாங்க...!"

இப்படி மிதுன் வரவேற்றதும் இன்ஸ்பெக்டர் பலராமன் ஒரு புன்னகையோடு அவனுக்கு எதிரே போய் நாற்காலியை இழுத்துப்போட்டு உட்கார்ந்தார். சில விநாடிகள் நிசப்தம் காத்த பின் கேட்டார்.

"உண்மையை இங்கேயே சொல்றியா, இல்ல பொலிஸ் ஸ்டேஷனுக்கு வந்து சொல்றியா...?"

"எந்த உண்மையைக் கேட்கறீங்க இன்ஸ்பெக்டர்?"

"பூவிழியைக் கொலை பண்ணினது நீதானே...?"

"யாராவது அப்படிச் சொல்லி, வந்தீங்களா... இல்லை நீங்களாகவே கெஸ் பண்ணிட்டு வந்தீங்களா...?"

"கொலை செய்யப்பட்ட பூவிழியே உயிர் பிரியும் நேரத்தில் உன்னை இப்படி தாக்கினது யார்ன்னு கேட்ட கேள்விக்கு 'மிதுன்'னு சொல்ல நினைச்சு 'மி'ங்கிற ஒரு எழுத்தை மட்டும் சொல்லி உயிரை விட்டா. பூவிழி கொலை சம்பந்தமா நடத்திய விசாரணையில் உனக்கும் அவளுக்கும் அடிக்கடி மோதல் நிகழ்ந்ததா தெரிய வந்திருக்கு. ஸோ, அவளைக் கொலை பண்ணினது நீதான்னு ஒரு முடிவுக்கு வர எக்ஸ்ட்ரா புத்திசாலித்தனம் எதுவும் வேண்டாம்னு நினைக்கிறேன்."

மிதுன் புன்னகைத்தான். "இன்ஸ்பெக்டர்! ஒண்ணும் ஒண்ணும் ரெண்டுன்னு சுலபமா கணக்கு போடறமாதிரி அதையும் இதையும் முடிச்சுப்போட்டு எனக்கு கொலைக்காரன் பட்டம் கட்டிடாதீங்க. பூவிழி 'மி'ன்னு ஒரு எழுத்தைச் சொன்னா அது நான்தானா...? 'மி'ங்கிற எழுத்துல ஆரம்பமாகிற எத்தனை பேரோட நேம் லிஸ்ட் உங்களுக்கு வேணும்...? தரட்டுமா...?"

மிதுன் ஆவேசமாய் கேட்டுக் கொண்டிருக்கும்போதே அறை வாசலில் ஒரு கட்சித் தொண்டர் உற்பத்தியானார்.

"மிதுன் அண்ணே... உங்களுக்குஃபோன் வந்திருக்கு. லைன்ல தலைவர் இருக்கார்ன்னு நினைக்கிறேன். போய் பேசுங்க..."

மிதுன் இன்ஸ்பெக்டரிடம் திரும்பினான். "நான் ஃபோன் பேச போலாமா...?" நான் அப்படியே ஓடிடுவேன்னு நினைச்சா என் கூட வாங்க..."

"இல்ல... நீ போய் பேசிட்டு வா. நான் வெய்ட் பண்றேன்."

"என் மேல் நம்பிக்கை வெச்சதுக்கு ரொம்பவும் நன்றி ஸார்.."

மிதுன் எழுந்து போனான்.

மாடியின் இரண்டாவது அறையில் டெலிஃபோன் இருந்தது. ஆள் அரவமற்ற அந்த அறைக்குள் நுழைந்து மேஜையின் மேல் ஒருக்களித்து விழுந்திருந்த ரிஸீவரை எடுக்க முயன்றான் மிதுன்.

பின்பக்கம் ஏதோ சத்தம் கேட்டது.

காலடிச் சத்தம்.

யார் என்று தெரிந்துகொள்ள மிதுன் திரும்பிய விநாடி அவனுடைய அடி வயிற்றில் அந்த ஒன்பது அங்குல நீளக் கத்தி மூர்க்கமாய்ப் பாய்ந்தது.

(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# தர்ம யுத்தம் 01

தென்னிந்தியாவின் நான்கு மொழிப் படங்களும் சென்னையில் மட்டுமே தயாராகிவந்த காலம் அது. இடையில் இந்திப் படங்களும் நிறைய உண்டு. சென்னை நகரில் சினிமாத் தொழில் செழித்துக் கொழித்துக் கொண்டிருந்தது.

அந்த நாளில் சினிமா ஷூட்டிங் என்றால் அது ஸ்டூடியோக்களில்தான். ஷூட்டிங் பார்ப்பது என்பது பலத்த சிபாரிசுகள் இருந்தால்தான் முடியும். சென்னைக்கு வந்து போகும் மனிதர்கள், தங்களது சொந்த ஊர் திரும்பிச் சென்று, "நாங்க மெட்ராஸிலே ஷூட்டிங் பார்த்தோம்," என்றால் அவர்களைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.

"அந்த நடிகரைப் பார்த்தீர்களா? இந்த நடிகையைப் பார்த்தீர்களா?" என்று சந்திர மண்டலம் சென்று வந்தவரைப் பார்ப்பது போல் பார்ப்பார்கள். ஷூட்டிங் என்கிற ஆங்கில வார்த்தைக்கு தமிழில் வேறு பல அர்த்தங்கள் இருந்தாலும், நம்மவர்கள் மனதில் பதிந்த ஒரே அர்த்தம் சினிமா படப்பிடிப்புதான்.

விஜயவாஹினி, ஏ.வி.எம். போன்ற ஸ்டூடியோக்களில் நுழைந்துவிட்டால், அன்று நமக்கு அதிஷ்டமான நாள்தான். ஒரு ஃப்ளோரில் எம்.ஜி.ஆர். இருப்பார். இன்னொரு ஃப்ளோரில் சிவாஜி இருக்கலாம். திடீரென்று என்.டி.ஆர். வருவார். பிரேம் நசீரைக்கூட பார்க்க முடியும். உணவு இடைவேளையின்போது, மொழி மறந்து, இனம் மறந்து, கலை ஒன்றையே நினைத்துப் பழகுகிற நல்ல உள்ளங்கள் அன்றிருந்தன.

அன்று ஒரு நடிகரைப் பார்க்க வீட்டிற்குச் சென்றால், 'ஏ.வி.எம். ஸ்டூடியோவில இருக்காரு; வாஹினி ஸ்டூடியோவில இருக்காரு; ஜெமினியில இருக்காரு; கோல்டன் ஸ்டூடியோவில இருக்காரு' என்று சொல்லுவார்கள்.

இன்று 'அண்ணா நகரில பங்களாவில இருக்காரு. அடையாறுல ஒரு தெருவில நடிச்சிக்கிட்டு இருக்காரு. மவுண்ட்ரோட்ல ஷூட்டிங்கில இருக்காரு' இப்படி பதில்கள் வருகின்றன.

'பள்ளித்தலம் அனைத்தும் கோயில்கள் செய்வோம்' என்று பாரதி சொன்னார். 'பங்களா அனைத்தையும் படப்பிடிப்புத் தளங்கள் ஆக்குவோம்' என்பது இன்றைய சினிமாவின் நிலை. இன்றைய சினிமா தெருத் தெருவாக சுற்றிக்கொண்டிருக்கிறது. எனக்கு இருக்கும் பெருமையெல்லாம் தென்னிந்திய திரைப்பட பொற்காலத்தில் நானும் ஒருவனாகப் புகுந்து விட்டேன் என்பதுதான்.



ஆர்.சி.சக்தி

## தமிழ் கற்றார்கள்

அன்றிருந்த தமிழ்த் திரையுலகில் ஆந்திர, மலையாள, கன்னட நடிகர்கள் இருந்தனர். ஆனால், அவர்கள் தமிழ்படத்தில் நடிப்பதற்கு தமிழ் கற்றார்கள். பிறகு, நமது தமிழை நமக்கே கற்றுத் தந்தார்கள். உதாரணத்திற்கு கண்ணம்பா, சாவித்திரி, பத்மினி, எஸ்.வி ரெங்காராவ்... இன்னும் எத்தனையோ பேர்.

இன்றைய நிலை என்ன? தமிழ் சினிமாவில் நடிக்கும் மும்பை இறக்குமதிகள், வசனம் பேசத் தெரியாத நிலையில் "பரவாயில்லை, ஒன், டூ, த்ரீ சொல்லுங்க. நாங்க டப்பிங்கிலே பார்த்துகிறோம்." என்று சொல்லிவிடுகிறார்கள்.

அன்று தமிழ்த் திரைப்பட நடிகையர் பலர், இந்தி திரையுலகிற்கு ஏற்றுமதி ஆனார்கள். அவர்களை அங்கு இறக்குமதி செய்தவர்கள் வெறும் உடல் அழகுக்காக அழைக்கவில்லை; நம்மவர்களின் நடனத்திறமைக்கு, நடிப்புத் திறமைக்கு மதிப்பு கொடுத்தார்கள். சென்றவர்களும், வென்றார்கள். பல ஆண்டுகள் நிலைத்து நின்றார்கள்.

இன்று தமிழ்த் திரைப்படங்களில் நடிப்பதற்கு தமிழ் அறியாத பெண்கள்தான் வேண்டும் என்று அடம்பிடித்து வடநாட்டு நகரங்களில் சுற்றித்திரிந்து, பெண்களைப் பிடித்துக் கொண்டு வருகிறார்கள். அன்று இங்கிருந்து திறமைகள் ஏற்றுமதி ஆகின. இன்று நாம் அழகான உடம்புகளை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம்.

அப்படி அழைத்து வரப்பட்ட நடிகை ஒருவரை 'மும்பை அல்வா' என்கிறார் ஒருவர். உடனே அதற்கு மறுப்புக் குரல் ஒலிக்கிறது. 'இவர் அல்வா இல்லை; கல்கத்தா ரசகுல்லா' என்கிறார் மற்றவர். எவ்வளவு ஆரோக்கியமான சிந்தனைகள் தமிழ்த் திரைப்பட உலகை ஆட்டிப்படைக்கின்றன, பார்த்தீர்களா?

நாம் இன்று எழுதப் போகும் கதையும் ஒரு நடிகையின் கதைதான்.

***

கேரளாவிலிருந்து அப்போதுதான் சென்னைக்கு வந்து இறங்கியிருந்தது அந்த மலையாளக் குடும்பம்.

அவர்களுக்குத் தமிழ் புதிது; தமிழ்நாடு புதிது; தமிழ் மக்கள் புதியவர்கள். அப்பா, அம்மா, அவர்களின் குழந்தைகள். அந்தக் குடும்பத்தில் ஆண் வாரிசு உண்டா என்று எனக்கு நினைவில்லை. மூன்று பெண்கள் இருந்தார்கள்.

மூன்று பெண்கள்+ஒரு தாய் என்றால் மெஜாரிட்டி அவர்கள்தானே? ஜனநாயக முறைப்படி அந்தக் குடும்பத்தில் பெண் ஆதிக்கம் தானே இருந்திருக்க வேண்டும்? இல்லை... மிக, மிக மைனாரிட்டியாக இருந்த ஒரே ஒரு ஆணான அந்தத் தந்தையின் ஆதிக்கம்தான் அந்த வீட்டில்! அவரது விருப்பு, வெறுப்புக்கள்தான் அந்தக் குடும்பத்தின் சட்ட, திட்டங்கள். தான் மைனாரிட்டி என்ற பயத்தினாலோ என்னவோ, தனக்குத் துணையாக குடிப் பழக்கத்தையும்கூட வைத்துக்கொண்டார். பாட்டில்களின் படைவரிசை, அவருக்கு பக்கத்துணையாக இருந்தது.

இன்றுவரை நிலவுகிற ஆணாதிக்கச் சமுதாயம் அமைவதற்குக் காரணம், ஆண்களின் எண்ணிக்கை அல்ல; அவர்களின் எண்ணங்கள் தானே?

ஒரு சில ஆண்கள், கல்யாண வியாபாரத்தில் தொடங்கி, கட்டிலறையில் அதிகாரம் செலுத்தி, பிள்ளை சுமக்கும் எந்திரங்களாகப் பெண்களை மாற்றி, பெண்கள் என்ன படித்திருந்தாலும், எவ்வளவு உயர் பதவி வகித்தாலும், 'அவ என் பொண்டாட்டி, அவள நான் அடிப்பேன், உதைப்பேன்; அதைக் கேக்க நீங்க யாரு?' என்று எட்டிப் பார்க்கிற, சில நேரங்களில் தட்டிக் கேட்க நினைக்கிற பக்கத்து வீட்டுக்காரர்களை மிரட்ட 'புருஷன்' என்கிற பதவியைப் பயன் படுத்துகிறார்கள்.

உடனே இந்தச் சமுதாயமும் 'இது புருஷன்-பொண்டாட்டி சண்டைப்பா; இதுல நாம தலையிட வேண்டாம்' என்று ஒதுங்கிக் கொள்கிறது.

## ஒரே நம்பிக்கை

இந்த நிலைதான் அந்தக்குடும்பத்திலும். அந்தக் குடும்பத்தைச் சுற்றி வளைத்திருந்த வறுமையை விரட்டுவதற்கு அவர்களுக்கு இருந்த ஒரே நம்பிக்கை நட்சத்திரம், குடும்பத்தின் மூத்த பெண்தான். எப்படியாவது அவளை சினிமாவில் நடிக்க வைத்துவிட வேண்டும் என்று முயற்சித்தார்கள். படப்பிடிப்பில் அவள் மீது விழுகின்ற வெளிச்சம், தங்களுடைய வாழ்வின் இருட்டையும் விரட்டிவிடும் என்று நம்பினார்கள்.

களையான முகம், அழகான சிரிப்பு, இளமையான உடம்பு, முயற்சித்தால் ஒரு நடிகையாக வரமுடியும் என்ற நம்பிக்கையைத் தருகின்ற தோற்றம். கையில் ஃபோட்டோவுடன் அந்தப் பெண்ணின் அப்பா பல படக் கம்பெனிகளில் படியேறி இறங்கினார்.

முயற்சி வீணாகவில்லை. நான் வேலை செய்து கொண்டிருந்த படம் ஒன்றில் முக்கிய வேடத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டார் அந்தப் பெண். கதாநாயகியாக அல்ல; கிட்டத்தட்ட ஒரு வில்லி வேடத்தில். இன்று நாடு முழுவதும் தனது வில்லுப்பாட்டின் மூலம் மக்களுக்குப் பல நல்ல செய்திகளை சொல்லிக்கொண்டிருக்கும், கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்கள்தான் அந்தப் படத்தின் வசனகர்த்தா. நான் அவரது உதவியாளன். அந்தப் புதுமுக நடிகைக்கு தமிழ் சொல்லிக் கொடுக்கும் வேலை எனக்குத் தரப்பட்டது.

(அனுபவங்கள்

**இதுவும் ஒரு நடிகையின் கதைதான்**



படிப்பகம்

www.padippakam.com

**தமிழ் நாட்டின் முற்போக்கு எழத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.**

**மு.க.சுருக்கம்**

**அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கும் இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. கோகிலாவின் பால்ய நண்பன் அவளை சந்திப்பதும் அனந்தராமனுக்கு பிடிக்கவில்லை. அவனது சந்தேகங்களால் கோகிலா வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். பின்னர் தற்செயலாக கடைத்தெருவில் சந்திக்கின்றனர். மறுபடி வீட்டுக்கு வருகிறாள் கோகிலா.**

**இனி...**

15



# கோகிலா என்ன செய்து விட்டாள்?

## ஜெயகாந்தன்

அந்தப் புத்தகங்களை ஒழுங்குபடுத்தி அடுக்கி ஒரு பார்சலாக அவள் கட்டினாள். அவள் கைகள் அழுக்கும்தூசும் படிந்து கறையாயின. கைகளைக் கழுவிக் கொண்டு வருவதற்காக அவள் பாத்ரூமை நோக்கி நடந்தாள். வெகு நேரமாய் மனசை உறுத்திக் கொண்டிருக்கும் அந்த ஆல்பத்தை அவன் இரகசியமாகப் பார்தான். பாத்ரூமிலிருந்து அவள் வருகின்ற சப்தம் கேட்கவே அந்த ஆல்பத்தை அவள் வைத்து விட்டுப்போன இடத்திலேயே போட்டு விட்டு அவள் போகும்போது தான் இருந்த இடத்திலேயே வந்து நின்று கொண்டான். இப்போது அவன் பார்வை அவள் கடிதம் எழுதி வைத்து விட்டுப் போன அன்று ஏதோ ஒரு வெறியில் முறுக்கிப் பிய்த்தெறிந்து பின்னர் ஏதோ ஒரு சமாதானத்துடன் மீண்டும் பொருத்தி வைத்தானே அந்தப் ஃபோட்டோ பிரேமின் மேல் பதிந்திருந்தது. அவனொன்றும் சமாதானமடைந்து அதைப் பொருத்தி வைக்கவில்லை. அந்த இரண்டு பிரேம்களையும் பிரித்த பிறகு அதில் ஒன்றின் பின்னால் மட்டுமே அதைத் தாங்கிக் கொள்கின்ற சட்டம் பதித்திருந்ததால் 'பாலன்ஸ்' இல்லாமல் அது ஒற்றையாக நிற்க மறுத்தது. மேலும் தான் இவ்வளவு அல்பமாக ஆத்திரப் பட்டிருப்பதை வேறு யாரும் புரிந்து கொள்வதை எண்ணி அவன் வெட்கப்பட்டதனாலேயே அவற்றை மீண்டும் அவன் பொருத்தி வைத்திருந்தான்.

ஈரக் கைகளைத் துடைத்தவாறு அங்கு வந்த கோகிலா அந்த ஆல்பத்தை எடுத்துக்கொண்டு அந்த அறையைத் தாண்டிப் போகும்போது அவனிடம் "இந்த ஆல்பத்தை நான் வெச்சிக்கலாமோ?" என்று கேட்டாள்.

அனந்தராமன் முதலில் அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை. சற்று நேரத்துக்கு முன் 'உனக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக் கொள்ளலாம்' என்று சொன்னதற்காக அவள் ஆத்திரம் கொண்ட கோலத்தையே அவன் இப்போது எண்ணிப் பார்த்தான். இப்போது அவளாகவே இதைக் கேட்டு நிற்கும்போது தனது சம்மதத்தை அதற்கு எப்படித் தெரிவிப்பது என்று புரியாத குழப்பத்துடன் அருகே ஜன்னல் மீதிருந்த அந்த டபிள் ஃபோட்டோ பிரேமையும் காட்டி "இதையும் எடுத்துச் கொள்ளலாமே" என்று அவன் சொன்னதும் அவள் சற்று அவனை உற்றுப் பார்த்தாள். சற்றே தலை குனிந்து யோசித்தாள்:

'இதற்கென்ன போய் உத்தரவு கேட்பது? எனக்கு வேண்டுமென்றால் நான் எடுத்துப் போகவேண்டியதுதானே' என்று தீர்மானத்துடன் ஆல்பத்தோடு அங்கிருந்து நடந்தாள் கோகிலா.

டைனிங் ஹாலில் தனிமையிலமர்ந்து அந்த ஆல்பத்திலுள்ள ஃபோட்டோக்களைப் பார்த்துக் சொண்டிருந்தபோது இந்தப் பத்து வருஷ இடைக்காலத்தில் தன் வாழ்க்கையில் சம்பவித்துவிட்ட துன்பகரமான நிகழ்ச்சிகளை, நம்பிக்கைச் சிதறல்களை, நினைக்கவே கசக்கும் சம்பவங்களை மறந்து இப்போதுதான் அவனைக் கலியாணம் செய்துகொண்டு தனிக் குடித்தனம் நடத்த வந்து ஒரு மாதமே ஆகிறது என்பது போல் ஒரு விநாடி அவள் கற்பனை செய்து கொண்டாள். 'தனது இன்பமயமான கனவுகளெல்லாம் சிதறியதை போன்று இந்தப் பத்து வருஷ இடைக்காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் தன் மனசிலிருந்து சழன்று விழுந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்... மீண்டும் ஒருமுறை அந்தக் காலத்தில் தானோ அவனோ செய்ய நேர்ந்துவிட்ட சிறு பிழைகளை, பெரும் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொண்டு, அந்த இழந்த காலத்தை மறுபடியும் வாழ்ந்து காட்ட, காலத்தின் சக்கரம் சற்றே பின்னோக்கிச் சுழன்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்... ஒரு பெரிய நூல் கண்டின் நடுவே விழுந்து விட்ட பிரிக்க முடியாத சிக்கலை இரண்டு பக்கங்களிலும் அறுத்துவிட்டு மீண்டும் இணைத்துக் கொள்வது போன்று அவ்வளவு சுலபமான, சாத்தியமான இயல்பினை ஏன் வாழ்க்கையில் கைக்கொள்ள முடியவில்லை?' என்றெல்லாம் எண்ணிப் பார்த்து 'அதெல்லாம் நடக்காத காரியம், இது தீர்ந்துபோன விஷயம்' என்ற நினைவில் பெருமூச்செறிந்தாள்.

"அந்தக் கடிதத்தைப்பற்றி அவர் ஏன் என்னிடம் கேட்கவே இல்லை? அவ்வளவு நிர்தாட்சண்யமாக ஓர் ஆணின் உள்ளத்தை ஆழமாக வடுப்படுத்தும் ஒரு கடிதத்தை எழுதிய பின் அதைப்பற்றி அவர் என்னிடம் பேச வேண்டுமென்று எதிர்பார்ப்பதிலிருந்தே அவரை நான் எவ்வளவு நீசத்தனமாகக் கணித்திருக்கிறேன் என்று தெரியவில்லையா? அவ்விதம் கணித்ததற்கு நானா பொறுப்பு? நான் மட்டுமா பொறுப்பு? அவருக்கு எனது வாழ்க்கையிலும் எனது இதயத்திலும் எவ்வளவு மகத்தான ஒரு ஸ்தானத்தைத் தந்திருந்தேன்'.... என்றெல்லாம் அவள் மனம் அரற்றிப் புலம்பினாலும் அந்த ஆல்பத்திலிருந்த படங்கள் 'நீயும் சில காலம் மகிழ்ச்சியோடு வாழ்ந்திருக்கிறாயடி!" என்று இரகசியமாக அவளுக்குச் சொல்லிற்று.

'இத்தனை வருஷமாக நான் ஏன் இதைப் பார்க்கவே இல்லை? இந்த வாழ்க்கையின் மீது எவ்வளவு வெறுப்பிருந்தால் எனது வாழ்க்கையின் மகிழ்ச்சிகரமான நேரங்களை எல்லாம் சேகரித்து வைத்திருக்கும் சோபனக் களஞ்சியமான இதை அந்த வேண்டாத குப்பைகளோடு குப்பைகளிலொன்றாய்ப் புறக்கணித்து வைத்திருப்பேன். ம் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது மாதிரி இப்போது இதையெல்லாம் எண்ணிப் பயனென்ன? பதினைந்து வயது வரை ஒரு பள்ளிக்கூட வாழ்க்கை; அதற்குச் சான்று என்னுடைய சர்டிபிகேட். அதன் பிறகு ஒரு உத்தியோக வாழ்க்கை; அதன் விளைவு என் திருமண அழைப்பிதழ், அப்புறம் பத்து வருஷம் ஒரு தாம்பத்திய வாழ்க்கை; அதற்கொரு சான்று வேண்டாமா? மீண்டும் ஒரு தாம்பத்திய வாழ்க்கைக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்பவர்களுக்கு அது தேவையற்றதுதான். எனவே இது அவரிடம் இருக்கவேண்டாம்... ஆனால் எனக்கு இது அவசியம்' என்ற திடத்தோடு அந்த ஆல்பத்தை அவள் தனது பெட்டியில் வைத்துப் பூட்டினாள்.

அன்று இரவு வெகு நேரம்வரை அவர்கள் இருவரும் மௌனமாக மறுநாள் அந்த வீட்டைக் காலி செய்வதற்கான காரியங்களில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தப் பெரிய அலமாரியை அசைப்பதற்காக ஒரு கை கொடுக்குமாறு அவளை அவன் அழைத்தான். சுவருக்கும் அலமாரிக்கும் இடையே இருந்த சிறு இடைவெளியில் நுழைந்து அலமாரியை அவன் பக்கம் தள்ளும்போது "பார்த்து-மெதுவா... ஜாக்கிரதை... காலை எடுங்கோ!" என்று அவள் கத்திய பிறகுதான் அவனது பெருவிரல் மீது பதிய இருந்த அலமாரிக் காலருகே இருந்து அவன் நகர்ந்து கொண்டான்.

'என்ன முரட்டுத்தனம்!' என்று கடிந்து கொள்வது போல அவள் பார்த்தாள்.

'என்ன கரிசனம்!' என்பது போல் அவன் லேசாகச் சிரித்துக் கொண்டான்.

அப்போதுதான்-சுவருக்கும் அலமாரிக்கும் நடுவேயுள்ள இடைவெளி அகண்ட பிறகு-அந்தக் கவர் அவள் கண்களில் பட்டது. அதை அவள் எடுத்துப் பார்த்தாள். சற்றும் அவள் எதிர்பாராத விதமாய் அது பிரிக்கப் படாமல் அன்று தான் வைத்து விட்டுப்போன மாதிரியே இடம் மட்டும் மாறிக் கிடப்பதில் அவளுக்கென்ன அப்படி ஒரு திருப்தி; நிம்மதி; சந்தோஷம்! - 'இதை அவர் பார்க்கவே இல்லையோ? காற்றில் பறந்து இங்கே விழுந்திருக்குமோ?' என்றெல்லாம் ஒரு விநாடி சிந்தித்த நிறைவுடன் அவள் அதை எடுத்துத் தன்னுள் மறைத்துக்கொள்ள முயன்றபோது,

"கோகிலா" என்ற அவனது சாதாரண அழைப்பு அளைத்தான் என்னமாய்த் திடுக்கிட வைத்துவிட்டது! அவள் அவனைப் பார்த்தபோது அந்தக் கடிதம் பின்னால் கட்டிய அவளது கரங்களில் அவள் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தது.

அனந்தராமன் அவளருகே நெருங்கி வராமல் அந்தச் சிறிய அறையின் மறு கோடியில் வெகு தூரத்தில் நின்றவாறே அவளிடம் பேசினான்.

"நாம் இருவரும் நாளைக்குப் பிறகு நிரந்தரமாகப் பிரிந்து விடப்போகிறவர்கள். பத்து வருஷமாக அவ்விதம் ஒரு கற்பனைகூட இல்லாமல் உன்னுடையது என்னுடையது என்ற பேதமில்லாமல் ஒன்றாய் வாழ்ந்திருந்தவர்கள். நாம் கூடி வாழ்ந்த நாட்களில் நம் இருவருக்கும் பொதுவானவையாக நாம் எவ்வளவோ சேகரித்திருக்கலாம்; அவற்றைப் பங்கீடு செய்து கொள்ள வேண்டிய துர்ப்பாக்கியம் நமக்கு நேர்ந்துவிட்டது. நாளைக்கு நீயோ நானோ அதிலும் நேர்மை இல்லாமல் நடந்துகொண்டோமென்று ஆகிவிடக் கூடாது பார்."

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"உன் கையிலிருக்கிறதே அந்தக் கவர் என்னுடையது என்று சொல்கிறேன்."

கோகிலா சிரித்தாள். அப்படி ஒரு சிரிப்பை அவள் முகத்தில் அவன் பார்த்து ரொம்ப காலமாகிவிட்டது. அந்தச் சிரிப்பைப் பார்த்த அந்தக் கணம் அனந்தராமன் எங்கோ கெய்ரோவில் இருக்கும் 'அவனை' நினைத்துக் கொண்டான். அதனாலேயே அவனுக்கு ஒரு உறுதி பிறந்தது. அந்த சிரிப்பைக் கண்டு மசிந்து விடாத பிடிவாதத்தோடு அவன் கேட்டான்: 'பிளீஸ், அதைக் கொடுத்துவிடு,

(கோகிலா.... தொடரும்)

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

23

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

அதாவது சாவியை மாற்றிக் கொள்வது! மலபார் ஹில்லில் ஒரு பெரிய பங்களா இருக்கிறது. அங்கே பெரும் பணக்காரர்கள் பலர் வருவார்கள். ஒவ்வொருவரும் தங்கள் மனைவியோடு வருவார்கள். அவரவர் கையில் ஒரு சாவிக் கொத்து கொண்டு வருவார்கள்.

அத்தனை சாவிக் கொத்துக்களையும் ஒரு மேஜையின் மீது போடுவார்கள். விளக்கை அணைத்து விட்டு அவை அடையாளம் தெரியாமல் இருப்பதற்காகக் கலக்குவார்கள். பிறகு அந்த இருட்டிலேயே ஆளுக்கொரு சாவிக் கொத்தை எடுத்துக் கொள்வார்கள். யாருடைய சாவிக் கொத்து யாருடைய கையில் இருக்கிறதோ? அவருடைய மனைவி இவரோடு ஆட வேண்டும். கால்களுக்கு மட்டும் தான் விளக்கிருக்கும்; முகம் தெரியாது" என்றாள் விஜயா வேதாசலம்.

"அம்மாடி! இது என்ன பழக்கம்?" என்றாள் லலிதா.

"அடே! இது மிகவும் வேடிக்கையாகத் தான் இருக்கிறது!" என்றான் குமாரசாமி.

"இதில் என்ன தப்பு? வாழ்க்கை வேடிக்கையாகவும், சுகமாகவும் இருக்க வேண்டும்; அவ்வளவுதான்! சரி. குளியுங்கள் புறப்படலாம்!" என்றாள் விஜயா வேதாசலம்.

லலிதாவுக்கும் ஏனோ அதில் கலந்து கொள்ள வேண்டும் போல் தோன்றிற்று.

அவசர அவசரமாக அவளும் குளித்து விட்டு, விலையுயர்ந்த சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டாள். தன்னை பிரமாதமாக அலங்கரித்துக் கொண்டாள்.

மூவரும் மலபார் ஹில் பங்களாவுக்கு வந்து சேர்ந்ததும் கண்ணாடிக் கோப்பையும் கையுமாக வரவேற்றார் மதன்லால்.

அங்கே வந்திருந்த பணக்காரர்கள் பலருக்கு விஜயா வேதாசலத்தைத் தெரிந்திருந்தது.

குமாரசாமியை, "நாராயணசாமீஸ் பிரதர்" என்று மதன்லால் எல்லோரிடமும் அறிமுகப்படுத்திய வகையிலிருந்து, நாராயணசாமியின் பிரபல்யம் விளங்கிற்று.

அங்கே வந்திருந்தவர்களில் சிலர் தங்கள் உண்மையான மனைவியை அழைத்து வரவில்லை. மனைவி என்ற பெயரில் அழகான பெண்களை அழைத்து வந்திருந்தார்கள். பல சோபாக்களில் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

ஆண் பெண் அனைவருமே மதுவின் ஆதிக்கத்தில் இருந்தார்கள்.

திடீரென்று மதன்லால் எழுந்திருந்து லலிதாவின் பக்கத்திலேயே ஒட்டிக் கொண்டு உட்கார்ந்தார்.

லலிதாவுக்கும், குமாரசாமிக்கும் மது கொண்டு வந்து வைக்கப்பட்டது.

"நீங்கள் சாப்பிட வேண்டும்" என்று ஆங்கிலத்தில் சொன்னார் மதன்லால்.

"எங்களுக்குப் பழக்கமில்லை!" என்றார்கள் இருவரும்.



"சும்மா கொஞ்சம் போல் சாப்பிடுங்கள்!" என்று சிபாரிசு செய்தாள் விஜயா வேதாசலம்.

லலிதாவும் குமாரசாமியும் ஒருவரையொருவர் பார்த்து விட்டு லேசாகக் குடிக்கத் தொடங்கினார்கள்.

அவர்களது சாவிக் கொத்தையும் வாங்கிக் கொண்டு போய் மேஜையில் போட்டாள் விஜயா வேதாசலம்.

லலிதாவுக்கும் குமாரசாமிக்கும் 'குஷி' பிறந்து மடமடவென்று குடித்துவிட்டார்கள்.

விளக்கு அணைந்தது. சாவிக்கொத்துக்கள் குலுக்கப்பட்டன.

குமாரசாமியும் ஓடிப்போய் ஒரு சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டான்.

விளக்கு ஏற்றப்பட்டது.

தன் கையில் இருந்த சாவிக்கொத்தைத் தூக்கிக் காட்டினான்.

வயதான ஒருவர் தன் அழகான இளம் மனைவியைக் கொண்டு வந்து அவன் கையில் ஒப்படைத்தார்.

அவள் லலிதாவைவிட அழகானவள்.

என்ன அதிசயமோ, குமாரசாமியின் சாவிக்கொத்து மதன்லால் கையில் இருந்தது.

விஜயா வேதாசலம் கைதட்டினாள்.

அவர் லலிதாவின் இடுப்பிலே கைபோட்டு அழைத்துக் கொண்டார்.

விளக்குகள் அணைந்தன. மேல்நாட்டு சங்கீதம் ஆரம்பமாயிற்று.

எல்லோரும் ஆடத் தொடங்கினார்கள்.

இருட்டிலேயே தங்கள் மதுக்கோப்பையை எடுத்து கொண்டார்கள்.

தன் கையில் இருந்த மதுவை லலிதாவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டினான் மதன்லால்.

ஆடிக்கொண்டே இருக்கும் போது தான் பார்த்தான் குமாரசாமி, தன்னோடு ஆடும் பெண் ஜாக்கட்டை கழற்றி இருப்பதை-

அவனை மேலும்கொஞ்சம் குடிக்க வைத்தாள் அந்தப் பெண்.

குமாரசாமி வெறிபிடித்து அவளிடம் நடக்கத் தொடங்கினான்.

அவனை அப்படியே அணைத்தபடி பக்கத்து அறைக்குள் நுழைந்தாள் அவள்.

மதன்லாலோடு ஆடிய லலிதா, "எனக்கு மயக்கமாக இருக்கிறது" என்றாள்.

அவளை நன்றாக முத்தமிட்டபடி வேறொரு அறைக்குள் கொண்டு போனார் மதன்லால்.

அங்கே நிர்வாணமாக படுத்திருந்த விஜயா வேதாசலம் லலிதாவின் மேலாடையைக் கழற்றி விட்டாள்.

●●●

ரதத்தில் வைக்கப்பட்ட சிலையின் கழுத்தில் சூட்டப்பட்ட பூமாலை தெருவில் விழுந்துவிட்டால் எல்லோருமே இனம் தெரியாமல்தான் ஏறி மிதிப்பார்கள்.

குடும்பப் பெண் இருக்கவேண்டிய இடத்தைவிட்டு வெளிப்பட்டு விட்டால் அவளைச் சுற்றியுள்ள வேலிகளெல்லாம் உடைபடுகின்றன.

கிடைக்க முடியாத பொருளொன்று மனிதன் எதைக் கருதுகிறானோ, அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதன்மீது ஒரு ஆசை வருகிறது.

(அந்தரங்கம் வரும்)

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

—கண்ணதாசன்—

www.padippakam.com

# ஆதாரம்

"இன்று இரவுக்குள் விசயத்தை முடித்தாக வேண்டும்."

திட்டமிட்டபடியே எல்லா வேலைகளும் கச்சிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்த திருப்தி அவனுக்குள். எங்காவது சிறு தவறுகள் ஏதும் நடந்திருக்கின்றதா என்பதை பல தடவைகளாக ஆராய்ந்து பார்த்த பரம திருப்தி அது.

"இன்று காரியம் எப்படியும் முடிஞ்சிடும்!" மாலை நான்கு மணிக்குப் புறப்படவிருக்கும் புகைவண்டிக்கு தன் பெயரில் வரண்ட் எடுத்து உறங்கலிருக்கைக்காக மேலதிகப் பணம் கொடுத்துப் பெறப்பட்டிருந்த 2ம் வகுப்பிற்குரிய டிக்கட் அவன் கையில்.



களை அவரிடம் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டு மேலோட்டமாக அவதானித்தவர் மெல்லிதாகச் சிரித்துக் கொண்டார்.

"இதை ஏன் ஃபோட்டோ கொப்பி எடுத்தாய்...?"

"சேர்! இவங்க வீணாக மோதிக்கொண்டு கரைச்சல் கொடுக்கிறாங்க. நான் கொழும்பில் இருக்கின்றபோது ஏதும் நடந்தால் என்னைத்தான் மாட்டுவார்கள் என்று ஏற்கனவே அறிந்திருந்தமையினால் ஆதாரத்திற்காகத் தான்..."

"அப்போ! அன்றைக்கு நீ கோச்சியில் கொழும்பு சென்றாய் என்ன..?" பொலிஸ் அதிகாரி மீண்டும் மெல்லிதாகச் சிரித்துக் கொண்டது அவனுக்குள் நல்லதாகப் படவில்லை.

"இவரோட தம்பியை அடித்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைச்சது நீ இல்லை அப்படித்தானே...?"

"ஓம் சேர்! நான் கொழும்பில இருந்தேன். இவங்க பிரச்சினைக்கு வாறதா இருந்தா வழக்குப் போடச் சொல்லுங்க நான்..."

"மூடுடா வாயை!" பலமான அதட்டல் அவனுக்குள் நடுக்கத்தை அதிகப்படுத்தியது. மறைத்துக் கொண்டிருந்த உணர்வுகள் அவனையும் மீறி வெளிவந்தமையினால் முகம் வியர்த்து கால்கள் நடுங்கத் தொடங்கின.

"அடிச்சுப்போட்டு மூணு நாள் எங்கோ ஒளிஞ்சிருந்தாய்...?"

"நான் அடிக்கவில்லை. அப்போ கொழும்பிலதான்..." அதிகாரி தனக்கு ஏற்பட்ட ஏகப்பட்ட ஆத்திரத்தையெல்

## தி.இளையவன்

லாம் ஏனோ அடக்கிக்கொண்டார். வரட்டுச் சிரிப்புடன் அவர் சொன்ன அந்த வார்த்தையினைக் கேட்டதும் அவன் ஆடிப்போனான். தலை சுற்றி மயக்கம் வருமாப்போல இருந்தது.

திட்டமிட்டு ஒழுங்காக நிதானமாகச் செய்த காரியம் பாழாய்ப்போன போரின் தாக்கத்தினால் சிக்கவைத்து விட்டதே! தான் வசமாக மாட்டிக் கொண்ட கவலை. ச்சே!

'பத்திரிகை கூட படிக்காமல் அசட்டையாக இருந்து விட்டேனே' என்ற வெறுப்பு.

'மூன்று நாளைக்கு முன்பாக ஏற்பட்ட மோதல் காரணமாக திருமலையில் இருந்து புறப்பட்ட புகையிரதப் பாதை சேதம் காரணமாக தம்பலகாமப் பகுதி வரைக்கும் சென்று திரும்பியதும் இன்னும் பாதைகள் திருத்தப்படவில்லை' என்ற செய்தியும் அவனுக்கு அதிர்ச்சியினைக் கொடுத்திருந்தது.

யாருக்குக் கொடுப்பது...? எப்படியும் ஓரளவு தெரிந்தவர்கள் யாருக்காவது கொடுப்பதே புத்திசாலித்தனமானது. தீவிரமான தேடுதல்கள் பிழைத்துப் போயின. இனிமேலும் காத்திருப்பதில் பயனில்லை என்பதைப் புரிந்துகொண்டவன் பார்வையில் ஒரு பயணி தடுமாற்றத்துடன்.

"டிக்கட் கிடைக்கவில்லையா...?"

"ஓம் தம்பி! டிக்கட் இருக்கு சிலிப்ரேட்டர் எல்லாம் முடிஞ்சு போச்சாம்."

"செகண்ட் கிளாஸ் சிலிப்ரேட்டர் இருக்கு தரவா...?" அந்த மௌனம் அவனை உதாசீனப்படுத்துவதைப் போலிருந்தது. அவரது தயக்கம் என்னவாக இருக்குமென்பதை ஓரளவு அவனால் ஊகிக்க முடிந்தது. இலாப நட்டக் கணக்குகள் பார்த்துக் கொண்டிருக்கும் நேரம் அதுவல்ல என்பதையுணர்ந்து கொண்டமையினால் தன் காரியத்தில் கண்ணானான்.

"பரவாயில்லை. நீங்க தேர்ட் கிளாஸ் காசு தந்தால் போதும்!" பளிச்சென்ற வார்த்தைகள் அவரைச் சங்கடப்படுத்தியது. ஒருவேளை விளையாட்டுத்தனமாகக் கூட இருக்கலாமல்லவா? அவசரம் தர்மசங்கடம் இரண்டும் பின்னிப்பிணைந்திருக்க ஓர் எதிர்பார்ப்புடன் அவனை முகத்துக்கு நேரே ஏறிட்டார்.

"உண்மைதான். முக்கியமான ஒருவர் கூட வாறதாக இருந்தது. கடைசி நேரத்துல ஆள்வரவில்லை. அதனால் என்னோட புரோகிராம் கன்ஸல். நட்டம் வந்தால் பரவாயில்லை நீங்க எடுங்க."

கிடைத்திருப்பது அதிஷ்டம் என்றாலும் அதை மனதிற்குள் செம்மணி புதைகுழியாக்கி அவனுடைய நெருக்கம் தாங்காது வேண்டா வெறுப்புடன் வாங்கிக் கொள்வது போன்ற பாவனையில் பெற்று, பரபரப்புடன் உள்ளே சென்றார். எல்லாவற்றையும் வெளியே நின்று அவதானித்துக் கொண்டிருந்தான். குறிப்பிட்ட இலக்க ஆசனத்தில் அவர் அமர்ந்து புகைவண்டி புறப்பட்டதன் பின்பே அவனுக்குள் பூரண திருப்தி.

"இரவைக்கு காரியம் சக்ஸஸ்!"

காரியம் பகிரங்கப்படுத்தப்படுமானால் அந்த நேரத்தில் கொழும்பு புறப்பட்டுக் கொண்டிருந்த புகைவண்டியில் இருந்ததைக் காரணமாகக் கொண்டு தப்பிவிடலாம். அது அவன் கணக்கு. ஊருக்குள் தலைகாட்டாமல் இரவோடு இரவாக காரியத்தை முடித்துவிட்டு தூரப்பகுதியில் மூன்று நாட்களாக ஒளிந்திருந்ததன் பின்னர் ஏதும் அறியாதவனைப் போல கொழும்பில் இருந்து புறப்பட்டிருந்த பஸ்ஸில் 04 கட்டையில் இருந்து ஏறி பஸ் நிலையத்தில் பலரும் பார்க்கக்கூடியதாக இறங்கிக்கொண்டான். ஆட்டோ பிடித்து நேராக வீட்டுக்குச் சென்றதும் அதிர்ச்சி அங்கே அவனுக்காகக் காத்திருந்தது.

பொலிஸ்காரர்கள் பலமாகத் தன்னைத் தேடிய விபரங்களை அறிந்து கொண்டவனுக்குள் பயம் அவ்வளவாக இருக்கவில்லை. மடியில் கனம் இல்லை என்ற எண்ணம்.

தன்னைச் சந்தேகித்துத் தேடக்கூடியதான வாய்ப்புக்கள் இருந்தாலும் சம்பவம் நடக்கும்போது தான் இவ்விடத்தில் இல்லாமையினால் இலகுவில் தப்பித்துக் கொள்ளலாம். என்ற தைரியம் அவனுக்குள். அதற்கான ஆதாரங்களை தன்னோடு வைத்துக்கொண்டான். சந்தேகத்தில் மட்டுமே தேடுகின்றார்கள். விசயம் அறிந்தும் பொலிஸ் நிலையம் போகாமல் விட்டால் நிலைமை சிக்கலாகலாம் என்ற கணிப்பில் மாலை நான்கு மணிக்கு எம்.ஓபிரான்ஞ் ஓ.ஐ.சீ. முன்பாக ஆஜரானான்.

அவனுடைய எதிர்க் கோஷ்டியினர் எல்லோரும் ஏற்கனவே அங்கு குழுமி நின்றனர். விசாரணையின்போது அவன்தான் என்று எல்லோருமே ஒட்டுமொத்தமாகவே அடையாளம் காண்பித்தனர். அவனுக்குள் சிரிப்பு- பாவம்! சந்தர்ப்பங்கள் எனக்குச் சாதகமாக இருப்பதை அறியாதவர்கள்!

சற்று அதட்டலாகவே ஓ.ஐ.சி. கேட்ட கேள்வி அவனுக்குள் சற்று நடுக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாலும் உடன் கைவசம் எடுத்துச் சென்ற வரண்ட் பிரதி

# புனிதமான ஒருத்தியும் புதினம் பார்த்த தமிழரும்

போர்முனையில் சிக்குப்பட்ட ஒரு குடும்பம் வீடுவாசல், உடமைகளெல்லாவற்றையும் இழந்து, இரவோடிரவாக உயிர்களை கைகளில் பொத்திப்பிடித்தபடி ஓட்டமும் நடையுமாக ஓரளவு பாதுகாப்பான கிராமமொன்றுக்கு வந்து சேர்ந்தது.

கண்களிலெல்லாம் குழிவிழுந்து, வெறும் எலும்புக் கூடுகளாக வெறுங்கைகளோடு அவர்கள் வந்து நின்றதும் கிராமத்துச் சனங்களெல்லாம் புதினம் பார்க்கக் கூடிவிட்டார்கள்.

மூச்சு விடுவதற்குக் கூட சக்தியற்றுப் போயிருந்த அவர்களிடம் அந்தக் கிராமத்தவர்கள் ஆள் மாறியாள் கேள்விகளைத் தொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

"வெடிப்படாமல் நீங்களெல்லாம் எப்படித் தப்பி வந்தீர்கள்?" என்று கேட்டார் ஒருவர். அதற்கு அந்தக் குடும்பத் தலைவன் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக் கைகளை விரித்தான்.

'கடவுள்தான் எங்களைக் காப்பாற்றினார்!' என்பதைப் போல அவனது பாவனை அவர்களுக்குப்பட்டது.

"இப்பவும் சண்டை நடக்கிறதா?" என்று இன்னொருவர் கேட்டார்.

"ரெண்டு பக்கத்திலயும் எத்தனை பேரளவில் செத்திருப்பார்கள்?" என்று மேலுமொருவர் கேட்டார்.



எந்தக் கேள்விக்குமே பதில் சொல்ல முடியாத விரக்தியோடு அவர்களிருப்பதை எவரும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

"அண்ணன்மாரே தம்பிமாரே கொஞ்சம் தண்ணீர் கொண்டு தருவீர்களா? தொண்டையெல்லாம் காய்ந்து போய்விட்டது!" என்று மடிக்குள் குழந்தையை வைத்துக் கொண்டு அந்தக் குடும்பத்தின் தலைவி கேட்டாள்.

அவ்வளவுதான் "டேய் தம்பி ஓடிப்போய் தண்ணி கொஞ்சம் கொண்டுவா!" என்ற குரல்கள் ஒவ்வொருவர் வாயிலுமிருந்து பாணங்களாகப் பறந்தனவேயன்றி எவரும் தண்ணீர் கொண்டுவரச் சென்றதாகத் தெரியவில்லை.

தண்ணீர் கொண்டுவரச் சென்றால் இவர்கள் சொல்லும் கதைகளை முழுமையாகக் கேட்கமுடியாமல் போய்விடும் என்ற தவிப்பு அங்கே நின்ற எல்லோருக்குமே இருந்தது.

"நீங்கள் ஓடித்தப்பி வரும்போது உங்களை ஆமிக்காரர்கள் காணவில்லையா?"

மீண்டும் மீண்டும் கேள்விகள்.

"தம்பி, தண்ணீர், தண்ணீர்!" என்று அந்தத் தாய் சொல்வதை அங்கு நின்ற எவரும் கேட்கும் நிலையில் இல்லை.

பக்கத்திலிருந்த தேநீர்க்கடையில் நின்ற பையனுக்கு அவள் குரல் கேட்டிருக்க வேண்டும். ஒரு வாளி நிறைய நீர்கொண்டுவந்து கொடுத்தான்.

தேவாமிர்தத்தைக் கண்டதுபோல மளமளவென அந்தக் குடும்பம் வாளி நிறைந்திருந்த நீரைக் காலி செய்தது.

"இரவு பகலாக ஓடியோடி இங்குவந்துசேர உங்களுக்கு எத்தனை நாட்கள் பிடித்தன?" நிலமையைப் புரிந்துகொள்ளாமல் மறுபடியும் ஒருவர் கேட்டார்.

"அம்மா பசிக்குது!" என்று ஒரு பையன் தாயைச் சுரண்டிக் கேட்டான். அந்தத் தாய் சுற்றி நின்றவர்களையெல்லாம் சோகத்தோடு பார்த்தாள்.

அந்தப் பார்வை படாமலேயே அங்கு குழுமி நின்றவர்களில் சரி அரைவாசிக்குமேல் மெதுவாக நடையைக் கட்டிக்கொண்டார்கள்.

## செ. குணரத்தினம்

"கொஞ்ச நேரம் படுத்துத் தூங்க வேண்டும்! சரியான களைப்பாக இருக்கும்," என்றபடி அந்தக் குடும்பத்தின் தலைவன் யாராவது இடம் தரமாட்டீர்களா? என்ற தோரணையில் அங்கே நின்றவர்களைப் பார்த்தான். அந்தளவில் அங்கே நின்றவர்களில் ஒரு ஏழைத் தாயைத் தவிர மற்றவர்களெல்லோரும் அங்கிருந்து விலகிக் கொண்டார்கள். அவர்கள் போகும்போது, "கோவிலடியில் போய்ப்படுக்கலாம் தானே! இவர்களுக்கு இடம் கொடுத்தால் பிறகு நமக்குத்தான் ஆபத்து!" என்று யாரோ ஒருவர் சொல்லிச் சென்றது தெளிவாகக் கேட்டது.

அவ்வளவுதான் அங்கே தனித்துப்போய்நின்ற அந்த ஏழைத்தாய் கலைந்து செல்பவர்களை வெறிக்கப் பார்த்தாள்.

"தூ! நீங்கள் தமிழர்கள்தானா? அகதிகளாக ஓடிவந்த இந்த அப்பாவி மனிதர்கள் பட்டுவந்த பாடுகளை அறிந்துகொள்ளத் தவித்த உங்களுக்கு இவர்களை ஆதரிக்க மனசு வரவில்லையே! என்னத்துக்கய்யா நீங்களெல்லாம் பணத்தையும், வீடு வாசல்களையும் தேடிவச்சிருக்கிறீங்க? செத்த பிறகு கொண்டு செல்வதற்காகவா? உங்களுக்கும் நாளைக்கு இவர்களைப் போன்ற நிலை ஏற்படாமலா போகப் போகிறது. இந்த பொறுக்கிக் குணங்களாலதானே இண்டைக்கு தமிழனுக்கு இந்த நிலை வந்தது!"

மூச்சு இரைக்க இரைக்க ஆத்திரத்தோடு சொன்ன அந்த ஏழைப்பெண் அந்த அநாதைக் குடும்பத்தின் பக்கம் வந்து, "எழும்புங்க. எங்கட வீட்டுக்குப் போகலாம். என்னிடம் பணமில்லை! பெரிதான வீடுவாசலில்லை. ஆனாலும் நல்ல மனமிருக்கு. எழும்புங்க! குறுநெல்லாவது குத்தி உங்களுக்கு கஞ்சி காய்ச்சித் தாறன். எங்க வீட உங்க வீடாகவே நினைச்சி நீங்க இருக்கலாம்!" என்றபடி பக்கத்தில் நின்ற அந்தப் பையனின் கையைப் பிடித்தபடி நடந்தாள் அந்த ஏழைப்பெண். அவள் பின்னால் மற்றவர்களும் நடந்தார்கள்.

தனக்கு ஆபத்து வருமே! கேள்வி கணக்குச் சொல்ல வேண்டுமே என்ற எந்த நினைவும் இல்லாதவளாக துணிச்சலுடன் கூட்டிச் சென்ற அந்தப் பெண்ணின் நல்ல மனதை தனக்குள்ளேயே பாராட்டி வியந்தான்' அந்த தேநீர்க் கடையில் ரீமேக்கராக வேலை பார்க்கும் சின்னப் பையன்.

# வாடகை வீடு

வாயிற் கதவு திறக்கும் சத்தம் கேட்டு அரிசியில் கல் தேடிக்கொண்டிருந்த சுளகினை ஓரமாக வைத்துவிட்டு தலையை நீட்டிப் பார்த்தேன். அது நாங்கள் குடியிருக்கும் வாடகை வீட்டு சொந்தக்காரன்; அல்லை தொல்லை இல்லாத ஆள். பெண்கள் மாதிரி சுபாவம். கந்தோருக்குப் போனால் இடையிலை வராத மனுசன் இண்டைக்கு அவசர அவசரமாய் மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு வீட்டிற்குள் சென்று எதையோ எடுத்துக் கொண்டு போகுது. ஒரு அசுகையிலை அப்படித் தெரியுது. நான் எங்கே உதுகளை எட்டிப் பார்த்தன்!

நாங்கள் குடியிருக்கின்ற வாடகை வீடும் வீட்டுச் சொந்தக்காரரின் வீடும் ஒரே வளவுக்குள் அடுத்தடுத்தாற் போல் இருப்பதுதான் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணமாய்ப் போய்விட்டது.

என்ரை மனுசன் கந்தோருக்குப் போய் விடுவார். நான் என்ரை இரண்டு குமரையும் பாடசாலைக்கு அனுப்பிப்போட்டு இரண்டு வீட்டுக்குமாக சேர்த்து காவல் இருக்க வேணும். வேலைக்குப் போகாத பெண் இருக்கிற குடும்பத்துக்குத்தான் வீடு கொடுப்பன் என்று சொல்லித்தானே இந்த வீட்டுக்கார மனுசி வீடு தந்தவள்!

அவள் பாவிக்கு எல்லாம் ஆண்பிள்ளைகள். குமர்ப் பிரச்சனையே தெரியாது. 'கேற்றை' திறந்து வைத்துக்



கொண்டு ஒரு நாளைக்கு நூறு இளந்தாரிகளைக் கூப்பிட்டு கும்மாளமடிப்பான். அழகான குமருகளை வச்சிருக்கிற நானெல்லோ மடியிலை நெருப்பைக் கட்டிக்கொண்டு அழுது கொண்டிருக்க வேண்டிக் கிடக்குது...

மீண்டும் வாயிற் கதவு திறக்கும் சத்தம் கேட்க கதவை திறந்துகொண்டு முற்றத்திற்கு வருகின்றேன்...

வீட்டுக்காரன் அவதி அவதியாக வீட்டைத் திறந்து தலையணையுடன் கூடையில் சில பொருட்களையும் திணித்தபடி ஓடுகிறான். எனக்கு ஒரு கதை கிடையாது! நான் அவையளின்ரை வீட்டுக்குக் காவல்...! அவள் இந்த மனுசனுக்கும் நல்லாய் ஏற்றித்தான் போட்டாள்...!

இலட்சக் கணக்கிலை நாங்கள் கொடுக்கிற வீட்டு முற்பணமும் மாதாந்தம் கொடுக்கிற ஆயிரக்கணக்கான ரூபா வாடகைப் பணமும் அவையளுக்கு நினைவிலையில்லை. அவையளின்ரை பெரிய வீட்டுக்குப் பாவிக்கிற 'கறண்டுக்கும்' அவையளின்ரை பூக் கண்டுகளுக்கு அடிக்கிற தண்ணிக்கும் அரைவாசி 'பில்' நாங்கள் கட்டி அழ வேண்டும்!

என்ரை குமருகள் இரண்டு தரம் 'வோசிங் ரூமு'க்கு போனால்...

"பிள்ளை, 'கக்கூஸ் பிற்றுக்கு' அடிக்கடி தண்ணீர் அடிச்சால் 'பிற்' நிறைந்து போமம்மா."

வீட்டுக்கார மனுசி சொல்லும் அன்பு வார்த்தைகளில் இது ஒரு துளி!

இதைக் கேட்கிற என்னுடைய பிள்ளைகள் அவதியெண்டாலும் 'வோசிங் ரூம்' பக்கம் போகாதுகள்.

இனி அந்தாள் வாடகை குடியிருப்பாளரின் திட்டு மறுபுறம்...!

'இந்த அகதிச் சனம் வந்து இலட்சக் கணக்கிலை பணத்தைக் கொட்டி வீடெடுக்கிறதாலை எங்களுக்கு கொட்டில் வீடும் எடுக்க ஏலாமல் கிடக்கு!'

வீட்டுக்கார மனுசி முதல்நாள் செய்த அட்டகாசம் எனது மனக் கவலைகளை இப்பவும் தூண்டி விடுகிறது போலை...

'வீட்டை உடனே விட்டு விடவேண்டும். நாங்கள் 'ஹொஸ்ரல்' நடத்த வீடு தேவை. உங்களுக்கு விடியு மட்டும் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. வீட்டை உடனே விடாவிட்டால் சாமான் சக்கட்டெல்லாம் தூக்கி எறிஞ்சு போடுவன்...' நான் வாய் திறக்கவில்லை.

எனது கண்களால் நீர் சொரிகின்றது...

'காளித் தாயே... எங்கள் கவலைகள் எத்தனை காலம் நீடிக்கப்போகின்றன...'

மனம் அழுகின்றது

இப்படியான அட்டகாசங்களையெல்லாம் அவையள் ஏன் தட்டிக் கேட்கக்கூடாதென்று நான் நினைப்பதோடு இருந்துவிடுவேன்.

மீண்டும் வாயிற் கதவு திறக்கும் சத்தம் கேட்டு ஓடிச்சென்று பார்க்கிறேன். வீட்டுக்கார மனுசன் மோட்டார் சைக்கிளை பொத்தென்று போட்டுவிட்டு தங்கள் வீட்டு வாயிற்படியில் விழுந்து ஓலமிடுகிறார்.

நான் ஓடிச்சென்று, "உங்களுக்கு என்ன நடந்தது சொல்லுங்கோவன்?" என்று அதட்டுகிறேன்.

அவர் பெண்கள் போல ஓலமிட்டபடி

"ஐயோ அன்ரி... அவா காலையிலை மோட்டார் சைக்கிளாலை விழுந்து போனா... ஆஸ்பத்திரியிலை சேர்த்தனான்... கதைபேச்சில்லாமல் கிடந்தாலும் தப்பி விடுவா எண்டு நினைத்து ஏமாந்து போனேனே.."

எனது அனைத்து கவலைகளையும் ஒரு நொடியில் மறந்த நான்...

"ஐயோ அன்ரி" என்று போட்ட அலறலில் ஊர்ச் சனமே திரண்டு வந்துவிட்டது.

'மனிதன் நினைக்கிறான்; கடவுள் தீர்மானிக்கிறான்' என்பது சரியாகத்தான் போய்விட்டது!

வாடகை வீட்டிலிருந்து என்னை வெளியேற்ற இந்த மனுசி பிரயத்தனம் செய்கையில்... இறைவன்... தான் அவளுக்கு கொடுத்த உடலென்னும் வாடகை வீட்டிலிருந்து அவளை வெளியேற்றி விட்டானே....!

## திருமலை வீ.என். சந்திரகாந்தி



படிப்பகம்

www.padippakam.com

# இரகசியம்



இலக்கிய நயம் தருவது ரசிகன்

பொல்லாதது எது
என்று கேட்டால்,
"நில்லாத கனவு!"
என்பாள் அவள்!

வந்து வந்து போகும்
அவள் மனதை
பந்துபோல உருட்டும்!

"கனவே கனவே
கலையாதே!"
என்றுதான் அவளின்
இதழ்கள் முனகும்!

வேண்டுகோளை
புறக்கணித்துவிட்டு
போயே விடும்!

நினைத்தால் வருகிறது
நினைத்தால் போகிறது!

கட்டுப்படாதது
கட்டுக்குள் நில்லாதது
கனவு!

நேரில் வராதவன்
கனவில் வருகிறான்!

நினைவில் இருப்பவன்
கனவில் வதைக்கிறான்!

கைகளை நீட்டுகிறான்
கனிகளைப் பறிக்கிறான்!

"கையோடு வராத கனிகள்
கொய்ய முடியாத கனிகள்!"
மெய் சிலிர்த்து கூறுகிறான்!

'தழுவத்தானடி மேனி
நழுவத்தானடி கேணி
நான்தானடி தேனி
வழுவாதேயடி ராணி!'

"ச்சே வெட்கமில்லையா
அங்கெல்லாம் தொட
உமக்கு விவஸ்தையில்லையா?"
முகம் மூடி நாணுகிறாள்!

"தொட்டால்தானே
சுரம் வரும்!
மீட்டாத வீணை
ஊட்டுமா நாதம்?"

கட்டழகு மேனியெங்கும்
கைகளின் உலா!

கனியிதழ் மீது
காளையிதழ் தாவும்!
வாயோடு வாய் சேர
நாவோடு நா கலக்க
பாலோடு தேன் கலந்து
பருகுவது அமுதம்!

அமுதம் பருகியதும்
தேகம் உருவெடுக்கும்.
பருவம் படமெடுக்க
உருவம் இரண்டும் ஒன்றாகும்!

உச்சி முதல் பாதம்வரை
புதியதொரு வேகம் வரும்!

யாகம் இது யாகம்
தேகமே தீய்ந்து போ!

தாகம் இது தாகம்
அமுதமே தீர்ந்து போ!

வேகம் இது வேகம்
இயக்கமே நின்று போ!

மூச்சு இது மூச்சு
காற்றே ஓய்ந்து போ!

காயம் இது காயம்
மாயமாய் மறைந்து போ!

தேகம் எங்கும் பாரம்
சுமையே இறங்கிப்போ!

வேதம் இது வேதம்
விரிவுரை போதும் போ!

வெப்பம் இது வெப்பம்
சூடே தொலைந்து போ!

மோகம் இது மோகம்
மேகமாய் கரைந்து போ!

அவள் இதழ்கள்
தாபத்தில் ஊறின!

அவள் தேகம்
தாபத்தில் உருகியது!

மஞ்சத்தில் அவள்
மேனி புரண்டது!

கனவு யாவும்
கனவு!

கண்களை மூடி
தூங்க முயன்றாள்!

கனவில் கண்டதை
மனது உதறிப்போட
மறுத்தது!

கனவில் வந்தவன்
சாதாரண ஆளா?

சேர மன்னனே
சொப்பனத்தில்
தோன்றினான்!

காதல் அவனிடம்
காரிகைக்கு!

கனவில் கண்டதும்
களிப்பு மிகுந்தது!

'சேரன் வருவானா
சேர வருவானா?

மன்னன் அவனது
மார்பை தழுவி
எண்ணம் யாவையும்
வண்ணமாகுமா?'

எத்தனை நாள்
ஏங்கியிருக்கிறாள்?

விரும்பி விரும்பியே
துரும்பாக
இளைத்திருக்கிறாள்!

கனவில் கண்டதால்
ஏக்கத்தில் பாதி
தொலைந்து போனது!

களிப்பினால்
தேகம் களைபெற்றது!

இளைத்த மேனி
செழித்து நின்றது!

வந்தனர் தோழிகள்
வனப்பை பார்த்தனர்.

மேனியின் பூரிப்பும்
வதனத்தின் வசீகரமும்
அவள் உள்ளத்து இரகசியத்தை
தோழிகள் வாசிக்க வைத்தன!

'சேரனைக் கண்டாயோ
சேர்ந்திடக் கண்டாயோ?

கனவினில் உன்னை
காவி எடுத்தானோ?

கண்களால் உண்டு
கடும் பசி தீர்த்தாயோ?"

தோழிகள்
குறும்பு தொடுக்க,
அவளுக்கோ
ஆச்சரியம்?

'ஒரு நாள் ஒரே நாள்
கனவில் கண்ட காட்சி
எப்படித்தான் தெரிந்தது!

அந்தரங்க கனவில்
மலர்ந்த சந்திப்பு
அம்பலமானது எப்படி?'
என்று வியந்தாள்.

அவளது வியப்பைத்தான்
முத்தொள்ளாயிரப் பாடல்
முத்தாக தருகிறது:

**"புன்னாகச் சோலை புனல் தெங்கு சூழ்**
**-மாந்தை**
**நன்னாகம் நின்றலரு நன்னாடன்**
**-தன்னாகம்**
**கங்குல் ஒருநாள் கனவினுள் தை வந்தான்**
**என்கொல் இவரறிந்த வாறு"**

முத்தொள்ளாயிரம்-05

ஸ்போர்ட்ஸ்

## "வெற்றிகரமான கப்டனாவார்"



"டெண்டுல்கர் வெற்றிகரமான கப்டனாக 12 மாதங்களாகும்," என்று முன்னாள் அவுஸ்திரேலிய கப்டன் அலன் போர்டர் கூறியுள்ளார். அண்மையில் இந்தியாவின் மும்பாய் நகரில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும் போது: "சச்சின் டெண்டுல்கர் உலகிலேயே மிகத் திறமையான ஆட்டக்காரர் என்பதில் சந்தேகமே இல்லை. அவருக்கு தற்போது இந்திய அணியில் கூடுதல் பொறுப்பாக கப்டன் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கப்டன் பதவியை எப்படி சாதுரியமாகக் கையாள வேண்டும் என்பது பற்றி அறிந்து கொள்ள டெண்டுல்கருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சிறந்த வீரர்கள் இந்திய அணியில் இடம் பெற்றிருப்பதால் விரைவில் டெண்டுல்கர் வெற்றிகரமான கப்டனாக வலம் வருவார் என நம்புகிறேன்." என்று அலன் போர்டர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியாவின் புதிய கப்டன் சச்சின் டெண்டுல்கர் அளித்துள்ள பேட்டியொன்றில், "நினைத்ததை நிறைவேற்றும் அதிகாரம் கப்டனுக்குத் தரவேண்டும்!" என்று கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "வீரர்களிடமிருந்து தனிப்பட்ட சாதனைகளை நான் விரும்பவில்லை. அணிக்கு எது நல்லதோ அதை நிறைவேற்ற வேண்டும். உள்நாட்டில் வெற்றி பெறுவது முக்கியமல்ல. வெளி நாடுகளில் வெற்றி பெறுவதுதான் முக்கியம்.

கப்டனாக இருக்கும் நான் என்னால் என்ன செய்ய முடியுமோ அதை முடிந்த வரையில் செய்வேன்!" என்று டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் வருவாரா காம்ப்ளி?



இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய 3 நாடுகள் கலந்து கொள்ளும் முத்தரப்பு ஒருநாள் போட்டிகள் இம்மாதம் 22ம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளன. இப்போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியில் முன்னாள் கப்டன் முகமட் அஸாருதீன் இடம் பெறவில்லை.

அத்துடன் விக்கெட் கீப்பர் மொங்கியாவும் இடம்பெறவில்லை. பரோடா வீரரான மொங்கியாவின் மருத்துவ சான்றிதழில் அவர் விளையாட முழுத் தகுதியுடன் இல்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.


மொங்கியாவிற்குப் பதிலாக மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த 32 வயதான விக்கெட் கீப்பர் சபா கரீம் அணியில் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த இளம் விக்கெட் காப்பாளரான எம்.எஸ்.கே. பிரசாத்திற்கே அதிக வாய்ப்பு உள்ளது.

இதேபோன்று அஸாருதீனுக்குப் பதிலாக விஜய் பரத்வாஜ் அல்லது ஜேக்கப் மார்டின் போன்ற புதிய முகங்களின் பெயர்கள் அடிபட்டன.

இருப்பினும் அணியில் சேர்க்கப்படுவதும், நீக்கப்படுவதுமாக இருக்கும் வினோத் காம்ப்ளியின் பெயரும் அடிபடுகிறது.

அணித் தேர்வாளர் வடேகர், மற்றும் கப்டன் டெண்டுல்கர் ஆகியோருக்கு மிகவும் வேண்டப்பட்ட காம்ப்ளி அணியில் நிச்சயம் இடம்பெறுவார் எனத் தெரிகிறது.

### இவர்தான் அவர்



சோனாலி பாந்த்ரே

சிந்தியா பதில்கள்

▶ நீலனின் கொலையைக் கண்டித்த கட்சிகள் தாமும் அரசியல்வாதிகளைக் கொலை செய்ததை மறந்துவிட்டனவோ?

கி. ராஜசேகரன், வவுனியா.

உண்மைதான்! புளொட் வட்டுக் கோட்டை பா.உ. தியாகராசா, வவுனியா புலேந்திரன் போன்றோரை தீர்த்துக்கட்டியது- ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரஜைகள் குழுத் தலைவர்களை, வண.பிதாக்களை சுட்டுத் தள்ளியது- ரெலோ...? அவர்கள் கண்டிக்காததால் விட்டுவிடுவோம்!

♠♦♥

▶ சிந்தியா! மீண்டும் பொதிப் பூச்சாண்டியா?

ஏ. ஜெயபாலன், கொழும்பு-09.

என்ன செய்வது, பூச்சாண்டிக்கு ஏற்ப பொய்க்கலை வந்து ஆடும் பூசாரிகள் சிலரும் இருக்கிறார்களே! அவர்களும் சேர்ந்துதான் மக்களின் காதில் பூ வைக்கிறார்கள்!

♠♦♥

▶ புலிகளின் விரக்திதான் கரும்புலித் தாக்குதலுக்குக் காரணம் என்கிறார்களே பாதுகாப்புத் தரப்பினர்?

பி. குமரன், திருமலை.

இனப்பிரச்சனைதான் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இடுப்பில் குண்டைச் சுமந்து கரும்புலிகளாக மாறுவதற்குக் காரணம் என்று ஜனாதிபதி முன்னர் கூறியதும் பொய்யா ஐயா!

♠♦♥

▶ மாணவர்களது போராட்டங்களுக்கு பத்திரிகைகள் முன்னுரிமை கொடுக்கவில்லையே?

ஆ. விஜயகுமார், வவுனியா.

தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றத்தில் முழங்கினாலோ, அல்லது நாடகமாடி அறிக்கைகள் விட்டாலோ, போலிப் போராட்டம் நடத்தினாலோதான் கொட்டை எழுத்தில் போடுவார்கள்! மக்களது தன்னியல்பான உண்மையான எழுச்சிகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் உணர மாட்டார்கள். இது நீண்டகாலமாகத் தொடரும் தவறு! உண்மையான எழுச்சிகளை ஊக்குவிக்காது தமிழ்க் கட்சிகளை மட்டுமே விமர்சிப்பதில் என்ன பலன்? இதெல்லாம் என் கேள்விகளல்ல: வவுனியாவில் இருந்து எம். நிர்மலா தேவி என்பவர் எழுப்பியுள்ள நீண்ட கேள்வி. சிந்திப்போம்! இனியாவது தவறுகளைத் திருத்துவோம். (முரசுக்கும் பொருந்தும்)

♠♦♥

▶ சிந்தியா! 'காதலர் தினம்' பார்த்தீரா?

ஆர். வலண்டினா, நீர்கொழும்பு.

பார்த்தேன்! பாடல்கள்தான் பிரமாதம்! ஸ்ரீராமின் கமரா நம் கண்களுக்குத் திகட்டாத விருந்து படைக்கிறது! ஆனாலும் வீடியோவில் பார்ப்பதைவிட வெண்திரையில் பார்த்தால்தான் முழு விருந்து சாப்பிட்ட திருப்தி கிடைக்கும். அதுவரை பாதி விருந்தை நீங்களும் ருசித்துப் பாருங்களேன்!

♠♦♥

▶ அமெரிக்கப் படை இங்கு வந்தால் என்னாகும்?

சி. சூரியகுமார், யாழ்ப்பாணம்.

தமிழ்க் கட்சிகள் அம்மையாரை மறந்து விட்டு கிளின்ரனுக்கு மனுப்போடுவார்கள்! அப்போது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு ஆதரவாகப் பேசித் தள்ளுவார்கள்! அமெரிக்காவுக்கு அதிகமாக 'ஐஸ்' வைப்பது யார் என்று போட்டி நடக்கும்!

♠♦♥

▶ தற்கால இளைஞர் இளைஞிகளுக்கு நீர் கூறவிரும்பும் யோசனை?

எ.ப். ஆப்தீன், கல்முனை.

-கற்கால மனிதர்களாக மாறிவிடாதீர்கள்!

♠♦♥

▶ கார்க்கில் பிரச்சனையில் அமெரிக்காவின் வஞ்சகம் இந்தியாவுக்குத் தெரியாதா?

வி. பெரியதம்பி, வெள்ளவத்தை.

நன்றாகத் தெரியும்! இந்தியாமீதான பொருளாதாரத் தடையை இதுவரை அமெரிக்கா நீக்கவேயில்லை! யாரும் எம்மை நிர்ப்பந்திக்க முடியாது என்று சமீபத்தில் வாஜ்பேய் பேசியிருப்பதும் அமெரிக்காவை மனதில் வைத்துத்தான்! 'நம்ப நட, நம்பி நடவாதே!' அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்தியக் கொள்கை அதுதான்.

♠♦♥

★ "எனக்காக உயிரையும் விடுவேன்" என்று கூறுகிறார் என் காதலர். நம்பலாமா?

செல்வி இ. மாலதி, திருமலை.

உலகப் புகழ்பெற்ற காதல் கடிதம் ஒன்றைப் படித்துப் பாருங்கள். பின்னர் உங்கள் காதலரின் சபதத்தைப் பற்றி எடை போடலாம்.

"என்னருமை மரீன். நேற்று நான் உன்னைப் பார்க்க வந்தேன். நீ வெளியில் தலைகாட்டவே இல்லை. நீ வெளியே வந்தாலும், வராவிட்டாலும் நான் உன் வீட்டருகே வருவேன்.

நான் முதலில் வந்தால் வெளியில் உள்ள கம்பத்தில் என் பெயரை எழுதி வைக்கிறேன். பார்த்துத் தெரிந்துகொள். நீ வந்ததும் என் பெயரை அழித்துவிடு. யாருக்கும் தெரியாமல் போய்விடும்.



'டைம்' படத்தில் பிரபுதேவா-சிம்ரான்

டார்லிங் மரீன்! நான் உனக்காக உயரமான மலைச்சிகரத்துக்குப் போவேன். கொந்தளிக்கும் கடலிலும் நீந்துவேன். உன்னருகில் ஒரு கணம் இருக்க நான் எந்தத் துன்பத்தையும் ஏற்பேன்.

என்றும் மறவாத காதலன் பேடி.

பிற் குறிப்பு: மழை எதுவும் வராவிட்டால் வெள்ளிக்கிழமை இரவு வருகிறேன்.

(மால்தி! இதிலுள்ள கேலி புரிகிறதா?)

♠♦♥

▶ நிறைவேற்று ஜனாதிபதி முறையால் நமக்குக் கிடைத்த பலன் யாது?

கே. உமேஷ், வவுனியா.

போரும், அவலமும்!

♠♦♥

▶ முன்னேறுவதற்கு அதிஷ்டம் தேவையா?

எஸ். சர்தார், மன்னார்.

வேண்டாம்! முயற்சியே முக்கியம்!

மனிதர்களில் மூன்று ரகம் இருக்கிறார்கள்.

1. இருட்டில் உழன்று அதையே பழக்கப்படுத்திக் கொண்டவர்கள்.
2. என்றேனும் தங்களை நோக்கி வெளிச்சம் வராதா என்று காத்துக்கிடப்பவர்கள்.
3. வெளிச்சத்தை நோக்கி நடப்பவர்கள்.

இதில் மூன்றாவது ரகத்தினரே வெற்றிப் படிகளில் விரையக்கூடியவர்கள்.

♠♦♥

▶ ஹி ஹி ஹி கதை ஒன்று சொல்ல முடியுமா?

செல்வி மா.பத்மா, மட்டக்களப்பு.

தன் கணவனிடம், "இந்தப் பூனை மிகவும் அட்டகாசம் செய்கிறது. இதைக் கொண்டு போய் நடுக்காட்டில் விட்டுவிட்டு வாருங்கள்." என்றாள் மனைவி.

கணவரும் பூனையோடு போனார். ஆனால் அன்று மாலை மேசைக்குக் கீழே பூனை அமர்ந்திருந்தது. மனைவி கோபத்துடன், "நான் பூனையை நடுக்காட்டில் கொண்டு போய் விடச் சொன்னேனே ஏன் செய்யவில்லை?" என்று கேட்டாள்.

அதற்கு கணவர் கூறினார்: "நான் நடுக்காட்டில்தான் விட்டேன். ஆனால் அதன் பின்னர் அங்கிருந்து திரும்பிவர எனக்கு வழி தெரியவில்லை. ஆனால் பூனைக்கு வழி தெரிந்திருக்கிறது. அதன்பிறகு ஒரு வழியாக பூனையைப் பின் தொடர்ந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்!"

♠♦♥

சிந்தியா

## பதில்கள்

▶ பிரபுதேவாவின் நடிப்புத்தானே 'சுயம்வரத்'தில் தூக்கல்?

கு. மகேஸ்வரன், கொழும்பு-11.

பிரபுதேவாவின் நடிப்புத்திறன் படத்துக்கு படம் மெருகேறி வருவது மெய்!

♠♦♥

▶ வன்னிப் பாதைத் திறப்பு யாருக்கு வெற்றி?

கே. என். நிசாந்தன், வவுனியா.

படையினருக்கல்ல!

♠♦♥

▶ புதிய எம்.பி. மாவை சேனாதிராஜாவாமே?

அ. சிவநாதன், திருமலை.

வாழ்த்துக்கள்!

♠♦♥

▶ சிம்ரானை ஓரம் கட்டப் போவது யார்?

வி. விஜயரூபி, வத்தளை.

இன்னொரு கும் கும்ரான்!


படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 13

ஆண்டவரால் தமக்கு அறிவிக்கப்பட்ட மேய்ப்பர் இயேசுபிரானாகத்தான் இருக்க வேண்டும் என்று திருமுழுக்கு யோவான் நம்புகிறார். அவருடைய ஐயத்தை நீக்கும் பொருட்டு, சிறையிலிருந்த வண்ணமே அவருடைய சீடர்கள் சிலரை இயேசு பெருமானிடம் அனுப்பி வைக்கிறார்.

யோவான் கருதியதுபோல் ஆண்டவரால் அனுப்பப்பட்ட மீட்பர் தாமே என்று சந்தேகமறக் கூறுகிறார் இயேசு பிரான். இத்தகவல் அறிந்ததும் யோவான் பெருமகிழ்ச்சியடைந்தார். முன்னர் யோர்தான் நதியில் தன்னிடம் ஞானஸ்தானம் பெறத்திரண்டு வந்திருந்த மக்கள் கூட்டத்தில் தானும் ஒருவராக வந்து நின்று திருமுழுக்குட்பட்டதும், பரிசுத்த ஆவி இயேசு பெருமானின் சிரம்மீது வந்து அமர்ந்திருந்த அந்தக்காட்சி யோவானின் மனக்கண்ணில் தென்பட்டது. இறைவனுக்கு நன்றி கூறினார்.

இயேசுபிரான் எவ்வளவோ போதனைகளைச் செய்த போதிலும் அப்போதனைகளுக்கேற்ப வாழ முற்பட்டோர் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டனர். இறைவனால் மக்களுக்காக அருளப்பட்ட கருத்துக்களிக்க மறுத்த நாடுகளும் நகரங்களும் எதிர்காலத்தில் பல சோதனைகட்கும் உட்படுவர், என்று சாபமிட்டார்.

வயல் வெளியினூடே சென்று கொண்டிருந்தார். அவருடன் சென்று கொண்டிருந்தவர்களில் சிலர் முற்றியிருந்த வாற்கோதுமைக் கதிர்களைப் பறித்து உண்ணத் தொடங்கினர். இதனை அவதானித்த பரி சேயர்கள் பதறினர். இயேசுபெருமானிடம் ஓடிச்சென்று, ஓய்வு நாளில் செய்யத் தகாத செயலில் இவர்கள் ஈடுபடுகின்றனரே!" என்றனர். இதற்கு இயேசு பிரான் மற்றுமொரு உவமையை எடுத்துக்கூறி அவர்களுடைய வாயை அடைத்தார்.

முன்பு ஒரு தடவை தாவீது இறை இல்லத்துள் சென்று அவரும் அவருடன் இருந்தவர்களும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட அப்பங்களை உண்டனர். அப்போது பசியால் வாடிய அவர்களுக்கு அந்த அப்பங்கள் அவசியம் தேவைப்பட்டது. இக்கூற்றினை இயேசுபிரான் எடுத்துக் கூறி, "ஓய்வு நாட்களில் கோவிலில் குருக்கள் பணியாற்றுவதையும் திருச்சட்டத்தை மீறும் செயல் என்பீர்களா?" என்று வினவினார். "ஓய்வு நாளும் மனிதனுக்குக் கட்டுப்பட்டதே!" என்றார்.

இத்தகைய வினாவை இயேசுபிரானிடம் கேட்டவர்கள் பரிசேயர்களால் அனுப்பி வைக்கப்பட்ட ஒற்றர்களே. அவர்கள் தங்களை ஏவியவர்களிடம் சென்று நடந்த சம்பவத்தை விவரித்தனர். இயேசுவை இவ்வாறு விட்டு

வீட்டுக்குள் நுழைந்து அவருடைய பொருள்களைக் கொள்ளையிட முடியும், அவரைக் கட்டிவைத்த பிறகுதான் அவருடைய வீட்டைக் கொள்ளையிட முடியும். என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார். என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறச் செய்கிறார். எனவே நான் உங்களுக்குச் சொல்கிறேன். தூய ஆவிக்கு எதிரான பழிப்புரை மன்னிக்கப் படாது. மக்களுடைய மற்றப்பாவங்கள், பழிப் புரைகள் அனைத்தும் மன்னிக்கப்படும். மானிட மகனுக்கு எதிராய் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லிவிட்டவரும் மன்னிக்கப்படுவார். ஆனால், தூய ஆவிக்கு எதிராகப் பேசுவோர் இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்புப் பெறமாட்டார்.

### மரமும் கனியும்

"மரம் நல்லது என்றால் அதன் கனியும் நல்லதாக இருக்கும். மரம் கெட்டது என்றால் அதன் கனியும் கெட்டதாக இருக்கும். மரத்தை அதன் கனியால் அறியலாம். விரியன் பாம்புக் குட்டிகளே, தீயோர்களாகிய நீங்கள் எவ்வாறு நல்லவை பேச முடியும்? உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும். நல்லவர் நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை வெளிகொணர்வர். தீயவரோ தீய கருவூலத்திலிருந்து தீயவற்றையே வெளிகொணர்வர். மனிதர் பேசும் ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் தீர்ப்பு நாளில் கணக்குக் கொடுக்கவேண்டும் என உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் வார்த்தைகளைக் கொண்டே நீங்கள் குற்றமற்றவர்களாகக் கருதப்படுவீர்கள்; உங்கள் வார்த்தைகளைக் கொண்டே குற்றவாளிகளாகவும் கருதப்படுவீர்கள்."

# போதனைகளில் பொதிந்த உவமைகள்!



### இளைப்பாறுதல்

இயேசுபிரான் தன்னைச் சூழ்ந்து நின்ற மக்களிடம் தன் போதனைகளைக் கூறத் தொடங்கினார். இளைப்பாறுதல் என்ற கருத்தில் அவர் வழங்கிய கருத்துக்கள் இவை!

"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம் என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாயுள்ளது." என்றார்.

அன்று ஒய்வுநாள். அங்கிருந்த தொழுகைக் கூடத்திற்குள் இயேசுபிரான் சென்றார். சூம்பிய கையுடன் ஒருவர் அக்கூடத்துள் அமர்ந்திருந்தார். இயேசுபிரான் அங்கு வருவதைக் கண்டதும் எழுந்து மரியாதை செய்ய முயன்றார். ஆனால் அவரால் முடியவில்லை. இதனைக் கண்ணுற்ற இயேசு அம்மனிதரை அணுகினார். "உமது கையை நீட்டும்!" என்றார். அந்த மனிதரும் எந்தவிதமான தங்கு தடையுமின்றித் தன் கையை நீட்டினார். சுற்றியிருந்தவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ஏதோ மாபெரும் குற்றத்தை இயேசு பிரான் இழைத்துவிட்டதாகச் சிலர் இயேசு பிரானை அணுகினர். "ஓய்வு நாளான இன்று இத்தகைய செயலில் ஈடுபடுவது தவறல்லவா?" என்று வாதிட்டனர்.

### ஓய்வு நாள்

இயேசுபிரான் இவ்வாறு கூறினார்:

'உங்களிடமுள்ள ஆடுகளில் ஒன்று தவறி ஒரு குழியில் விழுந்துவிட்டால், ஓய்வு நாள் என்பதற்காக அந்த ஆட்டை குழியிலிருந்து மீட்டெடுக்காமல் அப்படியே விட்டு விடுவீர்களா? ஆடுகளைவிட மனிதர்கள் மேலானவர்களல்லவா?" என்று கேட்டார். அவர்களால் பதிலேதும் உரைக்க முடியவில்லை.

அன்றைய தினமே இயேசுபிரான் ஒரு

விட்டால் தம்மைப் போன்றவர்களின் போலி வேடம் வெகு சீக்கிரத்திலேயே வெளிப்பட்டு விடும் என்று கருதினர். இயேசுவை எப்படியாவது ஒழித்துக் கட்டிவிட வேண்டும்! என்று திட்டமிடத் தொடங்கினர்.

கண்பார்வை இழந்தவரும் வாய்பேச முடியாதவருமான ஒருவரை இயேசு பிரானிடம் அழைத்து வந்தனர். அவரை இயேசுபிரான் பூரண குணமாக்கினார். இதனைக் கண்ட பரிசேயர்களும் அவர்களுடைய சகாக்களும், "பேய்களின் தலைவனாகிய பெயல் செபூலைத் தன் வசமாக வைத்துக்கொண்டே, இம்மனிதர் பேய்களை விரட்டுகிறார்!" என்று கூறினார்கள். இக்குறிப்புரை இயேசுபெருமானின் செவிகளுக்கு எட்டியது.

இயேசுபிரான் இவ்வாறு தெரிவித்தார்.

**இராஜகுமாரன்**

### பேய்களின் தலைவன்

"தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப் போகும். அவ்வாறே தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த நகரமும் வீடும் நிலைத்து நிற்காது. சாத்தான் சாத்தானையே ஓட்டினால் அவன் தனக்கு எதிராகத் தானே பிளவுபட்டுப் போவான். அப்படியானால் அவனது அரசு எப்படி நிலைத்து நிற்கும்? நான் பெயல் செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறேன் என்றால் உங்களைச் சேர்ந்தவர்கள் யாரைக் கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்? ஆகவே அவர்களே உங்கள் கூற்றுத் தவறு என்பதற்குச் சாட்சிகள். நான் கடவுளின் ஆவியைக் கொண்டே பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா? முதலில் வலியவரைக் கட்டினாலன்றி எப்படி அவ்வலியவருடைய

### அடையாளம்

இயேசு எங்கெங்கெல்லாம் சென்றாரோ அங்கெல்லாம் மறைநூலறிஞர் என்று தம்மைப் பற்றிப் பெருமை கொள்வோரும் பரிசேயரும் சென்றனர். சில இடங்களில் இவர்களால் ஏவப்பட்ட ஏவலாளர்களும் சென்றனர். இயேசு பிரானின் நடவடிக்கைகளில் குற்றங் குறை கண்டுபிடிப்பதே இவர்களுடைய பணியாக விருந்தது. தங்களுடைய ஏமாற்று வேலைகளுக்கு இடையூறாக இம்மனிதர் இருக்கிறாரே என்பதனால், அவரை ஒழித்துக் கட்டுவதற்கான சான்றுகளைத் தேடிக்கண்டு பிடிப்பதே அவர்களுக்கு தலையாய கடமையாக விருந்தது.

இயேசு பெருமானை அணுகிய இவர்களில் சிலர்: போதகரே! நீர்தான் உண்மையில் மேய்ப்பரானால் அதற்கான அடையாளத்தைக் காட்டுவீரா?" என்று கேட்டனர். இவ்வினா இயேசு பிரானுக்குச் சற்று எரிச்சலைக் கிளப்பி விட்டது என்பதை அவர் அளித்த பதிலிலிருந்தே எம்மால் காண முடிகிறது.

"இந்தத் தீய விபசாரத் தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு இறைவாக்கினரான யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது. யோனா மூன்று பகலும் மூன்று இரவும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தார். அவ்வாறே மானிட மகனும் மூன்று பகலும் மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார். தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து, இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால், இங்கிருப்பவர் யோனாவைவிடப் பெரியவர் அல்லவா! தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக் கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா!"

### தீய ஆவி திரும்பிவருதல்

"ஒருவரைவிட்டு வெளியேறுகின்ற தீய ஆவி வறண்ட இடங்களில் அலைந்து திரிந்து இளைப்பாற இடம் தேடும். இடம் கண்டுபிடிக்க முடியாமல் நான் விட்டு வந்த எனது வீட்டுக்குத் திரும்பிப் போவேன்' எனச் சொல்லும். திரும்பி வந்து அவ்வீடு கூட்டி அழகுப்படுத்தப்பட்டு யாருமின்றி இருப்பதைக் காணும். மீண்டும் சென்று தன்னைவிடப் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடு அழைத்து வந்து அவருள் புகுந்து அங்கே குடியிருக்கும். அவருடைய பின்னைய நிலைமை முன்னைய நிலைமையைவிடக் கேடுள்ளதாகும். இத்தலைமுறைக்கும் இவ்வாறே நிகழும்."

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு-ஆ] 10 விடை:** ☛ **போலி இறைவாக்கினர்**

**பரிசு பெறுவோர்:**

1. **கு. கலைச்செல்வி,** இல.80 உக்குளாங்குளம், வவுனியா
2. **ஜெ. புஸ்பமலர்,** கோணாவில் றோட், அக்கரயான் குளம், கிளிநொச்சி.
3. **ஏ.எஸ். நஸ்ரின்,** 2ம் குறுக்கு, கொழும்பு வீதி, ரத்மல்யாய,புத்தளம்.
4. **கிருஸ்ணபிள்ளை ரவி,** மில்லடி ஒழுங்கை, வீரமுனை-02,சம்மாந்துறை.
5. **பி. திலுஷாந்தி வாஸ்** 58/1,செலர் ஒழுங்கை, சென் செபஸ்டியன் வீதி, மட்டக்களப்பு.

**திருமறை [பு.ஆ] 13** வினா :- **பேய்களின் தலைவனின் பெயரைத் தருக?**

ஆகஸ்ட் 21 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.13—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**


5 வது வெற்றிகரமான வருடம்!

வாக்குறுதி

(ஈஸ்மென்ட் கலர்)

முழு நீள நகைச்சுவை சித்திரம்

காணத்தவறாதீர்கள்! களிக்க மறவாதீர்கள்




# வாக்குறுதி சினிமா விமர்சனம்

கடந்த ஐந்து வருடமாக 'வாக்குறுதி' திரைப்படம் ஓடிக்கொண்டிருப்பதே ஒரு சாதனை என்பது ஐயந்திரிபற்றது.

சிறந்த நடிப்புத் திறமை மட்டும் இருந்தால் கதை நன்றாக இல்லாவிட்டாலும் தாக்குப் பிடிக்கலாம் என்பதற்கு இத்திரைப்படம் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

போர் ஓசையும் ஒப்பாரியும் கலந்த பின்னணி இசை படத்தின் வெற்றிக்கு கை கால் முக்கு முகரக்கட்டை போன்ற சகல உறுப்புக்களையும் கொடுக்கிறது.

தமிழ்க் கட்சிகள் தோன்றும் ஒவ்வொரு காட்சியும் கண்களில் ஜலம் வருமளவுக்கு சிரிக்க வைக்கின்றன.

படத்தின் கதை என்னவென்று அறியும் அவா உணர்ச்சியில் உந்தப்பட்டிருப்பீர்கள். இதோ கதை கேளீர்.

ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராணி. அந்த ராணியின் ராஜாங்கத்தில் சில புரோக்கர்கள் இருக்கின்றனர்.

ராணிக்கும் மக்களுக்கும் இடையே ஓடித்திரிந்து, இருபகுதிக்கும் மத்தியில் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதாக கூறி பெயர் பெறுவதும், ராணியிடம் காணிக்கைகள் பெறுவதுமே புரோக்கர்களது வேலை.

ஒரு காட்சியில் ராணி வெற்றிலை மென்று கொண்டிருப்பார். புரோக்கர்களாக தோன்றும் தமிழ்க் கட்சிகள், ராணியின் வாயசைவுக்கு ஒவ்வோர் அர்த்தம் கற்பித்து புளகாங்கிதம் கொள்வார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் வரப்போகிறதாம் என்பார் ஒருவர். சேச்சே மந்திரிப் பதவி தரப்போகிறாராம் என்பார் இன்னொருவர். மக்களுக்காக கப்பல் விடப்போகிறார்கள் என்பார் மூன்றாமவர். கோடி கோடியாக நிதி ஒதுக்கப்படும் குறைகள் யாவும் தீரும் என்று உரைக்கிறார் என்பார் நாலாவது புரோக்கர்.

பின்னர் இதனையே பத்திரிகையாளர்களுக்கு புரோக்கர்கள் சொல்வதும், அதனை நம்பி பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் போடுவதும் வயிறு குலுங்கக் குலுங்க சிரிக்க வைக்கும் காட்சிகள்.

'நாம் பேச நினைத்ததெல்லாம்
அவர் பேசி விட்டார்.
அவர் பேச நினைத்ததெல்லாம்
நாம் சொல்லிவிட்டோம்...! என்ற பாடலுக்கு மக்கள் விழுந்து விழுந்து சிரிப்பதால் திரையரங்கமே சிரிப்பரங்கமாக மாறுகிறது.

இறுதிக் காட்சியில் பொறுக்க முடியாத பொது மக்கள் பொல்லுகள், தடிகளோடு புரோக்கர்களை துரத்தி வருகிறார்கள். ராணியிடம் ஓடிச்சென்று புரோக்கர்கள் புகலிடம் கோருவார்கள்.

அப்போது ராணி உதைப்பாரே ஒரு உதை. அதுதான் திருப்பக் காட்சி. அப்போது ராணி பேசும் வசனம் அபாரம்;

"நான் சொல்லாத வார்த்தைகளை என் பெயரால் உம் மக்களிடம் கூறியது குற்றம்! என் பெயரை பயன்படுத்தி, என் பெயரால் உத்தரவாதங்கள் வழங்கியது இன்னொரு குற்றம்! நான் வாயசைத்தபோதெல்லாம் அதனை நீவீர் விரும்பும் வாக்குறுதியாக கற்பனை பண்ணியதும், அதனை மக்களிடம் விற்பனை செய்து வாக்கு இலாபம் பெற நினைத்ததும் குற்றத்திலும் குற்றம்!"

ராணி இவ்வாறு சீற்றத்தோடு பேசிக் கொண்டிருக்கையில், புரோக்கர்கள் புலம்புவதை கமரா குளோசப்பில் காண்பிக்கும் பாங்கு ஒளிப்பதிவின் நேர்த்திக்கு சான்று.

இறுதியில் திரையில் காண்பிக்கப்படும் பொன்மொழி இத் திரைப்பட இயக்குநரின் சமூகப் பொறுப்புக்கு தக்க சான்றென்பதில் ஐயமில்லை.

அப் பொன்மொழி இதுதான்;

'சிலரை பலகாலம் ஏமாற்றலாம். பலரை சில காலம்தான் ஏமாற்றலாம்!"




காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com
Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)



அருள் ஜுவலர்ஸ்
AROL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO-11
செட்டியார் தெரு. கொழும்பு 11
436331

# சிகிச்சை



> இக்காலத்தை கணனி (கம்பியூட்டர் யுகம்) என்று கூறுவார்கள். இதனை லேசர் (ஒளிக்கீற்று) யுகம் என்று கூறினாலும் மிகையாகாது. சகல துறைகளிலும் கணனி இன்று அரசோச்சுகிறது. அதேபோல் மருத்துவ உலகில் இன்று லேசர் ஒளிக்கதிர் மாபெரும் சாதனைகளை நிலை நாட்டியுள்ளது.

'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்பதுபோல் கத்தியால் வெட்டாமல் இரத்தம் ஒரு துளிகூடச் சிந்தாமல் சத்திரசிகிச்சைகளை மனித உடம்பில் எந்தப் பாகத்திலும் செய்து முடிக்கிறது லேசர் எனும் ஒளிக்கீற்று சிகிச்சைமுறை.

உடலில் எந்தப் பாகத்திலாவது கத்தியால் வெட்டி சத்திரசிகிச்சை மேற்கொள்ளும்போது சதை, தசைநார்கள், நரம்புகள் மற்றும் உயிர்மம் ஆகியவை சிதைக்கப்படும். இரத்தப் பெருக்கு ஏற்படுவதும் தடுக்க முடியாது.

இப்பொழுதெல்லாம் கண்களில் ஏற்பட்டிருக்கும் புரைநோயின் மிக மென்மையான படலத்தைக்கூட மிகச் சாதுரியமாக உரித்தெடுக்கவும் லேசர் எனும் ஒளிவீச்சு பயன் படுத்தப்படுகிறது.

உடலினுள்ளே சதை, தசை, நரம்புகள் ஆகியவற்றுடன் ஒட்டியிருக்கும் எலும்பையே அறுத்து சிகிச்சை அளிக்க லேசர் பயன்படுத்தும் முறை நடைமுறைக்கு வந்துவிட்டது.


பிரிட்டினின் மாஞ்செஸ்டரிலுள்ள ஹோப் மருத்துவமனை மருத்துவ நிபுணர்களும், மாஞ்செஸ்டர் பல்கலைக்கழக உடற்கூற்றுவியலாளர்களும் இணைந்து வடிவமைத்த எலும்பை வெட்டும் லேசர் சாதனத்தைப் பயன்படுத்தி எலும்பை அறுக்கும் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள். 1995ம் ஆண்டின் இறுதியில் இச்சிகிச்சை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.

இவ்வாறான சிகிச்சை உலகில் நடந்தது இதுதான் முதல் தடவை. இது உலக சாதனை.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

# முதியது



A அமெரிக்காவின் ஒன்பதாவது மாநிலமாக நியூஹெம்ஷ்ஃபியர் இணைக்கப்படுவதற்காக உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பின் அமைப்பினையே இங்கு பார்க்கிறோம். 1788 மார்ச் மாதம் 4ம் திகதி இயற்றப்பட்டு 1789 ஜூன் 21ம் திகதி அமுலாக்கப்பட்ட இந்த ஆவணம் எந்தவிதமான மாற்றமும் இன்றி கடந்த 110 ஆண்டுகளாக அமுலிலிருந்து வருகிறது.

தற்காலத்தில் அமுலில் உள்ள மிகப் பழைய அரசியல் யாப்பு என்ற உலக சாதனையையும் இந்த யாப்பு படைத்துள்ளது.

# அதிஷ்டம்




> அதிஷ்டத்தை அள்ளிக் கொட்டும் விளையாட்டுக்களில் சூதாட்டமும் ஒன்று. இதில் பலதரப்பட்ட சாதனைகள் உள்ளன. சூதாட்ட மேசைகளில் சிலவற்றில் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏதாவது ஓர் இலக்கத்தைத் தெரிவு செய்து, ஒரு ஊசியைச் சுழல விட்டுவிடுவார்கள்.

அந்த ஊசி எந்த இலக்கத்தில் வந்து தரித்து நிற்கிறதோ, அந்த இலக்கத்தில் பணம் கட்டியவர், ஏனையோர் வெவ்வேறு இலக்கங்களில் கட்டிய முழுப்பணத்தையும் தனது சொந்தமாக்கிக் கொள்வார்.

அமெரிக்காவில் நியூயோர்க் ஹொட்டலில் உள்ள காசினோவில் 1997 ஏப்ரல் மாதம் 14ம் திகதி 'ஜாக்பொட்' இயந்திர சூதாட்டத்தில் அமோக வெற்றியீட்டிச் சாதனை படைத்தார் சுஸானே ஹென்லி என்னும் பெண்மணி.

இவர் 46 வது சுற்றில் தனது அதிர்ஷ்டத்தைப் பரிசோதித்தார். வெற்றியும் கண்டார். அவருக்குக் கிடைத்த ஜாக்பொட் தொகையைக் கேட்டால் தலை சுற்றும். 12.51 மில்லியன் டொலர். (87 கோடியே 57 இலட்சம் ரூபாய்)

அப்பெருந் தொகையான காசோலையுடன் வெற்றிக் களிப்பில்- காட்சி தருகிறார் சுஸானே ஹென்லி.

பின்னே 'களிப்புக்கு' பஞ்சமா? உலகிலேயே இதுவரை வெல்லப்பட்ட ஜாக்பொட் பரிசில் அதிகூடிய தொகை இதுதான். பணம் கிடைத்த தோடு உலக சாதனை படைத்த பெருமையும் சேர்ந்து விட்டதே. இரட்டிப்பு சந்தோசம்!

# நீரோட்டம்



A இங்கே நீச்சலடிப்பது யார் தெரியுமா? அடர்த்தியான மென்மையான மயிர்களையுடைய உடலமைப்பைக் கொண்ட ஒருவகை எலிகள். இவை வட அமெரிக்காவில் உள்ளன. ஏனைய எலிகளைப் போல் இவை நிலத்தில் மட்டும் வாழும் பிராணிகள் அல்ல. பெரும்பாலும் நன்னீர் ஏரிகளில் இவை வாழுகின்றன.

கைகளும் கால்களும் தவளைகளுக்குள்ளதைப்போல் ஒருவகை சவ்வாலான சதையால் இணைக்கப்பட்டிருப்பதால், இவை கணவேகத்தில் நீரில் நீச்சலடிக்கக்கூடியன.

நீர் நிலைகளில் கரையில்- நிலத்தில் கூடுகளை அமைக்கும் இந்த எலிகள் அக்கூடுகளின் வாயிலை நீருக்கடியிலேயே வைத்திருக்கும். நீருக்கடியில் வாயில் அமைக்கப்பட்டாலும் கரையிலுள்ள கூடுகளுக்குள் நீர் புகாவண்ணம் கூடுகளை அமைத்துவிடுகின்றன. நீரில் கண வேகத்தில் நீந்திச் செல்லும் எலியின் படம் இது.

# மறுப்பு




< 'இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக விருப்பமா?' என்று தெரிவுக்குழு கேட்டபோது மறுத்து விட்டார் 28 வயதான ஜடேஜா.

அசாருதீனின் மனம் புண்படும் என்பதற்காகவே கப்டன் பதவியை உறுதியாக நிராகரித்தார் ஜடேஜா. இப்போது அப்பதவி டெண்டுல்கரிடம்.

170க்கும் மேற்பட்ட போட்டிகளில் விளையாடி 4500க்கு மேற்பட்ட ஓட்டங்களை குவித்திருக்கிறார். 6 சதங்களும் அடக்கம். சமீபத்திய உலகக் கோப்பையிலும் ஒரு சதம் போட்டார். பந்து வீச்சு, பந்து தடுப்பு இரண்டிலும் சூரர்.

இப்போது இல்லாவிட்டாலும் எப்போதாவது ஒருநாள் இந்திய அணிக்கு கப்டன் இவர்தான். பதவி தேடிவரும்.

அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில்
'கார்த்திகன் கோல் டெலிபோன் காட்'
இலங்கைக்கு 18 நிமிடம் பேசுவதற்கு, 10 கனேடியன் டொலர் மட்டுமே!
மேலதிக விபரங்களுக்கு:
தொ.பே.இ: (416) 461-3456
தொ.நகல்.இ: (416) 461-8621

# 4வது பிறந்தநாள் வாழ்த்து

**14.08.1999**

**செல்வி அபிநயா கெங்காதரன்**



இணுவில் கிழக்கு அங்கிலிப்பாயைச் சேர்ந்த கெங்காதரன்-சிவநந்தினி தம்பதியின் செல்வப் புதல்வி அபிநயா தனது நான்காவது பிறந்தநாளை 14.08.1999 அன்று சுவிஸ் சூரிச் நகரிலுள்ள தமதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அன்புத் தங்கை அபிராமி, இணுவில் அப்பம்மா, பெரியவிளான் அம்மப்பா, அம்மம்மா, சுவிஸ், பெரியப்பா, பெரியம்மா, நிரோசன் அண்ணா, நிலா அக்கா, நிசந்தன், சுவிஸ் காசிச்சித்தப்பா, விஜிதா அன்ரி, ஜேர்மனி சிவானந்தன் மாமா, சுவிஸ் அகிலன் சித்தப்பா, றஞ்சா அன்ரி, சுவிஸ் சிவகுமார் மாமா, சுகந்தா அன்ரி, சுவிஸ் சிறிமாமா, நந்தினி அத்தை, சுகன்ஞா மச்சாள், சுன்னாகம் பெரியப்பா குடும்பத்தினர், சுபத்திரா அக்கா, புகிர் அண்ணா, ஊரிக்காடு பெரியத்தை குடும்பத்தினர், சுபா, சுதர்சன், சுமித்திரா, சுஜி மச்சான்மார், கலா அத்தை, மாமா குடும்பத்தினர், கௌரி அத்தை குடும்பத்தினர், விலாகரன், வேணுகா, மிதுலா மச்சான்மார், வதனி, சிவா, உதயா, துளசி அத்தைமார், முகுந்தன் சித்தப்பா இலண்டன் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் அபிநயா குட்டியை இணுவில் சிவகாமி அம்பாள் மாணிக்க வைரவர் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் அப்பா, கெங்காதரன், சூரிச் (சுவிஸ்)



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பாற, தாவலையில் உள்ள சமனல அச்சகத்தில் ஆகஸ்ட் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.